122

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



க.பரணீதரன்
கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன்
தி.ரிலக்ஷன்
சி.சிவசேகரம்
இ.ஜீவகாருண்யன்
இதயராகன்
ஆனந்தி
மா.சிவசோதி
கொற்றை பி.கிருஷ்ணானந்தன்
க.சட்டநாதன்
இ.சு.முரளிதரன்
பொலிகையூர் சு.க.சிந்துதாசன்
யாழவன்
கந்தர்மடம் அ.அஜந்தன்
எஸ்.சிவசேகரம்
சோ.ப.
நூருள் அயின் நஜ்முல் ஹுசைன்
எம்.கே.முருகானந்தன்
ஜெ.சற்குணராசா
வாகரை வாணன்
சுசிதமிழ்நிலா

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2018 - கார்த்திகை

# பொருளடக்கம்




சிறுகதைகள்

இதயராசா - 07
ஆனந்தி - 22
மா.சிவசோதி - 29

கவிதைகள்

இ.சு.முரளிதரன் - 11
பொலிகையூர் சு.க.சிந்துதாசன் - 15
யாழவன் - 24
கந்தர்மடம் அ. அஜந்தன் - 24
எஸ்.சிவசேகரன் - 25
சோ.ப - 32
வாகரை வாணன் - 48
சுசிதமிழ்நிலா - 48

குறுங்கதை

கொற்றை பி. கிருஷ்ணானந்தன் - 16

பத்தி எழுத்து

கே.எஸ்.சிவகுமாரன் - 41

நூல் விமர்சனம்

எம்.கே.முருகானந்தன் - 33
ஜெ.சற்குருநாதன் - 45

நேர்காணல்

நூருள் அயின் நஜ்முல் ஹுசைன் - 26

தொடர் நாவல்

க.சட்டநாதன் - 31


அட்டைப்படம்

த.ரிலக்சன்

கட்டுரைகள்

இலக்கியத்தின் பல்துறைகளில் பிரகாசித்த நட்சத்திரம்: இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
க.பரணீதரன்- 03


தொல்காப்பியமும் அரிஸ்டோடலின் கவிதையியலும் ஓர் ஒப்பு நோக்கு
கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன் - 12


ஈழத்து ஓலைச் சுவடி ஆவணப்படுத்தலும் பாதுகாப்பும்
தி.ரிலக்சன் - 17

தமிழாக்கக் கோளாறுகள்
சி.சிவசேகரம் - 37

குறுக்கும் நெடுக்குமாய்
இ.ஜீவகாருண்யன் - 43

# ஜீவநதி

## 2018 கார்த்திகை இதழ் – 122

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C -.8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



### ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 1500/=
வெளிநாடு – $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## வேற்றுமையில் ஒற்றுமை

உலகு பல்வகை வேறுபாடுகளைக் கொண்டது. இவ்வேறு பாடுகள் காரணமாக பல வகையான இன்னல்களையும் உலக மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். நாடுகளுக்கிடையேயும், இனங்களுக்கிடையேயும், மதங்களுக்கிடையேயும் போட்டிகளும் பூசல்களும் நிறைந்தே உலகு காணப்படுகின்றது. இவ்வாறான போட்டிகளும் பூசல்களும் பல்வேறு வகையான அழிவுகளையும் நாசங்களையும் கூட மனித குலத்துக்கு விளைவித்து வருவதும் நிதர்சனமானது. ஆனாலும் இவ்வேறு பாடுகள் இயல்பானவை தவிர்க்க முடியாதவை.

உலக இயக்கத்தில் மனித குல வாழ்வு என்பது பிரதான மானது. மனித குலத்துக்கு அழிவு என்றதும் அது அனைத்து உலகினதும் கவனத்தை ஈர்த்துக் நிற்கின்றது. மனித நடவடிக்கை களினால் இயற்கைச் சமநிலை குலையும் போது இயற்கையே தன்னைச் சமநிலைப்படுத்திக்கொள்ளும் என்பது வரலாறு கண்ட உண்மை. இச் சமநிலைப்படுத்தலின்போது பல அனர்த்தங்கள் இடம் பெறலாம். அவை மனித குல வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமையலாம். ஆனால் எதிர்கொள்வதற்கும் உலகு தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அதேவேளை இயற்கையின் சமநிலையைக் குழப்பும் நடவடிக்கைகளையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்நிலையில் தான் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்ற இந்நாளின் மகுட வாசகம் அர்த்தம் பெறும். வேற்றுமையில் ஒற்றுமை என்பது நாடுகளுக்கிடையேயும் இனங்களுக்கிடையேயும் மதங்களுக்கிடையேயும் மாத்திரம் ஏற்படுத்தப்பட வேண்டியது அன்று; மக்களுக்கிடையேயும் கூட ஏற்பட வேண்டும். இதனையே “சமூக நல்லிணக்கம்”(Social Harmony) என அழைப்போமாயின், இந்த நல்லிணக்கம் ஏற்பட நாம் எல்லோரும் பாடுபட வேண்டும். இதனால், இன்று தோற்றுவிக்கப் படுகின்ற சித்து விளையாட்டுக்களையும் மாயைகளையும் கூட மக்கள் வெற்றிகொள்ள முடியும்.

- க.பரணீதரன்

### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி.
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
செட்டித்தெரு பூபாலசிங்கம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி

# இலக்கியத்தின் பல்துறைகளிலும் பிரகாசித்த நட்சத்திரம் : இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

க.பரணீதரன்.



"சமூக வினைப்பாட்டியல் (social Activism) துறையிலே பன்முக எழுத்தாக்கங்களைப் படைத்து வருபவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன். ஒடுக்கப்பட்டோர், விளிம்புநிலையினர், சமூக நீதி கிடைக்கப்பெறாதோர் ஆகியோரைத் தமது அனுபவங்கள் வாயிலாகக் கலை இலக்கிய வெளிக்குக் கொண்டு வருபவர்."

- பேராசிரியர் சபா. ஜெயராசா -

ஈழத்து இலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாணத்தில் உள்ள இணுவிலில் பிறந்த இலக்கிய படைப்பாளர்களது இலக்கியதடம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது. ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு இந்த மண்ணில் தோன்றிய பல படைப்பாளிகள் உரம் சேர்த்துள்ளார்கள். அந்தவகையில் இணுவிலில் *1954.5.29* இல் சிதம்பரநாதபிள்ளை அவர்களுக்கு மகனாக பிறந்தார் திருச்செந்திநாதன். தனது இளமைக்காலத்தில் சில ஆண்டுகள் தந்தையாரின் தொழில் நிமித்தம் மன்னாரில் வசித்த இவர், மன்னார் சித்திவிநாயகர் பாடசாலையில் தரம் 7 வரை கற்று பின்னர் யாழ் ஸ்கந்தவரோதயாகல்லூரியில் தரம் 7 முதல் 11 வரை கற்று உயர்தரக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வணிகத்துறையில் பெற்றார். உயர்தரம் கற்று சில காலத்திலே அரசாங்க சேவையில் இணைக்கப்பட்ட இவர் தொழில் பார்த்துக் கொண்டே வெளிவாரியாக கற்று வணிகத்துறையில் ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றுக் கொண்டார். சைவப்புலவர் க.செல்லத்துரை அவர்களிடம் தமிழைக் கற்ற இவர் தமிழ் மீது பற்றும் ஆவலும் கொண்டிருந்தார். இவரது தந்தையார் மேடை நாடகங்களை அண்ணாவியம் செய்தும் கதாப்பிரசங்கங்களையும் வில்லுப்பாட்டு மேடை நிகழ்வுகளை மேற்கொண்டும் வந்தார். இதனால் கலைகள் மீது இவருக்கு இயல்பாகவே ஆர்வம் ஏற்பட்டது. சிறுவயதிலேயே நாடகங்கள் சிலதை இவர் எழுத ஆரம்பித்தார். 1986 இல் திருமணம். காதல் திருமணம் செய்து கொண்ட இவர் மனைவி மீது அளவற்ற பற்றும் மதிப்பும் வைத்திருந்தார். பிரம்மச்சரியத்தில் தன்னை பெற்று வளர்த்த தாய் தனது வளர்ச்சிப் பாதையில் முக்கியமான இடத்தை வகித்தார் எனவும் திருமணத்தின் பின் தனது ஒவ்வொரு இயக்கத்திலும் தனக்கு உறுதுணையாக தனது மனைவி இருந்தார் எனவும் குறிப்பிடும் இவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் மனைவியாரை இழந்து துக்கக் கடலில்

மூழ்கி இருந்தார். நல்லதொரு மனிதராய், பழகும் மனிதர்களுக்கு இனியராய் விளங்கிய எழுத்தாளர் இணுவையூர் திருச்செந்திநாதன் அவர்கள் அண்மையில் மறைந்தது ஈழத்து இலக்கிய உலகிற்கு பாரிய இழப்பேயாகும். சிறுகதை, நாவல், விமர்சனக் கட்டுரை, நாடகம், நூற்பதிப்பு, சஞ்சிகைவெளியீடு என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் தன் ஆளுமையைப் பதித்துச் சென்ற அவரது இலக்கியப் பணியை இக்கட்டுரையூடாக பார்ப்போம்.

1972 மித்திரனில் எழுதிய "காதலோ காதல்" என்ற சிறுகதையுடன் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர் வீரகேசரியில் 1974 தொடக்கம் 1999 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் 45 சிறுகதைகளை எழுதியுள்ளார். வீரகேசரியில் கட்டுரைகள், கடிதங்கள் என பலதை எழுதியுள்ளார். அந்த வகையில் தனது இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய வீரகேசரி பத்திரிகை மீது சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் பெரும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். இவரால் எழுதப்பெற்ற "தேவயானி", "சுக்கிராச்சாரியார்", "அரங்கேற்றம்" போன்ற நாடகங்களும் இவரது நாடக அறிவையும் ஆளுமையையம் புலப்படுத்துகின்றன. 150 சிறுகதைகள் வரையில் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள் தொகுப்புகளாகவும் வெளிவந்துள்ளன.

1.வெட்டுமுகம்(1993)

2.என்னுடையதும் அம்மாவினதும்(1998)

3.மணல்வெளிஅரங்கு(2002)

4.மருத்துவர்களின் மரணம்(2016)

ஆகியசிறுகதைத்தொகுதிகள் வெளியாகியுள்ளன.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான "வெட்டுமுகம்" தேசியகலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக 1993 இல் வெளியானது. இத்தொகுப்பில் உள்ள பல கதைகள் வாயிலாக யாழ்ப்பாணத்து மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்த மக்களின் வாழ்நிலைகளை சித்திரித்துள்ளார். கோஷமும் வேஷமும், ஆரோகணம் அவரோகணம், முகமூடி மனிதர்கள், குட்டையும் மட்டைகளும் ஆகியவை யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் போலிகளாக வாழும் மனிதர்களின் போலித்தனங் களையும் அவர்களால் சமூகத்தின்மீது ஏற்படுத்தப் படும் அசௌகரியங்களையும் அவர்களது அநாகரிகச் செயல்களையும் வெளியுலுகிற்கு காட்டும் வண்ணம் புனையப்பட்டுள்ள கதைகளாக காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து திருமணங்களில் பெரிதும் எதிர் பார்க்கப்படும் சீதனத்தை மையப்படுத்தி "சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம்" கதையை புனைந்துள்ள கதாசிரியர், போர்ச் சூழலால் ஏற்பட்ட அவல நிலைகளை முன் வைத்து, "எந்தையும் தாயும்", "வீட்டை மட்டுமல்ல" கதைகளை இயல்பாக படைத்துள்ளார். யாழில் நடை பெறுகின்ற வேலி எல்லைச் சண்டைகளை கேலியும் கிண்டலுமாக நயக்கும் கதையாக "காணிக்கு வேலி உண்டு" கதையையும், நாட்டுப் பிரச்சினைகள் காரண மாக புலம் பெயர்ந்துவாழும் ஒருவன் என்றாவது ஒருநாள் நாடுதிரும்புவேன் என்ற மன அங்கலாய்ப்புடன் புலம் பெயர் தேசத்தில் வாடும் கதையாக "வெட்டுமுகம்" கதையையும் எழுதியிருக்கின்றார். "என்று மடியும் எங்கள்...?" கதையும் ஈழப்போராட்ட காலத்தில் தமிழ் பெற்றோர்கள் அடையும் அவலத்தையும், மன ஏக்கங்களையும் துன்பத்தையும் எடுத்தியம்புகின்றது. "மண் வாசனை" கதை சமூகத்து அபிப்பிராயங்களுக்கும் தனி மனித உணர்வுக்கும் இடையிலான முரண்பாட்டு நிலையை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ள கதையாக காணப்படுகின்றது. இத்தொகுப்பினூடாக சமூகம் மனிதன் மீது திணிக்கும் சுமையை அறிய முடிகின்றது.

1995 இல் இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாக 13 கதைகளை உள்ளடக்கி "என்னுடைய தும் அம்மாவினுடையதும்" தொகுப்பு வெளியானது. இதுவும் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக வெளியானது. "சமகாலம்" குறித்த போர்க்கால சூழலை மையப்படுத்தியதாக அக்காலத்தில் "ஐடென்ரிக்காட்" இன் முக்கியத்துவத்தை பற்றிய கதை. "இன்றுநாளை" என்பது வாடகை வீட்டில் பல துன்பங்களை எதிர் கொண்டு, கஷ்டப்பட்டு சேர்த்த பணத்தில் சொந்தமாக வாங்கிய நிலத்தில், வீடு கட்டி இன்பமாக வாழ்ந்திருந்த குடும்பத்தின் வீடு போர்க்கால சூழலில் எயார்போட்டை பெருப்பிப்பதாக கூறி சூறையாடப்படுவதை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளதோடு தமிழரின் எதிர்கால நிலையை கேள்விக்குட்படுத்தும் கதையாகவும் புனையப் பட்டுள்ளது. ஈழத்து போரில் இருந்து மகனை பாதுகாக்க எண்ணி அவனை புலம் பெயர் தேசத்துக்கு அனுப்ப அங்கும் அவன் குடியுரிமையில்லாக் காரணத்தால் சிறையில் வாடுவதும், இங்கு அவன் பெற்றோர் சொந்த நிலத்திலேயே குடியுரிமை பறிக்கப்பட்டு அகதிமுகாமில் வாழும் அவலவாழ்வையும் சித்திரிக்கும் கதையாக "அகதிமுகாம்" கதையும் எழுதப்பெற்றுள்ளது. மேலும் இத்தொகுப்பில் எழுதப்பட்டுள்ள ஏனைய கதைகள் பலவற்றிலும் போரினால் ஏற்பட்ட இழப்புகள், இடப் பெயர்வுகள், அகதிமுகாம் வாழ்வு, புலப்பெயர்வு, காணாமற் போதல், பொருளாதாரத்தடை, சுற்றி வளைப்புகள், மன ஏக்கங்கள், மனப்போராட்டங்கள் என்பவற்றை மையப்படுத்தியதாக, தமிழரின் அவல வாழ்வை சித்திரிக்கும் படைப்புகளை உள்ளடக்கிய கதைகளாக யதார்த்தபூர்வமாகசிருஷ்டிக்கப்பட்டுள்ளன.

2002 இல் "மணல் வெளிஅரங்கு" சிறுகதைத் தொகுப்பும் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாகவே வெளியானது. இத்தொகுப்பில் உள்ள பல கதைகளில் குறியீட்டு மொழியை கதாசிரியர் பயன் படுத்தி தான் சொல்ல வேண்டியவற்றை தெளிவுறக் கூறியுள்ளதோடு, கதாசிரியரின் அடுத்தகட்ட நகர்வை தரிசிக்க முடிகின்றது. தமிழ் தேசிய பேராட்ட காலத்தில் நிகழ்த்தப்பெற்ற பல சம்பவங்களை இத்தொகுப்பில் உள்ள கதைகள் நினைவூட்டுகின்றன. 1995 – 2002 காலகட்டத்திற்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப் பெற்ற இத்தொகுப்பில் உள்ள கதைகள் குறிப்பிட்ட காலத்தின் பதிவுகளாக கொள்ளத்தக்கவை. அத்தோடு இத்தொகுப் பின் பலகதைகள் உணர்வுகளின் வெளிப்பாட்டை



மையப்படுத்தி எழுதப்பெற்றுள்ளதோடு போரின் தாக்கத்தால் தமிழ் மக்களின் மனதின் மூலையில் ஒழிந்துள்ள பயத்தை ஏதோவொரு வகையில் புலப்படுத்தும் சந்தர்ப்பங்களை வெளிப்படுத்தவும் தவறவில்லை. நல்லதொரு தொகுப்பு.

இறுதியாக 2016 இல் "மருத்துவர்களின் மரணம்" சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார். தனது மனைவியின் இழப்பை உணர்வு பூர்வமாக சித்திரித்தும் சில மருத்துவரின் கவனமற்ற போக்கை கேள்விக்குட் படுத்தியும் எழுதப்பெற்ற கதையாக "மருத்துவர்களின் மரணம்" சிறுகதை உணர்வு வெளிப்பாட்டுச் சித்திரமாக புனையப்பட்டுள்ளது. போலி வேஷதாரிகளைப் பற்றிய "அட" கதை, நெருக்கடியான வாழ்வைப் புலப்படுத்தும் "இத்தால் சகலரும் அறிய வேண்டியது என்ன வென்றால்" கதை, பெண்ணியத்தை முன்னிலைப் படுத்தி எழுதப்பெற்ற "வாழ்தல் என்பது" போன்ற கதைகள் இத்தொகுப்புக்கு வலிமை சேர்த்துள்ளன. மொழிநடையும், கதாசிரியரின் அனுபவங்களும் தொகுப்பை ஒரே மூச்சில் வாசித்து விட காரணமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிதம்பரதிருச்செந்திநாதன் சிறந்த 5 நாவல் களையும் எழுதியுள்ளார்.

1980களில் மித்திரன் வாரமலரில் எழுதிய "என்றாவது ஒரு நாள்" என்ற நாவலை 1981 இல் நூலாக வெளியிட்டிருந்தார். ஐந்து பாத்திரங்களை மட்டுமே கொண்டு நகரும் கதை. கிராமியப் பாடசாலை யொன்றுக்கு மாற்றலாகி வரும் மனைவியை இழந்த ஆசிரியர் ஒருவருக்கும், அக்கிராமத்தில் இளவயதிலே பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி சமூகத்தால் ஓரங் கட்டப்பட்டு விலக்கி வைக்கப்பட்டுள்ள பெண்ணிற்கும் இடையே காதல் அரும்புவதை மையப்படுத்தி எழுதப் பெற்றுள்ள நாவல். துன்பக்கேணியில் அமிழ்ந்து கொண்டிருக்கும் பெண்ணை ஆசிரியர் மனிதாபிமான நோக்குடன் காதல் புரியும் கதையின் நகர்வு வாசகர் களை கட்டிப்போடும் தன்மை வாய்ந்தது.

1988 இல் மீரா வெளியீடாக "முடிவல்ல ஆரம்பம்" என்ற நாவல் வெளியானது. தமிழ் பெண் களின் திருமணத்தில் முட்டுக்கட்டையாக இருக்கும் சீதனத்தை மையப்படுத்தி எழுதப்பட்ட இந்நாவல் முதிர் கன்னிகளின் அவலவாழ்வு, யாழ்ப்பாணத்தில் திருமணச் சந்தையில் சீதனம் ஏற்படுத்தும் பிரச் சினைகள், போராட்டத்தின் உண்மை நிலவரங்களை சரியாக புரியாதவர்களின் இயல்புகள், சாதி என பல விடயங்களை பேசியுள்ளதோடு போராட்ட காலத்தை பகைப்புலமாகவும் கொண்டமைந்துள்ளது.

காதலித்தவனை நம்பி அவனோடு ஓடிப்போன பெண்ணொருத்தி அவனை இழந்து வாழ வழியின்றி தவித்து வாழாவெட்டியாக நடுத்தெருவில் நின்று வாழ்விற்காக போராடும் அவலத்தையும் அவள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் மையப்படுத்தி "இருள் இரவில் அல்ல" நாவல் படைக்கப்பட்டுள்ளது. இந்நாவல் ஈழநாடு பத்திரிகையில் தொடராக வெளி வந்தது. மீரா பதிப்பக வெளியீடாக 1990 இல் வெளியான இந்நாவலும் ஆசிரியரின் ஆளுமையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டானது.

சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்களின் நான்காவது நாவலாக "முள் முடிமனிதர்கள்" 1991 இல் மீரா வெளியீடாக வெளியானது. இத்தலைப்பே வித்தியாசமானது. நல்லகல்வி, வேலைவாய்ப்பு இன்றிய இளைஞன் இடத்தில் ஏற்படும் நடத்தைக் குழப்பங்களை மையப்படுத்தி எழுதப்பட்ட இந்நாவல் குடும்பச் சுமையை தலையில் சுமக்க முடியாமல் விரக்தியடையும் இளைஞனை படம் பிடித்து காட்டுகிறது.

"மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்" நாவல் 1992 இல்


மீரா வெளியீடாகவே வெளியானது. இந்நாவல் ஈழமுரசில் தொடராக வெளியானது. போரின் தாக்கம், அதன் இழப்புகள் அவற்றை எதிர்கொண்ட தமிழ் மக்களின் வாழ்க்கை, பெண்கள் எதிர் கொண்ட துயரங்கள் பற்றிய விபரிப்புகளை சிறப்புற காட்சிப்படுத்திய நாவலாக இது வெளியாகியுள்ளதோடு போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளை மையப்படுத்தி கதை நகர்த்தப்படுகின்றது. மூன்று வகையான குடும்பங்களை கொண்டு தமிழ் மக்களின் இன்னல்கள் இந்நாவலில் பேசப்படுகின்றன.




இவர் 80களின் ஆரம்பத்தில் செயற்பட்ட யாழ் கலாசாரக்குழுவுடன் இணைந்து, பல இலக்கிய முயற்சி களில் இணைந்து பணியாற்றினார். அந்தவகையில் ஈழமுரசு, அமுதகங்கை செய்திக் கதிர் போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளுடன் இணைந்து செயலாற்றினார். ஈழமுரசிலும் குறிப்பிடும் படியான பல படைப்பு களை இவர் எழுதியுள்ளார். நடராஜமைந்தன், சிதம்பரன், இணுவிலான், சிதம்பரதிரு, அக்கினிக் கறுப்பன், சித்திரா சிவகணேசன் என பல புனைபெயர் களில் இவரது படைப்புகள் களம் கண்டன. வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, ஈழநாதம், மித்திரன், சஞ்சீவி, வாரமுரசொலி, உதயன் ஆகிய பத்திரிகைகளிலும் சிரித்திரன், மல்லிகை, உள்ளம், வெளிச்சம், ஆதாரம், தளவாசல் போன்ற சஞ்சிகைகளிலும் இவரது படைப்புகள் பிரசுரமாயின.

சுமார் ஒருவருடம் மாதாந்த சஞ்சிகையாக வெளிவந்த கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினரால் வெளியிடப்பட்ட "உள்ளம்" சஞ்சிகை சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பின்னர் ஈழத்தில் பலரது கவனத்தையும் பெற்றதை யாராலும் மறுக்கவியலாது. விடுதலைப்புலி களின் கலைபண்பாட்டுக்கழகத்துடன் ஏற்பட்ட தொடர்பு இவரது இலக்கிய வாழ்வில் திருப்புமுனையாகவும், இவரது கலைத்துவத்தை வெளிக்காட்ட சந்தர்ப்பமாக வும் இவருக்கு அமைந்தது. அந்த வகையில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுகழகத்தினரால் வெளியிடப்பட்ட "வெளிச்சம்" சஞ்சிகையின் ஆசிரியராக பணி புரிந்தார். இந்த இதழின் வடிவமைப்பு இன்றும் பலரால் மெச்சப்படுகின்றது. அவற்றினை மேற்கொண்டவர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களே. இதேவேளையில் ஆதாரம், காப்பரண் (பனை அபிவிருத்தி சபை வெளியீடு) போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவிலும் இணைந்து ஒரே நேரத்தில் வெளிச்சம், ஆதாரம், காப்பரணன், ஈழமுரசு என நான்கு பிரசுரங்களில் சலிக்காது இணைந்து பணி யாற்றினார்.

சட்டத்தின் திறவுகோல் சஞ்சிகை, அன்ரன் பாலசிங்கத்தின் சில நூல்கள், பெண் பேராளிகளின் "நாற்று" சஞ்சிகை எனப் பல நூல்களின் வடிவமைப்பை செய்துள்ளார். ஈழநாடு (வன்னியில் - வாரந்த பொறுப்பாசிரியராக), ஈழநாடுவாரமலர் பத்திரிகை ஆசிரியராக, ஈழநாடு மாத மலர் பத்திரிகை ஆசிரியராக என இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினார். பத்திரிகை ஆசிரியர் என்பதற்குமப்பால் கணினி வடிவமைப்பு, சஞ்சிகை வடிவமைப்பு என பலதையும் இவரே மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் தனது நண்பர்கள் கை.சரவணன், சிதம்பரன், ந.மயூரரூபன், முல்லைக்கமல், தமிழ்மாறன், சத்தியமூர்த்தி போன்றோருடன் இணைந்து "எழுகலை இலக்கியப் பேரவை"யை 1999 இல் உருவாக்கி இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார். கருத்தரங்குகள், கவியரங்குகள், நூல் பதிப்புகள், நூல் வெளியீடுகள் என்பன இவ்வமைப்பின் ஊடாக செயற்படுத்தப்பட்டு வந்தன. ஈழவிடுதலைக்கான இறுதிப் போரின் போது வன்னியில் பல துன்பங்களை அனுபவித்து மீண்ட சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் யாழ் மீண்ட பின்னர் தொடர்ந்தும் தனது இலக்கியபணிகளை மேற்கொண்டு வந்தார். அதன் பேறாக அவரால் "தளவாசல்" சஞ்சிகை எழுகலை இலக்கியபேரவையின் துணையோடு வெளிவந்தது. விருதுகள், பட்டங்கள் மீது ஆசையற்றவர். தனது இலக்கியபணி மக்களுக்கானவை என்றநோக்கோடு அர்ப்பணிப்போடு இறுதி வரை நடுநிலையாக செயற்பட்டு வந்த சிதம்பரதிருச்செந்திநாதன் உதயன் பத்திரிகையின் சூரியகாந்தி பகுதிக்கும் பொறுப்பாக இருந்து அதனை தரமாக வெளியிட அனுசரணை புரிந்தார். நாற்பத்தாறு ஆண்டுகளாக தொடர்ச்சியான இலக்கியச் செயற்பாட்டாளராக இயங்கிய இவரது செயற்பாடுகள் தமிழ் இலக்கியநெஞ்சங்களுக்கும் பயன்தரவல்ல பல இலக்கிய அறுவடைகளை பெற்றுத் தந்துள்ளது. இவர் சமூகத்தை அவதானித்தவிதம் தனித்துவமானது; பெண்கள் மீதான பரிவும் கரிசனையும் வியக்கத்தக்கது; தமிழ் சமூகத்தில் பல்வேறு அழுக்குகளைதன் எழுத்தின் வாயிலாக வெளிக்கொண்டு வந்த இவரது படைப்புகள் பாராட்டிற்குரியன; போராட்டத்தின் வரலாற்றை, போராட்ட வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கு சிதம்பர திருச் செந்திநாதனின் படைப்புகள் ஆதாரமானவை. புதியதலைமுறை எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும் என்ற நன் நோக்கோடு இறுதிவரை பயணித்த இவரதுபடைப்புகளும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கியமானவையாகக் கொள்ளத்தக்கவை.



# ஒரு மூதாட்டியின் பயணம்

இதயராசன்

கிணற்றடியில் நெடுத்து வளர்ந்து, காய்த்து ஓய்ந்து நின்ற கமுகமரம் தறிக்கப்பட்டு பாடைகட்டி முற்றுப்பெற்ற நிலையில், தங்கராசண்ணர் மண்சட்டியில் பதமாகக் காச்சிய அமெரிக்கன்மா பசையினை பாடையினைச் சுற்றி இழுத்துக் கட்டப்பட்ட பருத்தி நூலில் பூசி, அலங்காரமாக வெட்டப் பட்ட வெள்ளைக் கடதாசிகளை ஒட்டி அலங்கரிக்க, குழந்தை அப்பு பாரம்பரியமான கைவேலைகளைத் தென்னங் குருத் தோலையால் செய்து மேலும் மெருகூட்டிக் கொண்டிருந்தார். பூத்துவிரியாத தென்னம்பாளை இரண்டினை ஒருவர் கொண்டு வந்து, பாளையைப் பிளந்து பாளைப் பூக்களைப் பிரித்து வட்டமாக அழகான பூங்கொத்தாக்கி, பாடையின் முன்னுக்கும் பின்னுக்கும் வைத்துக்கட்டி அழகுக்கு அழகு சேர்த்து தனது அழகியல் ரசனையை வெளிப்படுத்தினார்.

முற்றத்தில் பந்தல்போடப்பட்டு வெள்ளை கட்டப் பட்டிருந்தது. பந்தல் வாசலில் இரண்டு சாம்பல் மொந்தன் வாழைகள் முற்றிப்பருத்த குலைகளுடன் கட்டப்பட்டிருந்தன. வடக்குத் தெற்காக பெரிய வாங்கு வைக்கப்பட்டு அதன் மேலே விலை உயர்ந்த தேக்கம் மரத்தினால் செய்யப்பட்ட பிரேதப்பெட்டியில் கூறைச் சேலையுடுத்தி ஆச்சியை நீட்டிநிமிர்த்தி படுக்க வைத்திருந்தனர். தெற்குப் பக்கமாகத் தலைமாட்டில் என்னைவிட உயரமான குத்துவிளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.

“முதலில் பொம்பிளையள் வாய்கரிசி போடுங்கோ! பேரப்பிள்ளையள் வாங்கோ! இந்தப் பந்தங்களில் ஒவ்வொன்றை எடுத்து கவனமாப் பிடியுங்கோ! பிறகென்ன பாக்கிறியள் சாப்பிராணிச் சட்டியில நெருப்புத் தணலைப் போடுங்கோ, கொள்ளி குடத்தை எடுங்கோ!”

என்று அன்றைய இறுதிச்சடங்கை தலைமையேற்று நடாத்திக் கொண்டிருக்கும் செல்லத்துரை அண்ணர் சுறுசுறுப்பாக நான்கு புறமும் தனது அவதானத்தைச் செலுத்தி ஆச்சி யின் இறுதிப் பயணத்திற்கான ஏற்பாடுகளை விரைவுபடுத்திக் கொண்டிருந்தார்.

நாங்கள் எல்லோருமே கடைசியாக ஆச்சியைப் பார்க்கின்றோம். கையில்பிடித்த பந்தம் லேசாக ஆடுகிறது. ஆடுகிறகையை மறுகையால் இறுகப்பிடிக்கின்றேன். ஐயாவும் பெரியய்யாவும் போட்டி போட்டு தேவாரமும் திருவாசகமும் உள்ளங் கசிந்துருகிப் பாடுகின்றார் கள். செத்தவீட்டில பாடுற சதாசிவம் வாத்தியார் தனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று பார்த்துக் கொண்டு நிற்கின்றார். நேரமாகிறது இரண்டு மகன்மாரும் மனமுருகி நிற்பவர்கள் எல்லோரையும் அழவைத்துக் கொண்டிருக்க யார்தான் வாய்திறப்பார்.

எனது கண்கள் கண்ணீர் கசிகின்றது, ஆச்சி பன்றித்தலச்சி அம்மன் கோவிலில் அம்மாளாச்சி யைப் பலபெயர்கள் சொல்லிக் கும்பிடப் பக்கத்தில் பார்த்துக்கொண்டு நின்ற கடைசித் தங்கச்சி அப்பெயர்களைச் சொல்ல முயற்சித்து இயலாதபோது,

“ஆச்சி சொன்ன தெய்வங்களே! எனக்கு நல்ல படிப்பைத் தா!”

என்று கும்பிட்டதை நினைந்து நினைந்து சிரித்தது நினைவுக்கு வந்து அழுகையை மிகுதி யாக்கிக் கொண்டிருந்தது. ஆச்சி அடிக்கடி பாடும் சித்தர் பாடலை வாய்முணுமுணுக்கிறது.

“தாவாரம் இல்லைத் தனக்கொரு வீடில்லைத் தேவாரம் எதுக்கடி குதம்பாய் தேவாரம் ஏதுக்கடி”

எனக்கு விருத்தெரிந்த காலம்முதல் ஆச்சி யின் வாழ்முறையையும் ஆச்சிக்கும் எனக்குமான பாசப்பிணைப்பும் என்னை இன்னொரு உலகத்துக்கு அழைத்துச் செல்கின்றது.

தடுப்புசுவர் கட்டாத கிணற்று மிதிகல்லில் நின்று, துலாக்கயிற்றுத் தடியைப்பிடித்து மிக நிதானமாக என்பது வயது கடந்தும் இருபதடி ஆழக்கிணற்றில் தண்ணீர் மொண்டு தலையில் ஊற்றிக் குளித்து, அன்றைய பொழுதின் அசதியைப் போக்கி புதிய உற்சாகத்தினை உடலுக்கு ஊட்டிக்கொண்டிருக்கிறார் ஆச்சி.

சாவகச்சேரி - பருத்தித்துறை பிரதான வீதியில், நுணாவில் சந்தியிலிருந்து இரண்டாவது மைல் கட்டையடியில், பூதங்கள்ளி வயல்வெளிக்குப் போகும் சந்தியிலிருந்து, கூப்பிடு தூரம் சிறிய வீதியில்

நடந்தால் ஒரு முடக்கு வரும், அதுதான் குருந்தடி. ஆச்சி இளமையாய் இருந்த காலத்தில் குருந்த மர மொன்று பெருவிருட்சமாய் நின்றதாய் சொன்னவர். இப்பொழுது அம்மரம் இருந்ததற்கான தடயமே இல்லை. அந்தக் குருந்தடிச் சந்தியில் இடதுபக்கம் திரும்பினால் குச்சொழுங்கை ஒன்றுதெரியும். அந்த ஒழுங்கைக்குப் போகாமல் நேராக இடப்பக்கம் திரும் பினால் கடப்பில்லாமல் அரைவளைவுப் பாதை ஒன்று தென்படும், அதையொட்டி கிடுகு வேலி பிறை வடிவில் இருக்கும். அந்தவேலி கிணற்றை மறைத்து நிற்கும்.

முற்றி வளர்ந்த இரண்டு பூவரச மரங்கள் ஆடு காலாய் நிற்க அதில் பனைமரத்தில் கைதேர்ந்த தச்சனால் செய்யப்பட்ட நீளமான துலா ஒன்று பல தசாப்தங்கள் கடந்தும் உறுதியோடு அச்சுலக்கையில் உழைத்துக் கொண்டிருந்தது.

அந்தக் கிணற்றில் ஆச்சி குளித்துக் கொண்டிருக் கின்றார். ஊமல் கரியை பற்களால் கடித்து சுட்டு விரலால் பற்களை விளக்கும்போது கிறீச் கிறீச் என்றொரு சத்தம் வரும். அப்படிச்சத்தம் கேட்டால், சுட்டசங்குபோல பல் பளிச்சென்றிருக்கும். ஆச்சி குளிப்புக்கு நடுவில் பல்விளக்கி, பச்சைத் தென்னோலை ஈர்க்கில் நாக்கு வழித்து, சண்லைட் சோப்பில் மேலெல்லாம் நுரைக்கப்பூசி குளிக்கும் அழகே அழகு தான். அவர் குளிக்கும்போது நான் தற்செயலாக அந்தப்பக்கம் போகநேரிட்டால்,

“டேய் குத்தியா இங்க வா? இரண்டு வாளி தண்ணியள்ளடா”

என்று உரிமையோடு தண்ணி அள்ளுவிச்சுக் குளிப்பா. பக்குவமாகக் காடிபோட்ட பனங்காய், சுட்ட பனங்காய் என்று உரிமையோடு எடுத்துச் சுவைப்பதும், ஆச்சியின் அன்றாட உணவில் பங்கு போடுவது, மாங்காய், பலாப்பழம், இளநீர் எல்லா வற்றிலும் உரிமை பாராட்டுவதால் பனாட்டுக் காய வைக்க பந்தல் போடுவது முதல் ஆச்சிக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் முதலாவதாக உதவுவதில் ஆர்வமும் ஆனந்தமும் அடைந்தேன். ஆனால் வீட்டில் என்றால் சின்ன வேலையும் வேம்பாகக் கசந்தது ஏனென்று இன்னமும் எனக்கு விளங்கவில்லை.

ஆச்சிவளவு நான்கு பரப்பு இருக்கும். வளவுக்கு கிழக்குப் பக்கமாக கிணறும் மேற்குப்பக்கமாக பனை ஓலையால் வேயப்பட்ட ஓரறையும் டானவடிவான விறாந்தையும் மூன்றடி உயரமான பத்திரிப்புக்கட்டும் கொண்ட கல்வீடும், வீட்டுக்குத் தெற்கால் அரைச் சுவராக மண்சுவரும் அதன்மேல் பனைமட்டையால் வரிச்சுப்பிடித்து கிடுகால் வேயப்பட்ட குசினியும், வீட்டுக்குப் பின்னால் சடைத்துவளர்ந்த பாண்டி மாமரமும், இரண்டு பலாமரம், ஐந்தாறு பனைமரம், நாலைந்து தென்னை மரம், ஆறேழு முருங்கை மரங்கள், அன்னமின்னா, கொய்யா, ஒரு மஞ்சலுணா, ஒரு பெரிய நறுவில், இரண்டு பெரிய வேப்பமரங்கள் என ஆச்சியின் வளவு ஒரு சோலைவனம்.

ஐந்தடிக்குச் சற்று அதிகமான உயரமும் பொது நிறமும் நரம்புகள் வெளித்தெரியும் சுருங்கிய தசைகளும் கழுத்து விலா எலும்புகள் இரண்டும் புடைத்து இயற்கையான நெக்கிளஸ்போல காட்சியளித்தது. நீளமும் இல்லாமல் வட்டமும் இல்லாமல் இடைத்தரமான முகவமைப்பு, ஒளிபொருந்திய கூர்மையான சிறியகண்கள், நீளமான மூக்கு, பாதிக்குமேல் நரைத்து அடர்த்தி குறைந்த ஒரு முளத்திற்குச் சற்று அதிகமான தலைமுடி, வயிறுமுதல் சதைகள் இருக்கும் இடமெல்லாம் ஒட்டியுலர்ந்த உடலமைப்பு. இடுப்பினைச் சுற்றி பதினாறடி பருத்தித் துணியிலான நெசவு சேலை மாராப்புக்கட்டாகத் தனது முதுகுக் கூனலை மறைத்து கச்சிதமாக உடுத்திருப்பார். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்துபோல பெரிய கடுக்கன்கள் இரண்டும் காதுகளிலிருந்து இப்பவே அறுந்து விழுமோ! என்ற நிலையில் தொங்கிக் கொண்டிருக்கும். ஆனால் கடைசிவரை அவைகள் அறுந்து விழாமை இன்றும் எனக்கு அதிசயமாகவே தோன்றுகிறது.

காலையில் ஐந்து மணிக்கு முன்பாகவே நித்திரை யால் எழுந்து, காலைக்கடன்கள் முடித்து, சுரைக் குடுவைக்குள் உள்ள விபூதியை வலக்கையால் எடுத்து விரல்களைப்பரத்தி முருகா என்று வாய் முணுமுணுக்க நெற்றியில் பரவிப் பூசும் அழகோ அழகுதான். முற்றத்தில் நின்று கிழக்குப்பக்கம் பார்த்து உச்சந்தலை யில் இருகரங்களையும் குவித்துவைத்து சுழன்று சூரியனை வணங்கும் சூரியநமஸ்காரம் அலாதியானது.

மண்பானையில் தேயிலையுடன் நன்னாரி வேரும் சேர்ந்து ஊறிய தேநீரை பனம் கருப்பட்டியுடன், செதுக்கி யெடுத்த சிரட்டைக் குவளையில் உறுஞ்சி உறிஞ்சி ஒருவித ரசனையுடன் குடிக்கும்போதே அன்றைய பொழுதில் நிறைவேற்றும் பணியினை மனதில் பதித்து சரிபார்த்துக்கொள்வார். இரவு ஒன்பது மணிவரை குப்பிவிளக்கு வெளிச்சத்தில் இழைத்த பாயையும் விற்ப தற்கென ஊர்மக்கள் கொடுத்த பாய்களையும் சேர்த்துச் சுருட்டி இழைக்கயிறால் இறுகக்கட்டி தலையில் சுமந்தவாறு, ஆறுமணிக்கு வீதியில் இறங்கிவிடுவார்.

குருந்தடியிலிருந்து சாவகச்சேரி பட்டணத்திற் கான மூன்று மைல்கள் தூரத்தினை வெறுங்காலுடன் நடந்து ஒரு மணிநேரத்திற்கு முந்திப்பிந்தி சென்று விடுவார். வெய்யில் எறித்து தார்றோட்டு கொதிக்க முன்னர் காலைத்தென்றல் சீராட்ட, பறவைகள் பாராட்ட, வண்ண நடைபோட்டு வாரத்தில் மூன்று நாட்கள் விடுப்பு எடுக்காமல் சென்று, சந்தையில் பாய்கள்விற்கும் பகுதியில் பேரம்பேசி பாய்களைவிற்று, பிற்பகல் இரண்டு மணியளவில் சமையலுக்குத் தேவை யான காய்கறிகளும் அதற்கும் பின்னர் வரும் வீச்சு வலை மீனுக்குக் காத்திருந்து வாங்கித் திரும்பவும் வெறும் கால்நடையாகவே மூன்றுமைல் தூரத்தினைக் கடந்து வீட்டுக்குவர நான்குமணியாகும்.

வந்த கையோடு பனை தென்னம் பாளைகள், காகம் முறித்துப்போட்ட குச்சிகளில் அடுப்புமூட்டி, மண்பானையில் உலைவைத்து, சங்கக்கடை கூப்பன் பச்சரிசியை சுடுதண்ணியில் கழுவி உலையில் போட்டு, உப்புச்சட்டியிலிருந்து மூன்று நான்கு உப்புக்கல்லையும் அதிலிட்டபின்னர், சந்தையில் வாங்கி வந்த மீனைப் பலாமரத்தடியில் குந்தியிருந்து, மீனின் செதில்களை அரிவாளில் செதுக்கிச் சிறுதுண்டுகளாக வெட்டும் போதே காகங்கள் விருந்துண்ணக் கூடிக்கரைந்து கூட்டம்சேர்க்கும் மாங்குச்சியால் அவற்றினை விரட்டி விரட்டி மீனைத் துண்டங்களாக்கி மீன்தலை, குடல்களை காகத்திற்குப் படைத்து குசினிக்குத் திரும்ப

அரிசி வெந்து பதமானசோறாக இருக்கும்.

சோற்றுப் பானையின் வாயில் பானடியை வைத்து பானையைச் சரித்து, அரிக்கன்சட்டியில் கஞ்சியை வடித்து வைத்துவிட்டு, கறிச்சட்டியில் மீனை இட்டு சின்னவெங்காயமும் பச்சைமிளகாயும் நீளப்பாட்டுக்கு வெட்டி பாண்டி மாங்காய் சீவிப் போட்டு தேங்காய்பாலும் விட்டு, சிறிதளவு மசாலாப் பொடியும் கலந்து மெல்லிய நெருப்பில் கொதிக்க வைத்துவிட்டு, பாதித் தேங்காய் கையில் தேங்காயைக் காம்புச்சத்தகத்தால் சூண்டெடுத்துத்த தேங்காய்ச் சொட்டையும் கடித்து, சிரட்டையில் சுடுகஞ்சியை ஊற்றி, உறிஞ்சி ஆச்சி கஞ்சிகுடிக்கும் கலை எல்லோருக்கும் வாய்க்காது. கஞ்சி குடிக்கும் போது யார் வந்தாலும் பங்கிட்டுக் குடிப்பார். அந்த அருமந்த பொழுதை நான் தவற விடவே மாட்டேன். தேவாமிர்தம் என்று சொல்வார்களே! அது இது தானோ என்னவோ. அவருடன் கஞ்சிகுடித்த இனிமை யான நினைவுகள் இப்பொழுதும் என்னை பரவச மூட்டுகின்றது.

ஆச்சியின் கஞ்சி குடிக்கும் படலத்துடன் அன்றைய பொழுதின் வேலைகள் முற்றுப்பெறும் தருணத்திற்கு அடையாளமாகும்.

அடுத்த பகுதிதான் முன்பு சொன்ன குளியல் கலை. ஆச்சி குளித்து சேலையுடுத்தி முருகனுக்கு நன்றி சொல்லி விபூதிதரித்த பின்பே அன்றைய மதிய இரவு இரண்டும் சேர்ந்த போசனத்திற்காக யாராவது ஒரு அதிதியை எதிர்பார்த்து காத்திருப்பார். யார் வந்தாலும் எத்தனைபேர் வந்தாலும் சாப்பிட வாங்கோ என்று அன்போடு அழைத்து, அலுமினிய சோற்றுக் கோப்பையில் பரிமாறுவார். ஆச்சி சோற்றை அகப்பை யால் அள்ளும் கலை நுட்பமானது. சிரட்டை அகப்பை யால் சோற்றினைச் சீவி அள்ளுவார். கோப்பையில் அந்தச்சோறு பொலிந்திருக்கும். சின்ன முட்டிப் பானையிலுள்ள சோறு அள்ள அள்ள அட்சய பாத்திரம் போல் குறையாமல் பொலிந்துகொண்டே இருக்கும்.

அனேகமாக ஆச்சி வாங்கி வரும் மீன் சிறிது பழுதடைத்திருக்கும். காரணம் திரும்பிவரும் பொழுது களைப்படைந்து மெள்ள மெள்ளவே நடப்பார் அதனால் சுணங்கிப்போயிருக்கும். அதனைத் தீச்சுச் சமைக்கும் கலையால் புதிய சுவையொன்று தோன்றும். அந்தப்பக்குவம் வேறுயாருக்கும் தெரியுமோவென்று இதுவரை எனக்குத் தெரியவில்லை? ஆச்சி உணவு உண்பதற்கு முன்னர் காகம், குருவி, நாய், பூனை, எறும்பு என சுற்றியுள்ள அத்துணை ஜீவராசிக்கும் கொஞ்சம் கொஞ்சம் கிள்ளிவைத்து, அவை உண்ணும் போதே தானும் சிறு கவளமாக அள்ளி வாயிலிட்டு மென்று மென்று ரஷித்து சுவைத்து மிகநிதானமாக ஆறுதலாகச் சாப்பிடுவார். அவருக்குத்தான் எந்த “ரென்சனும்” இல்லையே எல்லாம் நிறைவாகிய பொழுதில் அல்லவா உணவு உண்கின்றார்.

ஆச்சிக்கு ஐயா, பெரியய்யா, மாமி மூன்று பேரும் தான் பிள்ளையள். அப்பு ஊரில் பிரபல்யம் வாய்ந்தவர். ஊருக்குள் படித்தவர் என்றால் அது அப்புதான். அறுபது வயதில் இயற்கை எய்திவிட்டார். அதற்கு முன்னமே பிள்ளையள் திருமணம் முடித்து தனியாகச் சென்று விட்டனர். ஆச்சியும் அப்புவும் தனியவே வாழ்ந்தனர். அதனையே அப்புவில்லாமலும் தொடர்கின்றார்.

அப்புவை தச்சுவேலாத்தை என்றுதான் எல்லோரும் அன்பாக அழைப்பார்களாம். அப்பு தச்சு வேலையில அந்த வட்டாரம் கடந்தும் பிரபல்யமாம். அதோடு படிப்பிலும் கெட்டிக்காரர் என்றதால் பெரியபடிப்புப் படிச்சவையின் பழக்கம் கிடைத்து, அவர்களோடு இலக்கண, இலக்கியம், வாகடம் என்று மணிக்கணக்காக விவதிப்பாராம்.

அப்பு படித்த பெரியபெரிய புத்தகங்கள், புத்தகம் தாங்கும் புத்தகதாங்கி, விளக்குத் தாங்கி எல்லாம் ஆச்சி எடுத்துக்காட்டுவார். பல ஓலைச்சுவடிகள் கொண்டு போனவை திருப்பிக் கொடுக்காமல் தொலைந்து விட்டதாகக் கவலைப்படுவா.

ஒருமுறை பக்கத்தூரில் உள்ள ஒரு தமிழ் வித்துவானிடம் ஒரு அறிஞர் வந்து சந்தேகங் கேட்டா ராம். வித்துவானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாராம் அவரும் விடுவதாக இல்லையாம் கடைசியாக,

“உன்னுடைய எல்லாச் சந்தேகத்துக்கும் மட்டு வில்ல தச்சுவேலாத்தை என்று ஒரு மேதை இருக்கிறார் அவரிட்டைபோ எல்லாச் சந்தேகமும் நீங்கும்”

என்று சொல்லி அனுப்பினாராம். அவரும் வழி கேட்டு ஊருக்கு வந்தால் அப்பு வீட்டில இல்லையாம். எங்கயோ ஒரு வீட்டிலை கோப்பிச வேலையாய் வீட்டு முகட்டிலை இருக்கேக்கதான் அந்த அறிஞரும் வந்தாராம்.

வந்தவர் தயங்கித் தயங்கி வேலாத்தையரைப் பார்க்க வேண்டும் என்றாராம். என்ன விசயம் சொல்லும் என்றாராம். வந்தவர் அப்புவின்ர கோலத்தையும் முகட்டிலை இருந்ததையும் பார்த்து சந்தேகப்பட்டாராம். அப்போது அப்பு இன்னார் அனுப்பின ஆள்தானே என்றபிறகு தனது சந்தேகத்தைக் கூறினாராம்.

அப்பு முகட்டுவளையில இருந்தவாறு அந்த விடைக்கான பாட்டையும் சொல்லி விளக்கமும் சொன்னாராம். பிரமித்துப்போன அவர் அப்பிடியே நிலத்திலை விழுந்து கும்பிட்டு. அப்புவிட்டை விடைபெற்றுச் சென்றார் என்று ஆச்சி பலமுறை கூறியது இப்பவும் போலுள்ளது.

ஆச்சி நல்ல மூட்டில இருக்கேக்க அப்புவைப் பற்றிக் கதைகதையாக் கூறுவார். இப்ப எல்லாம் ஞாபகம் நிற்குதில்லை.

“மாங்காய்ப் பாலுண்டு மலைமீது இருப்பவர்க்கு தேங்காய் பாலேதுக்கடி...”

என்று பல சித்தர் பாடல்களும் வாகடப் பாடல் களும் பல காவியப்பாடல்களும் இராகத்துடன் பாடு வார். ஆச்சி படிக்கவில்லை எல்லாம் அப்பு படிக்கேக்க கேட்டுக் கேட்டு மனப்பாடம் பண்ணினதுதான்.

மகாபாரதம், இராமாயணம், விக்கிரமாதித்தன் கதை, சிந்துபாத் கதை என்று விடிய விடியக் கதை சொல்லுவார். கொடிய அரக்கனின் உயிர் ஏழுகடல் தாண்டி ஒரு ஆமையின் வயிற்றுக்குள் உள்ள ஒரு சிப்பி யின் வயிற்றில் இருந்ததையும் அதை விக்கிரமாதித்தன் கவர்ந்து வந்த, வீரமும் விவேகமும் நிறைந்த கதைகள், விதவிதமான விடுகதைகள் எல்லாம் இன்னமும் நினைவுத் தகட்டில் நிறைந்துள்ளன.

எண்பது வயது கடந்தும் எல்லாச் சவால்களை

யும் எதிர்கொண்டு, இறுதிக்காலத்தில் தனித்து நின்று வெற்றிபெற்ற மூதாட்டியாகத் தனது இறுதிப்பயணத் திற்குத் தயாரான பின்பு, உறவுகளும் ஊரும் திரண்டு தமது கவலைகளை பகிர்ந்து கொள்கிறார்கள்.

குருந்தடி கிராமம் மட்டுமல்ல அயலில் உள்ள ஐந்து கிராமங்களுக்கும் அப்புதான் தலையாரி. நல்லது கெட்டதுகளுக்கு எல்லாம் முன்னின்று ஒரு தீர்மானம் எடுத்தால் அதில் சத்தியமும் தர்மமும் இருக்கும் என்று அம்மக்கள் மெய்யாகவே நம்பினர். கல்வித் தெய்வத்தை ஊருக்குள் நடமாட வைத்த ஆசாரியாரின் துணைவியாரான ஆச்சியின் நடத்தையும் அதை மெய்ப்பிப்பதாகவே இறுதிவரை இருந்துள்ளது. அப்புவிலும் ஆச்சியிலும் உள்ள பாசமும் மதிப்பும் மட்டுமல்ல அவரது பிள்ளைகளின் சமூக ஊடாட்டங்களும் சேர்ந்தே இன்றைய இறுதிச் சடங்கில் அக்கம்பக்கத்து ஊரெல்லாம் ஒன்றுகூடி அந்த வளவெல்லாம் சோகத்தினை ஒட்டிவிட்டன.

வளவிலுள்ள மரங்களும் செடிகளும் வாடி வதங்கி ஆடாமல் அசையாமல் தலையைத் தொங்கப் போட்டு தமது அஞ்சலியைச் செலுத்திக் கொண்டிருந்தன. ஆச்சியின் உணவில் பங்கெடுக்கும் காகங்களும் குருவிகளும் அணிலும் புலுணியும் மரக்கிளைகளில் சோகத்துடன் அமர்ந்திருந்து துக்கத்தில் பங்கெடுத்தன. வெடிச்சத்துக்கு பயந் தோடும் நாய்கள் எவ்வித பயமின்றி துணிவோடு பந்தலைச் சுற்றி கவலையோடு நின்று, தமது அஞ்சலி யையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டிருந்தன.

ஆச்சி என்னிடம் காட்டிய அன்பு பாசத்திற்கு ஈடு இணை ஏதுமுண்டோ? எனக்கு பலவிதத்தில் உதவி செய்தவை எல்லாம் கண்களில் நிழலாடி மறைகின்றன. ஆச்சியிடம் நான் கற்றுக்கொண்ட பாடம் சோர்வில்லாத உழைப்பு, ஜீவராசிகளிடம் செலுத்தும் அன்பு, ஏற்றத்தாழ்வில்லாத விருந்தோம்பல். மொத்தத்தில் மனித விழுமியம் என்றால் என்ன என்பதை அனுபவமாகக் கற்றுக்கொண்டேன்.

ஐம்பதுக்கு மேற்பட்ட இரத்த பந்தங்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உறவினரையும் சுற்றியுள்ள ஐந்து கிராமங்களையும் கனத்த இதயத்துடன் புகழுடல் சுமக்க வைத்துவிட்டு, நீட்டி நிமிர்ந்து அமைதியாக மீளாத்துயில் கொள்கின்றா.

வெறுங்காலுடன் மூன்று மைல் தூரத்தை நடந்த குருந்தடிக் கிராமத்தின் இறுதிப்பாதங்களும் ஓய்வெடுத்துவிட்டன. அந்தத் திருவடிகளில் கண்ணீர் புஷ்பங்கள் கணக்கின்றிச் சொரியப்படுகின்றன.

ஆச்சியின் ஆசைமுகம் மறைய பிரேதப்பெட்டி இழுத்து மூடப்படுகிறது. பெண்கள் எல்லோரும் மாரடித்து ஓவென்று பெருங்குரலெடுத்து ஒப்பாரி வைக்கிறார்கள். அதைமேவி மேளச்சத்தமும் வெடிச்சத்தமும் காதுசெவிடாகும் ஒலியலைகளை எழுப்ப, ஆச்சியின் பாடை தாங்கும் பாக்கியம்கருதி, தேர்வடம்பிடிக்க முந்தி நிற்பதுபோல பலர் முண்டியடிக்க, அந்த அதிஷ்டம் வாய்த்தவர்கள் மிகநிதானமாக தோள்களில் சுமக்க, ஆச்சியின் பொய்யுடல் பாடையில் ஆடியசைந்து போகின்றது.

ஆச்சி என்னைவிட்டு நிரந்தரமாகப் பிரிகின்றார் என்ற உண்மை எனது உணர்வலைகளை மெல்லமெல்ல மேலெழுப்புகின்றன. எனது கண்பார்வையிலிருந்து ஆச்சியின் இறுதிப் பயணம் மறைகின்றது. நான் மயங்கி பந்தலில் சாய்ந்து வீழ்கின்றேன்.

என்னைச்சுற்றி யாருமே இல்லை. எல்லாச் சத்தமும் அடங்கி ஒரு மயான அமைதி நிலவுகின்றது. ஆச்சி என்னைப் பார்த்து பொக்கைவாய் திறந்து சிரிக்கின்றார். நான் அவரின் சிரிப்பில் கிறுங்கிக் கிடக்கின்றேன். அவர் எனது பிஞ்சுக்கரங்களை மென்மையாக இறுகப்பிடிக் கின்றார். வார்த்தைகளால் விபரிக்கமுடியாத நிர்மல மான வெளியில் நாமிருவரும் சஞ்சரிக்கின்றோம். எண்ணமும் செயலும் ஒன்றிப்போனால் வண்ணமும் வடிவமும் வார்த்தைகளும் எதுக்கு? பசியில்லை களைப் பில்லை இன்பமுமில்லை துன்பமுமில்லை. எங்கள் இருவருக்கும் வண்ணச்சிறகுகள் முளைக்கின்றன, அவ்விறகு களை அசைத்து அந்த வெளியில் பறக்கின்றோம்.

வல்லமையாலும் முடியாதவிடத்து தந்திரத்தாலும் ஒருவரை ஒருவர் அடக்கி ஒடுக்குவதும், ஓரினத்தை இன்னோரினம் மொழி கலாசாரங்களை அழித்து ஆழ்வதும், தன்னை நம்புபவரை எத்திப்பிழைக்கும் வஞ்சகம் நிறைந்ததுமான பூமிப்பந்தில் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பேதம் தெரியவில்லை. எல்லாமே மிகச்சிறிய எறும்புகளாய் கூட்டம் கூட்டமாய் ஊர்ந்து திரிகின்றன.

●






நூல்
மட்டை வேலிக்கு தாவும் மனசு

ஆசிரியர்
எஸ்.சிவசேகரன்

வெளியீடு:
கலாசாரப்பேரவை
வடமராட்சி கிழக்கு

விலை:250/-




நூல்
உன்னைச் சரணடைந்தேன்


ஆசிரியர்
லதா உதயன்

வெளியீடு:
மணிமேகலைப்பிரசுரம்

விலை:100/-(இந்தியவிலை)

இ.சு.முரளிதரன்

# சிலேடை வெண்பா



1. குதிரையும் பாம்பும்
தேரை இழுக்கும் இரைக்கும் உளை ஈர்க்கும்
போரிற் படையேற்கும் பாரிடையே - ஊரும்
கடந்தோடும் நீலகண்ட மேறும் குதிரை
படமெடுக்கும் பாம்பாம் பகர்

2. பச்சைக்கிளியும் இராணுவமும்
பச்சை அணியால் கிளையமர் செய்பாட்டால்
நஞ்சும் அதிகாரக் காய் நகர்வால் - உச்சப்
படையெடுப்பால் சேரும் சிறையால் கிளியும்
நடைசீர் இராணுவமே நம்பு

3. கொக்கும் நிலவும்
மீனிரை நாடலால் காலை மடிசெயலால்
வான் நகர்வால் நீரில் முகம் நோக்கால் - பால்நிறத்தால்
கங்கை அருகமர்வால் கொக்கை நிகர்த்திடுமே
மங்காப் புகழ்சேர் மதி

4. வேய்ங்குழலும் கர்ணனும்
வண்டு துளைத்தலால் காது பெறுபேற்றால்
புண்பட்டும் வாரி வழங்கலால் - கண்ணன்
கரமேந்த மேன்மை அடைந்தமையால் கர்ணன்
முரளிக்கு நேரா முணர்.

5.காட்டுவாசியும் சிற்றுண்டிச்சாலையும்
அம்பிட்டிருக்கும் முறுக்கிருக்கும் கேசரியும்
வம்பு மெலிவடையும் பூரிக்கும் - கம்பிருக்கும்
கோலப் பணியாரம் மோதகமும் சிற்றுண்டிச்
சாலையாம் காட்டுவாசி சாற்று.


6.முருகனும் ஊஞ்சலும்
பலகை இருக்கை இருபுறமும் சக்தி
துலங்கக் கரம்பற்றல் சுற்றல் - உலகமது
தோகை மகிழ்ந்தாடல் போக்கும் வரவுமாதல்
ஆகையால் ஊஞ்சல் குகன்

7.சவர்க்காரமும் காகமும்
கரைவால் அழுக்கினை நீக்கலால் காற்றில்
விரை சுமப்பால் ஊண்முன் னுரையால் - உறை புகலால்
யாக்கை தழுவிப் பயணிப்பால் ஒத்திருக்கும்
காக்கை சவர்காரம் காண்.

8. ஆமையும் திருட்டும்
ஊரும் அடங்குமஞ்சும் மாலின் பெருவாழ்வில்
சேரும் இருமை வினை நிகழ்த்தும் - வாரி நுழைந்
தோடும் சுமக்கும் புதைத்து வளர் வம்சம்
பாடு ஆமை போலும் திருட்டு

9. கடலும் செய்யுளும்
இன்னோசைச் சந்தத்தால் ஆழ்பொருளால் - சீர்றத்தால்
மணீர்ப்பால் சங்கப் புதையலால் -பன்னுரையால்
உள்ளே உயிருப்பால் யாப்பின் வரம்பினால்
செய்யுள் கடலென்று செப்பு.

10. ஆசிரியரும் தென்னைமரமும்
வித்தை புதைக்கும் விளக்குமாறு ஈர்க்குமே
தத்தை இனங்காணும் நெய் ஒளிரும் - கத்திவந்தால்
அந்தோ ரணமாகும் தென்னை மரமென்றும்
சிந்தைநேர் ஆசிரியர் செப்பு.



# தொல்காப்பியமும் அரிஸ்டோட்டலின் கவிதையியிலும் ஒரு ஒப்பு நோக்கு

கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன்

கலை இலக்கியங்கள் மனித மனத்தில் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது? இந்தத் தாக்கம் எவ்வாறு சாதாரண பொருட்களும் காட்சிகளும் ஏற்படுத்தும் தாக்கத்திலிருந்து வேறுபடுகிறது? கலை இலக்கியங்கள் பற்றி இந்த கேள்விகள் தான் அழகியலின் அத்திவாரமாயமைகிறது.

ஒரு கலைப்பொருள் அல்லது இலக்கியம் தனது சிறப்பான அந்தஸ்தைப் பெறுவதற்கு அதில் பொதிந்துள்ள அழகியற்பண்புதான் அடிப்படையாக அமைகிறது. இந்த அழகியற் பண்புகள் பற்றிய ஆய்வுகளும் சர்ச்சைகளும் ஆரம்ப காலந்தொட்டு கலை இலக்கியவாதிகள் மத்தியிலும் மெய்யியலாளர் மத்தியிலும் ஒரு முக்கிய பேசு பொருளாக இருந்து வருகிறது.

அரிஸ்டோட்டலினது "கவிதையியல்"(poetics) கிரேக்க அழகியலின் ஒரு முக்கிய நூலாகக் கருதப் படுகிறது. கிரேக்க அழகியலே மேலைத்தேய அழகியலின் மூலமாகக் கொள்ளப்படுகிறது. அரிஸ்டோட்டல் கி.மு. 4ம் நூற்றாண்டிற்குரியவர். இவரது "கவிதையியல்" அக்கால கிரேக்க இலக்கியம் பற்றிய ஒரு கலைக் கோட்பாடாகக் கருதப்படுகிறது.

அரிஸ்டோடலினது சிந்தனையின் ஒரு பகுதி மட்டுமே பாதுகாக்கப்பட்டு எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதுவே கவிதையியல், துன்பியல் நாடகங்களை மையப்படுத்திய ஒரு கோட்பாடாகும். இது இவரது முழுமையான கலை பற்றிய கருத்துக் களையும் உள்ளடக்கியிருப்பதாகக் கருத முடியாது.

கவிதையியல் நாடகப் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் இலக்கிய விமர்சனக் கருத்தாடல்களுக்கு அரஸ்டோட்டல் அளித்த மிக முக்கிய பங்களிப்பாக நாம் கவிதையியலைப் கருதலாம். கவிதையியல் கவிதையினை ஒரு கலை வடிவாக நிலை நிறுத்தி அதனை ஆராய சில அடிப்படையான விதிகளை முன்வைத்துள்ளது.

கவிதையியலின் முக்கிய நோக்கம் இலக்கியத்தின் பண்புகளை ஆராய்வதைவிட இலக்கியத்தை விமர்சன நோக்கோடு அணுகுவதற்கான ஒரு அணுகுமுறையினை அறிமுகப்படுத்துவதேயாகும்.

கவிதையியலானது அரிஸ்டோட்டலின் பொதுவான மனித நடவடிக்கைகள் சம்பந்தமான கருத்தியலின் ஒரு பகுதியாகவே இனங்காணப்பட்டுள்ளது. அரிஸ்டோடல் மனித நடவடிக்கைகளை மூன்று பிரிவுகளாக ஆராய்கிறார். ஒன்று சிந்தனை(thought) மற்றையது நடத்தை(action) மூன்றாவது வெளிப்பாடு (Production)


அரிஸ்டோடல் கலை இலக்கியத்தின் முக்கிய பண்பாக "போலச்செய்தல்"(imitation) என்ற செயற்பாட்டை குறிப்பிடுகிறார். இந்த "போலச் செய்யும்" ஆற்றலால் தான் கலை இலக்கியங்கள் மனித வெளிப்பாட்டுக்கு உதவுகின்றன என அவர் கருதுகிறார்.

**கவிதையியலின் முக்கிய கருத்துகள்**

அரிஸ்டோட்டில் கவிதையியலிலே கவிதைகளின் வகைகள், நல்ல கவிதையின் அமைப்பு, கவிதை ஏற்படுத்தும் தாக்கம் என்பவற்றைப் பற்றி ஆராய்ந்துள்ளார். இவர் கவிதையை ஒரு "போலச் செய்யும்" கலை வடிவமாகவே காண்கிறார். இதிலே மனித நடத்தைகள், உணர்வுகள் என்பன பிரதிபலிக்கப்படுவதனால் இது வாழ்க்கையின் பிரதிபலிப்பாகவே அரிஸ்டோட்டில் கருதுகிறார்.

கவிதையியல் கவிதையினை பல்வேறு வகைகளாகவே பிரித்துக் காட்டியுள்ளது. இவற்றிலே காவியம், துன்பியல், இன்பியல் என்பன முக்கியமான பிரிவுகளாகக் கருதப்படுகிறது.

அரிஸ்டோட்டலின் கருத்துப் படி துன்பியலானது மனிதனை உயர் நிலையில் வைத்துப் பிரதிபலிக்கும் ஒரு கலைவடிவமாகும். அதேவேளை இன்பியலானது மனிதனை இழிநிலை யிலே காட்டுவதாக அவர் கருதுகிறார். இன்பியலை கீழ்நிலை மனிதருக்கான ஒரு கலைவடிவமாக கவிதையியல் காட்டுகிறது.




துன்பியலிலுள்ள முக்கிய ஆறு கூறுகளைப் பற்றி அரிஸ்டோட்டல் விளக்கியுள்ளார். அவையாவன, சம்பவங்களின் அமைப்புமுறை(plot), கதையின் பண்பு (character), எண்ணம் (thoughts), பேச்சு(Speech), பாட்டு (melody), காட்சி (spectacle). இவற்றிலே சம்பவங்களின் அமைப்பே துன்பியலின் மையமாகக் கருதப்படுகிறது. ஏனையவை இதற்குப் பக்கபலமாக அமைவன. சம்பவங்களின் அமைப்பு முறையானது தொடக்கம், நடு, முடிவு என்ற நிச்சயமான பகுதிகளாலானது. சம்பவங்களின் அமைப்பு தான் இலக்கியத்தின் போக்கையும் ஒன்றிணைந்த தன்மையினையும் தீர்மானிக்கிறது.

சம்பவங்களின் அமைப்பு முறையானது ஆச்சரியங்களையும், எதிர்பாராத திருப்பங்களையும் புதிய தரிசனங்களையும் துன்பங்களையும் கொண்டிருக்க வேண்டும். இவை எல்லாம் இணைந்து ஏற்படுத்தும் தாக்கத்தினால்தான் பார்வையாளனது உணர்வுகள் செப்பனிடப்படுகிறது(catharsis). குறிப்பாக பயம், கருணை ஆகிய உணர்வுகளே பார்வையாளனில் செப்பனிடப்படுவதாக அரிஸ்டோட்டல் கருதுகிறார். கதாநாயகனின் நிலை கண்டு பரிதாபப்படலும் தமக்கு என்ன நடக்குமோ என்ற பயஉணர்வுமே துன்பியலின் விளைவுகளாக அரிஸ்டோட்டல் கருதினார்.

இந்த "உணர்வுகளை செப்பனிடுதல்" அல்லது "கதாசிஸ்" என ஆங்கிலத்தில் வழங்கப்பெறும் கருத்தாக்கமானது கவிதையியல் முன் வைக்கும் இலக்கியத்தின் விளைவு சம்பந்தமான ஒரு முக்கிய கருத்தாக்கமாகும். "கதாசிஸ்" துன்பியல் இலக்கியம் ஏற்படுத்தும் ஒரு முக்கிய விளைவாக அரிஸ்டோட்டல் கருதுகிறார்.

இந்த "கதாசிஸ்" என்ற பதத்திற்கு இரண்டு விளக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன. ஒன்று "கதாசிஸ்" மனித மனத்தை எந்த உணர்வுத் தாக்கத்தையும் உள்வாங்கக் கூடிய பக்குவ நிலைக்கு இட்டுச் செல்கிறது எனக் கூறுகிறது. அதாவது "கதாசிஸ்" மனிதமனத்தை செப்பனிடு கிறது எனக் கூறலாம். இரண்டாவது விளக்கம் அது மனித உணர்வுகளைச் சுத்திகரிக்கிறது என்பதாக அமைகிறது. இந்த இரண்டு விளக்கங்களிலும் முன்னையதே பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.




கதையில் வரும் தலைவனின் முக்கிய நான்கு பண்புகள் பற்றி கவிதை யியல் விபரிக்கிறது. ஒன்று தலைவனான வன் ஒழுக்க நெறியைப் பேணும் ஒழுக்க சீலனாக இருக்க வேண்டும், இரண்டாவ தாக தலைவன் ஆண்மை நிறைந்தவனாக இருக்க வேண்டும். மூன்றாவது தலைவன் வாழ்க்கைக்கு உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும். நான்காவதாக தலைவன் சொல்லாண்மை மிக்கவனாக இருக்கவேண்டும்.

கவிதையியலில் சொற்கள் பற்றியும் மொழி பற்றியும் சில குறிப்புகள் உள்ளன. எழுத்து எழுத்தின் உச்சரிப்பு, சொற்களின் பிரயோகம், பற்றியும் கூறப்பட்டுள்ளது. சொல்லானது சாதாரண சொல், பிற மொழிச் சொல், உவமை, அலங்காரச் சொல், இணைப்புச் சொல், நீட்டப்பட்ட அல்லது குறுக்கப்பட்ட சொல் அல்லது மாற்றியமைக்கப்பட்ட சொல்லாகவோ பிரயோகிக்கப்படலாம் எனக் கவிதையியல கூறுகிறது. உவமை பற்றியும் கவிதையில் உவமையின் உபயோகம் பற்றியும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

துன்பியல் நாடகங்களும் காவியங்களும் ஒரே வகையினவாக கவிதையியலிலே கூறப்பட்டுள்ளன. இருப்பினும் இவை இரண்டிற்குமிடையிலான சில முக்கிய வேறுபாடுகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

கவிதையியலிலே அரிஸ்டோட்டல் "போலச் செய்தல்" பற்றி விளக்கிக் கூறியுள்ளார். கவிஞர்கள் உள்ளதை உள்ளபடியேகூறலாம் அல்லது இருக்கக் கூடிய அல்லது இருக்க வேண்டிய நிலை பற்றிக் கூற லாம். வெவ்வேறு கலை வடிவங்களில் இந்த "போலச் செய்தல்" பல்வேறு வகைகளில் வெளிப்படலாம் என கவிதையியல் கூறுகிறது. இது மொழிக்கூடாகவோ, இசை மூலமோ, காட்சி மூலமோ வெளிப்படுத்தப்பட லாம். ஒரு கலையில் "போலச் செய்தலில்" தவறுகள் ஏற்படுமாயின் அது கலையின் இறுதி வடிவைப் பாதிக்கிறது.

இறுதியாக கவிதையியலில் காவியமா, துன்பி யலா உயர்ந்தது என்ற ஆராய்ச்சியில் இறங்குகிறார் அரிஸ்டோடல். அவரது விளக்கத்தின் படி துன்பியலே காவியத்தை விட உயர்ந்ததாக கவிதையியல் காட்டி நிற்கிறது.

**கவிதையியல் - தொல்காப்பியம் - ஒப்புநோக்கு**

கவிதையியலில் அரிஸ்டோட்டல் முன் வைத்துள்ள கருத்துக்களை நாம் ஆழ்ந்து நோக்கும் போது இந்தக் கருத்துக்கள் ஏறக்குறைய எல்லாமே தொல்காப்பி யத்தில் குறிப்பாகப் பொருளதிகாரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

கவிதையியலானது கிரேக்க நாடகக் கலையை மையப்படுத்தி எழுதப்பட்டிருந் தாலும் அதில் முக்கியம் பெறுவது நாடகப் பிரதியின் இலக்கிய முக்கியத்துவமே யன்றி நாடகத்தின் நிகழ்த்துகையல்ல.

இதனை ஒரு இடத்தில் அரிஸ்டோடல் "இது நடிக்கப்படுவதால் ஏற்படும் தாக்கமல்ல அதன் பிரதியை வாசிப்பதால் ஏற்படும் தாக்கம்" எனக் கூறினார். ஆக துன்பியலின் தாக்கம் நடிப்பினால் அல்லாது அதனை வாசிப்ப தனாலேயே ஏற்படுகிறது என நாம் கருதலாம்.

பரத முனியின் நாட்டியசாஸ்திரத்தில் இருப் பதைப்போல கவிதையியலில் நாடகம் சம்பந்தமான எந்த ஒரு தொழில்நுட்ப விடயங்களும் உள்ளடக்கப்பட வில்லை. கவிதையியல் நாடகத்தின் இலக்கிய பிரதி பற்றிய ஒரு விமர்சனஅணுகுமுறையினைத் தான் முன்வைக்கிறது. கவிதையியலின் இந்தப்பண்பு கவிதையியலை தொல்காப்பியத்துடன் ஒப்பு நோக்குவது பொருத்தமானது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அத்துடன் கவிதையியலும் தொல்காப்பியமும் ஒரே காலத்திற்குரிய இலக்கியங்களைப் பற்றியே பேசுகின்றன. கவிதையியல் கி.மு. 4ம் நூற்றாண்டிற்கு உரியது, தொல்காப்பியத்தின் காலம் சர்ச்சைக்குரிய தாக இருந்தாலும் அது பேசும் இலக்கியம் கி.மு.4ம், 5ம் நூற்றாண்டுக்கு உரிய இலக்கியங்களையுமும் உள்ளடக்கியுள்ளது. ஆகவே தொல்காப்பியமும் கவிதையியலும் காலத்தாலும் ஆய்வுப் பொருளினடிப் படையிலும் ஒத்தனஎன்பது தெளிவு.

கவிதையியலின் ஆரம்பப்பகுதி கவிதை, செய்யுள், காவியம் அவற்றின் வகைகள் பற்றிக் கூறு கிறது. மேலும் "போலச்செய்தல்" எப்படி வெவ்வேறு கலை இலக்கிய வடிவங்களில் வெளிப்படுகிறது என்பது பற்றியும் ஆராய்கிறது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப் படும் இலக்கிய வகை செய்யுள் பற்றியதாகவே அமைகிறது. தொல்காப்பியத்திலே நாடகம் பற்றியோ, வேறு கலைகளைப் பற்றியோ எந்தவித விபரிப்பும் இடம்பெறவில்லை. செய்யுள் அவற்றின் அமைப்பு வடிவம் பற்றி பொருளதிகாரத்தின் செய்யுளிலேயே மிக விளக்கமாக ஆராயப்பட்டுள்ளது.

கவிதையியலிலே மனிதர்களின் தன்மைகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கதை மாந்தரின் தன்மைக்கேற்ப இலக்கியத்தின் தரமும் நிர்ணயிக்கப் படுகிறது. கீழ் மக்கள் சார்ந்த இலக்கியமாக இன்பியலும்(comedy) உயர் மக்கள் சார்ந்த இலக்கியமாக துன்பியலும் காட்டப்படுகிறது. ஆக கவிதையியலிலே சமூகமும் மக்களும் ஒழுக்க நெறியின் அடிப்படையில் நோக்கப் படுவதை காணலாம்.

தொல்காப்பியத்திலே சமூகம் எந்தவொரு ஒழுக்கநெறி அளவைகளுக்கூடாகவும் அளக்கப்பட வில்லை. அங்கு உள்ளது உள்ளபடியே நோக்கப்படு கிறது. எல்லா மனிதப் பண்புகளும் ஒரு சமூகத்தின் தவிர்க்க முடியாத கூறுகள். அவை அப்படியே இலக்கியத்தில் "போலச் செய்யப்படுகிறது" என்பதை நாம் தொல்காப்பியத்திலே காண்கிறோம் இதனை ஒரு பரிமாணமாகவே கைக்கிளை, பெருந்திணை என்பன வும் ஏனைய திணைகளுடன் முன் வைக்கப்பட்டுள்ளன.

கவிதையியலிலே நாடக இலக்கியத்தின் துன்பியல், இன்பியல் என்ற இரண்டு பிரிவுகள் பற்றிப் பேசப்படுகிறது. இந்த இரண்டு பிரிவுகளும் தர அடிப்படையில் நோக்கப்பட்டாலும் அடிப்படையில் இது மனித உணர்வுகள் சார்ந்த ஒரு பாகுபாடேயாகும்.

இதனைப் போலவே தொல்காப்பியமும் அக, புற இலக்கியம் பற்றிப் பேசுகிறார். இந்த அக, புற பாகுபாடு பண்டைய வாழ்வின் இரு முக்கிய பரிமாணங்களைப் பற்றியதாக அமைகிறது.

அக இலக்கியம் தலைவன், தலைவிக்கிடை யிலான உறவும் அதன் பாற்பட்ட செயற்பாடுகள் பற்றியதாகவும் அமைகிறது. புற இலக்கியம் வீரம், ஈகை போன்ற பிற விடயங்களை முதன்மைப்படுத்துகிறது. ஆக தொல்காப்பியம் காட்டும் இந்தப் பாகுபாடு கவிதையியலில் உள்ளது போன்று ஒழுக்க நெறியினடி யாக அன்றி வாழ்வின் சமூக உளவியலினடியாகப் பிரிக்கப்படுவதனை நாம் அவதானிக்கலாம்.

துன்பியல் இலக்கியமே சிறந்த இலக்கிய வடிவமாக கவிதையியல் கருதுகிறது. இதன் காரண மாக துன்பியலின் வடிவம் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. துன்பியலின் முக்கிய பகுதிகளாக சம்பவ அமைப்புமுறை(plot), கதையின் பண்பு(character), எண்ணம்(thought), பேச்சு (direction), பாட்டு(song), காட்சி(spetacles) என்பவை காட்டப் பட்டுள்ளன. இவையே துன்பியலின் அடிப்படை பண்பாக அமைகிறது. குறிப்பாக சம்பவ அமைப்பை மையப்படுத்தியே துன்பியல் இலக்கியம் ஆராயப்படுகிறது.

கவிதையியலின் முக்கிய ஆய்வுப் பொருளான துன்பியல் சம்பவ அமைப்பையும் இதர பண்புகளையும் சுற்றியே கட்டியெழுப்பப்படுகிறது. இது தொல் காப்பியத்தின் திணை மரபிற்கு ஓரளவு சமாந்தரமானது எனக் கருதலாம். காரணம் திணை மரபு தான் சங்க இலக்கியத்தின் அச்சாணியாகக் கருதப்படுகிறது. எப்படி துன்பியலின் வடிவத்தின் அடிப்படையாக சம்பவ அமைப்பு முறை கருதப்படுகிறதோ அதே போல் சங்க இலக்கியத்தின் வடிவத்தின் அடிப்படை திணை மரபே என்பது மறுப்பதற்கில்லை.

அரிஸ்டோடல் கூறும் துன்பியலின் இந்த ஆறு கூறுகளும் துன்பியல் இலக்கியத்தின் வடிவ ரீதி யான அலகுகளாகவே காட்டப்படுகின்றன. அத்துடன் இவை துன்பியல் இலக்கியத்திற்குத் தனித்துவமான கூறுகள் அல்ல. உதாரணமாக சம்பவ அமைப்பு முறை என்பது எந்த ஒரு புனைவு இலக்கிய வடிவத்திற்கும் பொருந்தக் கூடியது. ஆனால் திணை மரபு என்பது சங்க இலக்கியத்திற்கே உரிய ஒரு தனித்துவமான ஒரு பண்பாகும்.

திணை மரபானது மனித உணர்வுகளையும் மனித நடத்தைகளையும் இயற்கையுடன் பின்னிப் பிணைக்கும் ஒரு ஊடகமாகக் கையாளப்படுகிறது. இது மனிதன் இயற்கையிலும் இயற்கை மனிதனிலும் தங்கி நின்று வாழ்வதை வலியுறுத்தும் ஒரு அமைப்பு முறையாகத் தொழிற்படுகின்றது. இப்படியான ஒரு இலக்கியக் கோட்பாடு உள்வாங்கப்படாததனால் போலும் மேற்குலகு இன்று சூழலியல் விமர்சனம் (Ecocriticism) போன்ற கோட்பாடுகளைச் சற்றுக் காலம் தாழ்த்தி கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று.

கவிதையியலில் துன்பியல் இலக்கியம் எப்படி யாக பார்வையாளனில்/வாசகனில் தனது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றி அரிஸ்டோடல் தனது கோட்பாட்டினை முன் வைத்துள்ளார். இவை கவிதையி யலில் அரிஸ்டோட்டல் முன்வைக்கும் முக்கிய

அழகியல் கருதுகோளாகும். இதுவே "கதாசிஸ்" என அழைக்கப்படுகிறது. இத்தகைய ஒரு கோட்பாடு தொல்காப்பியத்திலோ அல்லது நாட்டிய சாஸ்திரத்திலோ முன் வைக்கப்படவில்லை. இருந்தாலும் உணர்வு வெளிப்பாடு சம்பந்தமான கருத்துகள் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டியலிலே உணர்வுகள் பற்றி கருத்துக் களுடன் ஒப்பிட்டு நோக்கலாம்.

"கதாசிஸ்" பயம், கருணை ஆகிய இரு உணர்வுகளை மட்டுமே மையப்படுத்திய கருத்தாக அமைகிறது. ஆனால் மெய்ப்பாட்டியல் எட்டு உணர்வு களையும் அவற்றிற்கான நிலைக்களன்களையும் விளக்கிக் கூறுகிறது.

இந்த மெய்ப்பாடுகள் கதை மாதர்பால் ஏற்படும் உணர்வுப் பரிமாணம் போன்றே கூறப்பட்டுள்ளது. ஆனாலும் இதே உணர்வுகள் தான் வாசகனிலும் தூண்டப்படுகிறது என்பது அடிப்படையான உண்மை. ஆக மெய்ப்பாட்டியல் கூறும் மெய்ப்பாடுகள் எல்லாம் சங்க இலக்கியம் வாசகனில் ஏற்படுத்தும் உணர்வுத் தாக்கங்கள் பற்றியது எனக்கொள்ளலாம்.

கவிதையியலில் அரிஸ்டோடல் தலைவனின் பண்புகளைப் பற்றிக் கூறுகின்றார். தொல்காப்பியத்தில் அகத்திணையியலும் புறத்திணையியலும் கதை மாந்தரின் பண்புகளை பற்றிக் கூறுகிறது. தொல்காப்பியத்திலே தலைவனைப் பற்றி மட்டுமன்றி மற்றைய பாத்திரங்களைப் பற்றியும் கூறப்பட்டு அவர் களுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள தனை நாம் காணலாம். அத்துடன் தொல்காப்பியத்தில் ஆண் பெண் என்ற இருபாலாரையும் தனித்தனியே இனம் காட்டி அவர்களது முக்கியத்துவம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

கவிதையியல் சொற்களின் பாவனை பற்றியும், எழுத்து உச்சரிப்பு, சொற்றொடர்கள் பற்றியும் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. தொல்காப்பியத் திலே எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் எழுத்து சொல் என்பவை பற்றி மிக மிக விரிவான விளக்கமும் முன் வைக்கப்பட்டுமுள்ளது.

இலக்கியத்திலே உவமையின் பங்கு பற்றி தொல்காப்பியத்தின் உவமையியலியே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் குறிப்பாக உள்ளுறை, இறைச்சிப் பொருள் என்பவை சங்க இலக்கியத்திற்கே உரித்தான உவமையணிகளாகக் காட்டப்பட்டுள்ளன. உவமை இலக்கியத்திற்கு எவ்வாறு அணி சேர்கிறது என்பதை கவிதையியலை விட தொல்காப்பியமே மிகச் சிறப்பாக வெளிக்காட்டியுள்ளது.

தொல்காப்பியம் கவிதையியலைப் போல வெவ்வேறு வகையான இலக்கிய வடிவங்களைப் பற்றிப் பேசவில்லை. இதனால் காவியம் பற்றியும் காவியத்திற்கும் கவிதைக்குமான ஒற்றுமை வேற்றுமை களைப் பற்றி தொல்காப்பியம் விபரிக்க வில்லை ஆனால் அரிஸ்டோடல் துன்பியலையும் காவியத்தை யும் ஒப்பிட்டு தனது கருத்துக்களை கவிதையியலிலே முன் வைத்துள்ளார்.

கவிதையியல் ஒரு இலக்கியம் எப்படியாக அமைய வேண்டும், அதனது இயக்கத்திற்கான அமைப்புமுறை என்ன, அது வாசகனில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பவை சார்ந்த கருத்துக்களை முன் வைத்துள்ளது.

தொல்காப்பியம் மனித வாழ்விற்கும், இயற்கைக்குமான தொடர்பு, மனிதர்களுக்கிடையிலான உறவுமுறை அதில் ஏற்படக் கூடிய சிக்கல்கள் என்பவற்றை யதார்த்த பூர்வமாக முன் வைக்கிறது.

தமிழ் அழகியற் சிந்தனைகளின் ஆரம்பப் புள்ளியாக நாம் தொல்காப்பியத்தைக் கருதலாம். தொல்காப்பியம் இன்னமும் வரன்முறையான மேலைத் தேய அணுகுமுறைசார்ந்த ஆய்வுகளுக்கு உட்படுத்தப் படவில்லை. இதன் காரணமாக தொன்று தொட்டு தமிழில் வழங்கி வரும் அழகியல் அணுகு முறைகள் தக்க கவனிப்பைப் பெறத் தவறிவிட்டன. இந்த இடை வெளியை நிரப்ப தமிழியல் ஆய்வுகள் விரிவுபடுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. ●

---

பொலிகை சு.க.சிந்துதாசன்

# குருதி பெய்த வார்த்தைகள்

இறுதித் துளியையும்
ஒற்றியெடுத்தாயிற்று.

நீர்துடைத்துக் களைத்த கரங்கள்..
தீப்பந்தங்களோடு,
அலைகின்றன.

அவர்கள் அலையும்
காடுகளில்...
சேறும் சகதியும்
காட்டாறும் கிடையாது.

விசாலித்த வனத்தின்
அடிவயிற்றிலிருந்து
கொப்பளிக்கிறது தீ.

பசுமைகளைத் தின்றுலவும்
அவர்களின் சுவாசக்காற்று,
"சமுத்திரமற்றோரைப்"
பலியிட்டிற்று.

எமதிருப்பு வெளியைத்
திரும்பியும் பார்க்காமல்...

குருதி பெய்த வார்த்தைகளைக்,
கடந்து போகின்றன...
பறவைகள்.

திசையறியாக் குளிர்வின்
கால்கள் பட்டு,
இடிக்கும் மேகங்கள்..
வெள்ளக்கனவுகள்
பொய்த்துப் போன கணத்தில்..
மீண்டும்,
கருக்கட்டிற்று.

குறுங்கதை

# உறுத்தல்



"சே... எனக்கு என்ன நடந்தது? ஏன் இப்படி அந்த அம்மாவைக் கருத்திலேயே எடுக்காமல் அப்படியே வேகமாகக் கடந்து வந்து விட்டேன். ஒரு நாளுமே நான் இப்படி நடந்து கொண்டதில்லையே..."

ஏதோ குற்றம் செய்து விட்டது போன்ற உணர்வு மனதை உறுத்தத் தொடங்கியது.

அந்தப்புகையிரத நிலையத்தை விட்டு வெளியே வந்தபோது பிரதான வாசலின் அருகே ஒரு வயதான அம்மா பிச்சைக்காக இருக்கிறாள். முழங்காலுக்கு மேலாகத் தொடையிலிருந்து ஒரு கால் இல்லை. லுங்கி கட்டியிருந்தாலும் வெளிப்படையாக அந்த ஊனம் தெரிகிறது. பக்கத்தில் ஒரு ஊன்று கோல்.

"மாத்தயா..."

சிங்களத்தில் ஏதோ சொல்லி காட்டிக் கும்பிட்டுப் பிச்சை கேட்கும் பாவனை.

சிங்களம் விளங்காவிட்டாலும் தனக்குச் சரியான பசி என்கிறாள் என்பதை விளங்கிக் கொள்ளக் கஷ்டம் ஏதும் இருக்கவில்லை அவனுக்கு.

ரயிலிலிருந்து இறங்கி வேகமாக நடந்து கொண்டிருக்கும் மற்றையோருக்கு ஈடுகொடுக்கும் விதமாக அவனும் வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தான்.

கொழும்பில் பஸ்ஸிலோ ரயிலிலோ பஸ்நிலையத்திலோ வீதியோரத்திலோ பிச்சையெடுப்பவர்களைச் சந்திக்கும் போது அவர்கள் உண்மையாகவே பிச்சையெடுக்க வேண்டியவர்கள்தான் என்று மனதில் பட்டால் ஒருவர், இரண்டு பேருக்காவது ஒரு இருபது ரூபாவாவது கொடுத்து விட்டுச் செல்வது இவனது வழக்கம்.

அதிகம் ஏன்... மாதத்தில் ஓரிரு தடவைகள் பெரிய கோவில்களுக்குச் செல்லுகின்ற தருணங்களில் இருநூறு அல்லது முன்னூறு ரூபாவை இருபது ரூபாத்தாள்களாக மாற்றிக் கொண்டு சென்று கோயில் உண்டியலில் போட்டானோ இல்லையோ அங்கிருக்கும் பிச்சைக் காரர்களுடைய தட்டில் போட்டுத் திருப்தி கொள்வது தானே இவனது குணம்.

பெரிய சாப்பாட்டுக் கடைகளில் அதிகமாகச் செலவழித்துச் சாப்பிட்டு விட்டு அங்கு உணவு பரிமாறியவர்களுக்கும் "லெவலாக", "டிப்ஸ்" கொடுத்து விட்டு வெளியே வாசலில் வாய் பார்த்துக் காத்திருக்கும் பிச்சைக்காரனைக் கவனிக்காத மாதிரி போகிறவர்களைப் பார்த்து இவன் வெறுப்படைவான். அவனா இன்று இப்படி...

மனதிற்குள் அந்த "மாத்தாய..." காட்சி மெலிஞ்சி முள்ளாய் குத்தியது.

நேரத்தைப் பார்த்தான். பாஸ்போர்ட் அலுவலகத்திற்குப் போகின்ற அலுவலுக்கும் நேரம் மட்டுமட்டாகத் தான் இருக்கிறது. இனி அடுத்த பஸ்ஸைப் பிடிக்க வேண்டும். நூறு மீற்றருக்கு மேல் நடந்து வந்து விட்டான்.


"இனி நான் அந்த அம்மாவை எப்ப காண்பனோ?

சட்டென்று திரும்பினான். வந்த பாதையில் நடக்கத் தொடங்கினான். அந்த அம்மா அதே இடத்தில் அதே கெஞ்சலில்.. அருகில் உள்ள சாப்பாட்டுக் டையில் ஒரு சோற்றுப்பார்ஸலும் ஒரு தண்ணீர்ப் போத்தலும் வாங்கினான். தண்ணீர்ப்போத்தலின் மூடியைத் திருகி திறந்தான். பார்ஷலையும் தண்ணீர்ப் போத்தலையும் அந்தத்தாயின் கையைப் பிடித்து கைக்குள் வைத்தான்.

"மாத்தயா..."

ஏதோ சொல்லி, வாஞ்சையுடன் அவனது கையைப்பிடித்து முத்தமிட்டாள். அந்தத் தாயின் கன்னத்தை ஒரு முறை வருடி விட்டு கையை விலக்கி எடுத்துக் கொண்டு வேகமாக நடக்கத்தொடங்கினான்.

கொற்றை
பி. கிருஷ்ணானந்தன்



# ஈழத்து ஓலைச்சுவடி ஆவணப்படுத்தலும் - பாதுகாப்பும்

தி.ரிலக்ஷன்

நூலக நிறுவனம் பிரித்தானிய நூலகத்தின் ஆதரவுடன் (Endangered Archives Programme) ஓலைச் சுவடி ஆவணப்படுத்தலில் ஈடுபட்டு வருகின்றது. (EAP1056) கிட்டத்தட்ட 60000 இற்கும் அதிகமான ஓலைச்சுவடிப்பக்கங்கள் அடையாளம் காணப் பட்டிருப்பதுடன் 25000 இற்கும் அதிகமான ஓலைச்சுவடி பக்கங்கள் சர்வதேச நியதிச்சட்டங்களுடன் எண்ணிமப் படுத்தப்பட்டுள்ளன. ஓலைச்சுவடி என்றால் என்ன? அதன் தேற்றம், எழுதும் முறை, ஓலைச்சுவடிகளை பாதுகாக்கும் முறை என்பன பற்றி ஆராய்வோம்

பனை மரத்தில் உள்ள ஓலைகளில் அதிக முற்றலும், அதிக இளமையானதும் இல்லாமல் நடுநிலை யில் உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து (இவை நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கக் கூடியவை), அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து நரம்பு நீக்கித் தனக்குத் தேவையான அளவு நறுக்கி எடுப்பர். இதனை "ஓலைவாருதல்" என்பர். ஒத்த அளவாக உள்ள ஓலைகளை ஒன்று சேர்த்தலைச் "சுவடி சேர்த்தல்" என்பர். பனை ஓலைகளின் மேற்பரப்பு கடினமானதாக இருப்பதால் பதப்படுத்தாமல் ஓலைகளில் எழுத முடியாது. அவற்றை எழுதுவதற்குத் தக்க மிருதுவாக்க வேண்டும். அப்போதுதான் எழுதுவதற்கு எளிதாகவும் சேதமுறாமலும் இருக்கும். பதப்படுத்துவதால் ஓலைகள் விரைவில் அழியாமலும், பூச்சிகளால் அரிக்கப் படாமலும் பாதுகாக்கப்படுகின்றன. அதனால் எழுதுவதற்காக வெட்டப்பட்ட ஓலைகளைப் பதப்படுத்த நிழலில் உலர்த்தல், பனியில் போட்டுப் பதப்படுத்தல், வெந்நீரில் போட்டு ஒரு சீராக வெதுப்பி எடுத்தல், சேற்றில் புதைத்தல் போன்ற பல முறைகளைக் கையாண்டுள்ளனர்.

சுவடிகள் எவ்வாறு தயாரித்துப் பதப்படுத்தப் பட்டன என்பதை, "சுவடிகள் தயாரிப்பதற்கு முதலில் பனையோலைகளைத் தேவையான அளவில் கத்தரித்துக் கொள்வர். இவ்வாறு அளவு செய்து கொள்ளப் பட்ட ஏடுகள் மிக நன்றாக உலர்த்தப்படும். சற்றும் ஈரமின்றி நன்றாகக் காய்ந்த பிறகு இவ்வோலைகள் தண்ணீரில் இட்டு வேகவைக்கப்படும். இவ்வாறு இவை கொதிக்க வைக்கப்படுவதால் ஏடுகளில் ஒரு துவள்வு ஏற்படுகிறது. பிறகு ஓலைகள் மறுபடியும் நன்கு காய வைக்கப்படும், காய்ந்த பிறகு கனமான சங்கு அல்லது மழுமழுப்பான கல்கொண்டு ஓலைகளை நன்றாகத் தேய்ப்பார்கள். இப்படிச் செய்வதால் ஏட்டிற்கு ஒரு பளபளப்பு ஏற்படும். மேலும் நேராகத் தகடுபோல ஆகிவிடும். இப்போது ஏடு எழுதுவதற்கு ஏற்ற நிலையை அடைந்து விட்டது. இம்முறைக்கு ஏட்டைப்பாடம் செய்தல் அல்லது பதப்படுத்துதல் என்று பெயர்.

"ஓலையைப் பதப்படுத்த பலமுறைகள் பயன் படுத்தப்பட்டன.அவற்றுள் சில முறைகள்,

அ. ஓலைகளைத் தண்ணீர் அல்லது பாலில் வேகவைத்தல்,
ஆ. நீராவியில் வேகவைத்தல்,
இ. ஈரமணலில் புதைத்து வைத்தல்
ஈ. நல்லெண்ணெய் பூசி ஊறவைத்தல்
உ. ஈரமான வைக்கோற் போரில் வைத்திருத்தல்

சில முறைகளில் ஓலைகளின் மேற்பரப்பு மிருதுவானதுடன் அதில் உள்ள லிக்னின் என்ற பொருள் வெளியேற்றப்படுகிறது. இதனால் ஓலைகள் விரைவில் சிதலமடைவதில்லை. ஒரிசாவில் பாதுகாப்பிற்காக மஞ்சள்நீர் அல்லது அரிசிக்கஞ்சியில் அரைமணி நேரம் ஊறவைத்துப் பதப்படுத்தினர்" (சுவடிச்சுடர், ப.429) என்று ப. பெருமாளும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பதப்படுத்திய சுவடிகளில் ஒன்று அல்லது இரண்டு துளைகளிடுவர். இதனை "ஓலைக் கண்" என்பர். ஒரு துளையில் கயிற்றை நுழைப்பர். கயிறு உருவாமலிருக்க ஈர்க்குடன் உள்ள ஓலையில் இரண்டு முக்கோணங்கள் உள்ளதாக கிளிமூக்குப் போலக் கத்தரித்துக் கட்டியிருப்பர். இதற்கு "கிளிமூக்கு" என்று பெயர். மற்றொரு துளையில் ஒரு குச்சி அல்லது ஆணியைச் செருகியிருப்பர். இதற்குச் "சுள்ளாணி" என்று பெயர். சுவடிகளுக்கு மேலும் கீழும் மரத்தாலான

சட்டங்களை வைத்துக் கிளிமூக்குக் கட்டப்பட்ட கயிற்றினால் சுவடியை இறுக்கிக் கட்டி வைப்பர். இவ்வாறு சுவடி தயாரித்துப் பதப்படுத்தப்படுகிறது. இதன் பின்னர் சுவடிகளின் சட்டங்களின் அமைப்பினை தாயாரித்தல் பணி நடைபெறும் அதாவது மருத்துவச் சுவடிகள் பலவற்றின் சட்டங்களில் இலைச்சாறு, மஞ்சள், சுண்ணாம்பு போன்ற பொருள்களால் ஆக்கப் பட்ட பலவகை வண்ணங்களால் மூலிகைகளின் படங்கள் வரையப் பெற்றுள்ளன.

சுவடியின் முன்னும் பின்னும் முதுகுநரம்பு நீக்கப்படாத சட்டங்கள் சிலவற்றை அமைத்துச் சுவடிக் கட்டினை உருவாக்குவர். மரம் மற்றும் தந்தத்தால் சட்டங்களை அமைப்பதும் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. ஓலைச் சட்டம், மரம், தந்தங்களின் சட்டங்களிட்டுக் கட்டிய சுவடியினை அழகிய துணியில் சுற்றிவைக்கும் முறையும் இருந்துள்ளது. அழகான நூல்கயிறு அல்லது பட்டுக்கயிறு போன்றவை சுவடியின் ஏடுகளைச் சிதறாமல் பாதுகாத்து நிற்கும். ஒரு துளையில் கயிறு இருப்பதுபோல் மற்றொரு துளை யில் குச்சியோ, ஆணியோ நின்று மேலும் அக் காவலைப் பலப்படுத்தும், இரு முக்கோணங்கள் இணைந்தாற்போல வெட்டப்பட்ட, நரம்போடு கூடிய, கிளிமூக்கு என்னும் ஓலைத்துண்டு கயிற்றின் நுனியில் கட்டப்பெற்றுக் கயிறு கழன்று வராதபடி பாதுகாக்கும். துளையிடப்பெற்ற செப்புக்காசு, உலோகத்தகடு ஆகி யவை கிளிமூக்கிற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னர் ஓலைகள் எழுதுவதற்கான எழுத்தாணி என்பது முக்கியமானது. எழுத்தாணிகள் பற்றி சற்று விரிவாக ஆராய்ந்து பார்த்தால்.

ஓலைகளில் எழுதுவதற்குப் பயன்பட்ட எழுது பொருள் எழுத்தாணி எனப்பட்டது. ஓலைகளில் எழுத் தாணி கொண்டு கீறி எழுதும் முறை மிகப்பழமை யானது. இதற்குப் பயன்பட்ட எழுத்தாணிகள் எலும்பு, தந்தம், பித்தளை, செம்பு, இரும்பு, தங்கம் போன்றவற்றினால் செய்யப்பட்டிருந்தன. தந்தத்தை எழுத்தாணியாகப் பயன்படுத்தி எழுதினர் என்பதை, மகாபாரதத்தை வியாசமுனிவர் சொல்ல விநாயகப் பெருமான் எழுதியதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதில் அவர் எழுதிய எழுத்தாணி தேய்ந்து போனதால் தன்னுடைய கூரிய தந்தத்தை ஒடித்து எழுதியதாகக் கூறப்படுகிறது. இதிலிருந்து தந்தங்களின் கூரிய முனையால் எழுதப்பட்டது என அறியமுடிகிறது. சுவடிகளில் எழுதப் பயன்பட்ட எழுத்தாணிகளை



மூன்று வகைகளில் அடக்கலாம். அவை,
1.குண்டெழுத்தாணி,
2.வாரெழுத்தாணி,
3.மடக்கெழுத்தாணி என்பனவாகும்.

**குண்டெழுத்தாணி**

குண்டெழுத்தாணி என்பது அதிக நீளம் இல்லாமல் கொண்டை கனமாகவும் குண்டாகவும் அமைந்திருக்கும். இதைத் தொடக்க நிலையில் எழுதுபவர்கள் பயன்படுத்துவர். இதன் கூர்மை குறைவாக இருக்கும். இதனைக் கொண்டு பெரிய எழுத்துகளைத்தான் எழுதமுடியும்.

**வாரெழுத்தாணி**

வாரெழுத்தாணி என்பது குண்டெழுத் தாணியை விட நீளமானது. மேற்புரத்தில் கொண்டைக் குப் பதிலாகச் சிறிய கத்தி அமைந்திருக்கும். இக்கத்தி தனியாக இணைக்கப்படாமல் ஒரே இரும்பில் நுனிப்பக்கம் கூர்மையாகவும், மேற்பக்கம் தட்டையாகக் கத்தி வடிவிலும் அமைந்திருக்கும். நுனிப்பக்கம் எழுதவும் மேற்பக்கம் ஓலைவாரவும் பயன்படுவதால் இது வாரெழுத்தாணி என்று அழைக்கப்படுகிறது. நன்றாக ஓலையில் எழுதும் பழக்கமுடையவர்கள் தாங்களே அவ்வப்போது ஓலையினை நறுக்கி, வாரி ஒழுங்குபடுத்தி ஏடுகளாக அமைத்துக் கொள்ளும் நிலையில் இவ்வெழுத்தாணியினைப் பயன்படுத்தினர். இவ்வெழுத் தாணியே பலராலும் பயன்படுத்தப்பட்டது. இவ்வெழுத் தாணியைப் பனையோலையினால் செய்த உறையில் செருகி வைத்திருந்தன.

**மடக்கெழுத்தாணி**

மடக்கெழுத்தாணி என்பது வாரெழுத் தாணியைப் போன்று ஒரு முனையில் எழுத்தாணியும், மறுமுனையில் கத்தியும் அமைந்திருக்கும். ஆனால் இரண்டு பகுதிகளையும் மடக்கி இடையில் உள்ள கைப்பிடியில் அடக்கிக் கொள்ளுமாறு அமைந்திருக்கும். மடக்கிவைக்கும் தன்மை கொண்டதால் இது மடக்கெழுத்தாணி என்று அழைக்கப்படுகிறது. இதன் கைப்பிடி மரம், மாட்டுக்கொம்பு, தந்தம், இரும்பு, பித்தளை போன்றவற்றால் செய்யப்பட்டிருக்கும். இவ்வெழுத்தாணியைப் பயன்படுத்தாதபோது மடக்கி வைப்பதால் பாதுகாப்புடையதாக இருந்தது. அதன் பின்னர் ஓலைகளில் எழுதுவதற்கு ஒரு முறையினை கையாண்டார்கள்

**சுவடியில் எழுதும் முறை**

பழங்காலத்தில் தற்காலத்தில் உள்ளதுபோன்று கல்விக் கூடங்களில் கல்வி கற்பிக்கப்படவில்லை. மாணவர்கள் ஆசிரியரைத் தேடிச் சென்று கல்வி கற்கும் முறை இருந்தது. அக்காலத்தில் காகிதமும் எழுது கோலும் வழக்கிற்கு வரவில்லை. ஓலைகளில் எழுத் தாணியால் எழுதித் தொகுத்த சுவடிகளே நூல்களாக இருந்தன.

ஆசிரியர் முதலில் மாணவரின் வலக்கை ஆள்காட்டி விரலைப் பிடித்து தட்டில் பரப்பி வைத்துள்ள அரிசி (அ) சர்க்கரை (அ) தானியங்களில் எழுத்தை

எழுதிக்காட்டுவார். பின்னர் மணலில் எழுத்தின் வரி வடிவை எழுதிக்காட்டுவார். பிறகு அவர் சொல்லிய தமிழ் எழுத்துக்களைத் தவறின்றிச் சரியாக உச்சரிக்க வேண்டும். தமிழின் ஒலி வடிவை நன்றாகச் சொல்லத் தெரிந்த பின்புதான் ஆசிரியர் எழுத்தின் வரிவடிவை ஓலையில் வரைந்து காட்டுவார். வரிவடிவை மாணவர் நன்றாக எழுத அறிந்து கொண்டதன் பின் ஓலை வாரவும், சுவடி சேர்க்கவும், நன்றாக எழுதவும் முற்படுவர்.

பனை ஓலைகளில் எவ்வாறு எழுதப்பட்டது என்பதை, "இளமை முதலே ஓலையை இடக்கையில் பிடித்து, வலக்கையால் எழுத்தாணியைக் கொண்டு எழுதிப் பழகுவர். எழுத்தாணியைப் பிடித்து எழுதும் போது ஓலையைத் தான் நகர்த்துவர். எழுத்தாணி பிடித்த இடத்திலிருந்தே வரையும், தற்போது தட்டச்சு முறையிலும் தாள்மீது அச்செழுத்துப் படிந்து, தாள் தான் நகர்ந்து போகிறது. அச்செழுத்து மையத்தில் மட்டும் அழுந்துகிறது. வேறு இடங்களுக்கு அது அசைவதில்லை என்ற நுட்பம் இச் சந்தர்ப்பத்தில் அறிந்து ஒப்புநோக்கத் தக்கதாகும். ஏடு எழுதப்பழகிக் கொண்டோர் தமது இடக்கைப் பெருவிரல் நகத்தை வளர்த்து, அதில் பிறைவடிவில் துளையிட்டு, அப்பள்ளப் பகுதியில் எழுத்தாணியை வைத்து, ஓலையில் வரிவரியாக எழுத்தின் மீது மற்றோர் எழுத்துப் படாமலும் ஒரு வரியின் மீது மற்றோர் வரி இணையாமலும் போதிய இடம்விட்டு எழுதுவர். ஒருபக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துகளாக இருபது, முப்பது வரிவரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணியையும் பயன்படுத்துவதுண்டு.

**சுவடியின் எழுத்து முறை**

சுவடிகளில் மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப் பெறமாட்டா. ரகரமும் உயிர்மெய் ஆகாரம் ஓகாரம் இவற்றைக் குறிக்க இணைக்கப்படும் கால்களும் ஒன்று போலவே இருக்கும். எகர ஒகரங்களுக்குரிய ஒற்றைக் கொம்பே ஏகார ஓகாரங்களுக்கும் வழங்கப் பட்டிருக்கும். ஏட்டுச் சுவடியில் எழுதிப் பழகியவர்கள் இந்தச் செய்திகளைத் தாமேயும் பின்பற்றியதனால் ஏனைய ஏட்டுச் சுவடிகளை வாசிப்பதிலும் படி யெடுப்பதிலும் அவர்களுக்கு அதிகத் தொல்லை ஏற்பட வில்லை.

பொதுவாக எல்லாச் சுவடிகளும் ஒரேமாதிரி யாக இருந்தாலும் ஒவ்வொரு வகை ஓலைச் சுவடியிலும் ஒவ்வொருவகையில் எழுதும் முறை தனித்துவம் பெற்றிருக்கும். இலக்கியச் சுவடிகளில் பாடல்களின் முடிவில் எண்களைக் காணலாம். இடதுபுற ஓரங்களில் அத்தியாயத் தலைப்புப் பெயர்களைக் காணலாம். மாந்திரிகச் சுவடிகளில் பலவகைச் சக்கரங்களின் (இயந்திரம்) படங்களைக் காணலாம். சோதிடச் சுவடிகளில் ராசி சக்கரங்களைக் காணலாம். வணிகச் சுவடிகளில் பல்வேறு எண்களையும், குறியீடுகளையும் காணலாம். பள்ளிச் சுவடிகளில் பக்கவாட்டில் மூன்று நான்கு பத்திகள் பிரித்து எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கலாம்

தொடக்க காலம் முதல் சுவடிகளில் செய்யுள் வடிவிலேயே எழுதி வந்தனர். செய்யுள் வடிவிலுள்ள வற்றை அனைவராலும் படிக்க இயலாது. அதனால் பல சுவடிகள் படிப்பாரற்றுக் கிடந்தன. இந்நிலை மாற வேண்டும் என்று நினைத்து எழுதத் தொடங்கியதன் விளைவாக கி.பி.15ஆம் நூற்றாண்டிற்குப்பிறகு உரை நடையில் எழுதும் பழக்கமும், உரைநடையுடன் ஓவியத்தை இணைத்து எழுதும் பழக்கமும் தோன்றியது என்பதை, "பாடல் வடிவில் எழுதப்பெற்ற புராணச் சுவடி நூல்களைப் பாமரரும் அறியும் வகையில் வசனமாக (உரைநடையில்) எழுதும் முறையை கி.பி.15ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கைக் கொண்டனர். வசன நடையில் மட்டும் சுவடியில் எழுதுவதைத் தவிர்த்து, எழுத்தோடு ஓவியத்தையும் இணைத்துப் புதுமை படைத்தனர்" இத்துடன் ஓலைச் சுவடிகளில் ஓவியம் வரையும் முறையும் சில சந்தர்ப்பங்களில் காணப்பட்டது.

பனை ஓலைகளில் எழுதுவது கடினமான பணியாகும். அதைவிடக் கடினமானது பனை ஓலை களில் எழுத்தாணிகளைக் கொண்டு ஓவியம் வரைவது. ஓலைகளில் ஓவியம் வரையும் பழக்கம் இருந்தது என்ப தற்கு, "பனை ஓலைகளில் அரிதின் முயன்று எழுத்தாணி கொண்டு சில கோட்டோவியங்களை வரைந்துள்ளனர். இவ்வாறு எழுதப்பட்ட ஓலைகள் கட்டுக்களாக வடி வமைக்கப்பட்டுள்ளன. அதாவது சுவடிகளின் வடி வமைப்பு என்பது சுவடிகளின் புறவடிவங்களைச் சுட்டிக் கூறுவதாக அமைந்துள்ளது. நமக்குக் கிடைக்கக்கூடிய சுவடிகள் பல வடிவங்களில் காணப்படுகின்றன. அவற்றில் சிறிய, பெரிய சுவடிகள், பம்பர வடிவச் சுவடி ஆகியவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

**சிறிய சுவடி**

சுவடிகளில் நீள, அகல, எண்ணிக்கைகளில் குறைந்த அளவுகளை உடையனவற்றைச் சிறிய சுவடி என்று அழைக்கலாம்.

**பெரிய சுவடி**

சுவடிகளின் நீள, அகல, எண்ணிக்கைகளில் அதிக அளவுகளையுடையனவற்றைப் பெரிய சுவடி என்று அழைக்கலாம்.

**பம்பர வடிவச் சுவடி**

ஓலைகளை வட்டவடிவமாக நறுக்கி இடையே துளையிட்டுக் கோர்க்கப்படும் அவ்வட்டவடிவமான ஓலைகளின் குறுக்களவில் (விட்டம்) ஒன்றுற்கொன்று ஒரு ஓலையின் கன அளவு குறைவாக வெட்டப்பட்டுக் கோர்க்கப்படுவதால் முழுவடிவம் ஒரு "பரம்பரை" போல காட்சியளிக்கும். இவ்வாறு நம்முன்னோர்கள் பல இடர்பாடு களுக்கு மத்தியில் தொகுக்கப்பட்ட இவர் களுடைய அறிவு எதிர்கால சந்ததியினரின் பொக்கிஷ மான இவ் ஓலைச்சுவடிகள் அவர்களை பின்தொடர்ந்த சந்ததி யினரின் கவனக்குறைவு மற்றும் அதன் பெறுமதி முக்கியத்துவத்தினை அறியாத காரணத்தினால் ஓலைச் சுவடிகள் இன்று அழிவின் விளிம்பில் நிற்க்கின்றன.

**சுவடிகளின் அழிவு**

பழங்காலத்தில் உருவாக்கப்பட்ட சுவடிகள் ஒரு காலத்திற்குப் பிறகு பாதுகாப்பின்றி அழியத் தொடங்கின.

அவ்வாறு அழிந்ததற்கான காரணங்களை இரண்டு வகைகளில் அடக்கலாம். அவை,

1. இயற்கை அழிவு, 2.செயற்கை அழிவு என்பனவாகும்.

#### இயற்கை அழிவு

சுவடிகளுக்கு இயற்கையாக நிகழ்ந்த அழிவுகளை இயற்கை அழிவு எனக் கூறலாம். பொதுவாக ஓலைச் சுவடிகள் குறைந்த வாழ்நாள் கொண்டவை. கறையான், இராமபாணம், ஈரப்பதம், புகை, நெருப்பு ஆகியவற்றால் விரைவில் பாதிக்கக்கூடியவை. காற்று, மழை, வெயில், தீ ஆகிய இயற்கைச் சீற்றத்தில் சிக்கி அழியக்கூடிய தன்மை கொண்டவை.

சுவடிகள் கடல் கோளாலும், தீயினாலும், பூச்சிகளாலும், தானாக மட்கி அழிந்தனவற்றுள் சிலவே நமக்குத் தெரிகின்றன. பலகோடி சுவடிகள் அழிந்த விதம் நமக்குத் தெரியாமலே போய்விட்டன. இவ்வாறு இயற்கைக்கேடுகள் ஒருபுறம் சுவடிகளை அழித்துக் கொண்டிருக்க மற்றொரு புறம் மனிதர்கள் அறியாமையால் சுவடிகளை அழித்ததைப் பற்றி இனி காண்போம்.

#### செயற்கை அழிவு

தமிழ்ச் சுவடிகள் இயற்கை அழிவுகளைவிடச் செயற்கை அழிவுகளாலேயே மிகுதியாக அழிந்தன என்று கூறலாம். இவ்வழிவுக்கு மன்னரிடையே நிகழ்ந்த போர், அரசியல் மாற்றம், மக்களின் குடிப்பெயர்ச்சி, வெளிநாட்டினருக்கு விற்றல், தீயிலிடுதல், நீரில் எறிதல், கவனமின்மை, பராமரிப்பின்மை போன்றவை காரணங்களாக அமைகின்றன. இப்பகுதியில் நெருப்பிலும் நீரிலும் இடுதல், குதிரைக்கு வெந்நீர் போடுதல், காணாமல் போனவை, அந்நியஉகளால் ஏற்பட்ட அழிவுகள், மூடநம்பிக்கையால் ஏற்பட்ட அழிவுகள் ஆகியவற்றை ஆராய்வோம்.

#### நெருப்பிலும் நீரிலும் இடுதல்

முற்காலத்தில் சமயங்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி, சமய மோதல்களின் காரணமாக என்னுடைய சமயம் உயர்ந்தது, உன்னுடைய சமயம் தாழ்ந்தது என்று கூறி வாக்குவாதம் ஏற்பட்டபோது சமயந் தொடர்பான நூல்களை எரியும் நெருப்பிலும், ஓடும் நீரிலும் போட்டுப் பரிசோதித்தனர். இதற்கு அனல்வாதம், புனல்வாதம் என்று பெயர். இருமதத்தினர்க்கிடையே ஏற்பட்ட சண்டை, பொறாமையின் காரணமாகப் பல சுவடிகள் நெருப்பிலும் நீரிலும் அழிக்கப்பட்டன. நாலடியார் என்ற நூலின் பாடல்களை எண்ணாயிரம் புலவர்கள் பாடியதாகவும் அவற்றை ஆற்றில் போட்டபோது நானூறு பாடல்கள் மட்டும் நீரின்போக்கிற்கு எதிராக வந்ததாகவும் அப்பாடல்களின் தொகுப்பே நாலடியார் என்றும் பேச்சு வழக்குக் கதை ஒன்று கூறுகிறது. இதுபோன்று அழிந்த பாடல்கள் எத்தனை எத்தனை ஆயிரங்களோ தெரியவில்லை.

#### காணாமற்போனவை

ஒரு இடத்தில் பார்த்தசுவடி, படித்த சுவடி சில நாட்கள் கழித்து அங்குச் சென்று பார்க்கும்போது அச்சுவடி அங்கு இருப்பதில்லை. அது எங்கு, எப்படி காணாமற் போனது, என்ன ஆனது என்பது பற்றி யாருக்கும் தெரியாத நிலையில் பல சுவடிகள் அழிந்தன

#### அந்நியர்களால் ஏற்பட்ட அழிவு

வெளிநாட்டினர் ஆய்விற்காகவும், வேறு சில காரணங்களுக்காகவும் நம் நாட்டிற்கு வந்து செல்லும் போது இங்குள்ள செல்வங்களைக் கொண்டு சென்றதுடன் பல ஓலைச் சுவடிகளையும் தம்மோடு கொண்டு சென்றனர். அச் சுவடிகளைப் பணத்திற்காக நம் நாட்டவர்களே அவர்களிடம் விற்றுள்ளனர்.

#### மூடப்பழக்கத்தினால் ஏற்பட்ட அழிவு

தமிழர்களின் மூடப்பழக்கத்தினால் நீரிலும் நெருப்பிலும் பல சுவடிகள் அழிந்தன என்பதை இரா. இளங்குமரன் குறிப்பிடுவதாவது: "நாட்பட்ட ஏடுகள் நொறுங்கியும் முறிந்தும் சிதைந்தும் போதல் இயற்கை ஆதலின், அத்தகைய ஏடுகளைப் படி எடுத்துக் கொண்டு ஆற்று வெள்ளத்தில் விடுவதும், நெய்யில் தோய்த்து நெருப்பில் இடுவதும் நம் நாட்டில் வழக்கமாக இருந்தது.

இன்று அரசியல் நிலையிலிருக்கும் ஓலைச் சுவடிகளை நாம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை நம்மிடம் உள்ளது அந்த வகையில்

#### சுவடி பாதுகாத்தல்

சுவடிகளைப் பாதுகாக்கும் பணியைச் சுவடிகளை எழுதிய காலத்திலிருந்து தொடங்கியுள்ளனர். அன்று முதல் இன்றுவரை சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தற்போது பாதுகாக்கப்பட்டு வருகின்ற பாதுகாப்பு முறைகளை இரண்டு வகைகளாகப் பகுக்கலாம். அவை 1. பழங்காலப் பாதுகாப்பு முறை, 2. தற்காலப் பாதுகாப்பு முறை என்பனவாகும்.

#### பழங்காலப் பாதுகாப்பு முறை

பழங்காலப் பாதுகாப்பு முறை என்பது அறிவியல் கண்டுபிடிப்பிற்கு முன்பே இயற்கையாகக் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு காலங்காலமாகப் பாதுகாத்து வந்த முறையாகும். இம்முறையில் மஞ்சள், வேப்ப எண்ணெய்ப் பூச்சுமுறை, கோவையிலைச்சாறு, மை கொண்டு பாதுகாத்தல், மணப்பொருள் முடிச்சு வைப்புமுறை போன்ற பாதுகாப்பு முறைகள் கையாளப் பட்டுள்ளன.

#### மஞ்சள், வேப்ப எண்ணெய்ப் பூச்சுமுறை

மஞ்சள் பூச்சுமுறை : இம்முறையில் மஞ்சளை அரைத்து நன்றாக குழம்பாக்கிக் கொண்டு சுவடியின் மேற்புறமும், அடிப்புறமும் தடவவேண்டும். அவ்வாறு தடவுவதால் சுவடிகளை அழிக்கக்கூடிய கரையான், அந்துப்பூச்சி போன்றவை அழிக்கப்பட்டுச் சுவடிக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும். மஞ்சள் பூச்சிகளைக் கொல்லும் தன்மை கொண்டது என்பதைப் பழங்காலம் முதல் தமிழர்கள் அறிந்திருந்தனர்.

வேப்ப எண்ணெய்ப் பூச்சுமுறை : இம் முறையில் வேப்ப எண்ணெயைத் தூரிகை(பிரஷ்)யின் உதவியால் சுவடியின் மேற்புறமும், அடிப்புறமும் தடவினால் மேற் குறிப்பிட்டுள்ளது போல் சுவடிக்குக் கேடு விளைவிக்கும் பூச்சிகள் அழிக்கப்பட்டு சுவடி நீண்ட நாட்கள் கெடாமல் பாதுகாக்கப்படும்.

#### கோவையிலைச் சாறு, மைகொண்டு பாதுகாத்தல்

கோவையிலைச் சாறில் அடுப்புக்கரி, வசம்புக் கரி, கொட்டாங் குச்சிக்கரி இவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு அதனுடன் விளக்கெண்ணெயில் புகையைச் சேர்த்து, கோவையிலைச் சாற்றுமை தயாரிக்க வேண்டும். இம்மையைச் சுவடியின்

மேற்புறமும் அடிப்புறமும் தடவி சுவடிகளைப் பாதுகாக்கலாம்.

**மணப்பொருள் முடிச்சு முறை**

இம்முறையில் வசம்பு, கருஞ்சீரகம், ஓமம், கிராம்பு, மிளகு, இலவம்கப்பட்டை ஆகிய பொருட்களை ஒரே அளவாக எடுத்து நன்கு உலர்த்தி பொடி செய்து இரண்டு பங்கு கற்பூரத்தையும் சேர்க்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருளைச் சிறு சிறு முடிச்சுகளாகக் கட்டி சுவடிக் கட்டுகளுக்கு அடியில் வைக்கவேண்டும்.

வேப்பிலை, புதினா இலை, மஞ்சள் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம். இம்முறையில் பூச்சிகள் அழிக்கப்பட்டுச் சுவடி பாதுகாக்கப்படும். ஓலைகளைத் தனித்தனியே பட்டு அல்லது பருத்தித் துணியில் நன்கு சுற்றி வைக்கலாம். கற்பூரம் பூசப்பட்ட துணியாயின் மிகுந்த பாதுகாப்பாகும். இத்துணிகள் மஞ்சள் அல்லது சிவப்பு அல்லது காவி நிறத்தில் இருந்தால் நல்ல பலனைத் தரும்.

மேற்கூறப்பட்ட பழங்காலப் பாதுகாப்பு முறைகளில் இயற்கையில் கிடைக்கக்கூடிய பொருட்களை மிகுதியாகப் பயன்படுத்துவதால் எந்த பக்கவிளைவும் இல்லாமல் சுவடிகள் நீண்ட நாட்கள் பாதுகாக்கப் படுகின்றன.

**தற்காலப் பாதுகாப்பு முறை**

தற்காலப் பாதுகாப்புமுறை என்பது அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தயாரிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள், அறிவியல் கண்டுபிடிப்புகளால் உருவான கருவிகள் போன்றவற்றைக் கொண்டு பாதுகாப்பதாகும். இம்முறையில் இரசாயனப் பொருட்களைக் கொண்டு பாதுகாத்தல், குளிர்சாதன அறையில் வைத்துப் பாதுகாத்தல், அறிவியல் கருவிகளைக் கொண்டு பாதுகாத்தல் போன்ற பாதுகாப்பு முறைகள் கையாளப்படுகின்றன.

**இரசாயனப் பொருள்களைக் கொண்டு பாதுகாத்தல்**

இம்முறையில் ஓலைச் சுவடிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க நுண்கிருமி நீக்கப் பேழையில் பூச்சிக் கொல்லி மருந்துகளை வைத்து அதன் ஆவியின் மூலம் பூச்சிகளை அழிக்கின்றனர். பூச்சிக் கொல்லிகளாக Para-Di-Chlorapenzeen, Mercuric chloride, Gemaxin Powder, Polyethylene clycol, Napthaline Balls போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இம்மருந்துப் பொருட்கள் மனிதனுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் தன்மை கொண்டவை. இவை மட்டுமல்லாமல் தாவர எண்ணெய்களான தர்ப்பைப்புல் எண்ணெய், சாவா சிட்ரோ நெல்லா எண்ணெய், டி.டி.டீ. எண்ணெய் போன்றவையும் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட இரசாயனப்பொருட்களைக் கொண்டு பாதுகாத்தல் முறையில் பழைய ஓலைச் சுவடிகள் எளிதில் நைந்து அழிகின்றன என்று பல ஆய்வுகள் கூறுகின்றன. இவற்றைப் பயன்படுத்துபவர்களும் ஒவ்வாமை, தோல் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.



**குளிர்சாதன அறையில் வைத்துப் பாதுகாத்தல்**

இம்முறையில் சுவடி வைக்கப்படும் அறை முழுவதும் குளிர்சாதனம் கொண்டு குளிர்விக்கப்பட வேண்டும். இவ்வாறு பாதுகாக்கப்படுவதால் சுவடிகள் தூசிகளிலிருந்து பாதுகாக்கப்படுகிறது. ஆனால் நாள் முழுவதும் ஒரேமாதிரியான குளிர்நிலை நிலவ வேண்டும்; மாற்றம் ஏற்படக்கூடாது.

**அறிவியல் கருவிகளைக் கொண்டு பாதுகாத்தல்**

அறிவியல் கருவிகளைப் பயன்படுத்திச் சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றனர். இம்முறையில் நகலெடுக்கும் இயந்திரம் (photo capier) நுண்படச் சுருள் இயந்திரம் (Micro film), அச்சு இயந்திரம் (Press) கணிப்பொறி (Computer) போன்ற கருவிகளைப் பயன்படுத்திச் சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றனர்.

சுவடிகளை நகலெடுத்தல், நுண்படச் சுருள் எடுத்தல், கணினியில் உள்ளீடு செய்தல் ஆகியவற்றின் மூலம் சுவடியில் உள்ள செய்திகள் (எழுத்து) பாதுகாக்கப்படுமே தவிர சுவடிகளைப் பாதுகாக்க இயலாது. எனினும் கணினியில் உள்ளீடு செய்து பாதுகாக்கும் முறை சிறந்த முறையாகும். இதன்மூலம் பல படிகளை உருவாக்கி, பதிப்பாசிரியர்களுக்கு வழங்கவும், பல ஆய்வாளர்களுக்கு வழங்கவும் செய்யலாம்.

சுவடிகள் பாதுகாப்பில் பழங்காலப் பாதுகாப்பு முறை, தற்காலப் பாதுகாப்புமுறை ஆகிய இரண்டு வகைகளில், தற்கால பாதுகாப்புமுறை எளிமையானதாக இருக்கின்றது. ஆனால் பக்கவிளைவுகளை உண்டாக்கக் கூடியது சுவடிகளை விரைவில் அழியும் நிலைக்குக் கொண்டு செல்லக் கூடியது. ஆனால் பழங்காலப் பாதுகாப்புமுறை சற்று கடினமானதாக இருப்பினும் சுவடிகளை நீண்ட நாட்கள் பாதுகாப்பதுடன் பக்க விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. எனவே சுவடிகளை அழியாமல் பாதுகாக்கப் பயன்படும் பழங்காலப் பாதுகாப்பு முறையே சிறந்த பாதுகாப்புமுறையாகும்.

அழிந்து போகும் நிலையில் உள்ள ஆவணங்களையும் ஒரு பிரதிகளே உள்ள ஆவணங்களையும் எண்ணிமவடிவில் பாதுகாப்பதே அவற்றை அடுத்த சந்ததிக்கு கொடுப்பதற்கான சிறந்த வழி. ஓலைச்சுவடி உட்பட உங்களுடைய ஆவணங்களை பாதுகாக்க எண்ணிம ஆவணக்காப்பகமான நூலக நிறுவனத்தை நாடுங்கள்.

*இல:- 185, ஆடியபாதம் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.*
Noolahamfoundation@gmail.com



# ஒரு சம நிலை வைத்தியம்

ஆனந்தி

மதுரா போகும் வழி தனித்துவானது. சராசரிப் பெண்களைப் போல வீண் ஆசைகளுக்காகத் தன்னிலை மறந்த மயக்கமே ஒரு போதும் அவளுக்கு வந்ததில்லை, உலகம் எங்கே போகிறது? அது தலை கீழாக மாறினாலும் அவள் நிலை இது தான். இந்த நிலை தொடுதலின் உச்சக் கட்டமாக மனிதர்களை அறிந்து கொள்ள அது சந்தர்ப்பமாக அவள் கண் முன்னால் விடிந்தது.

விடியலைத் தேடி ஓடுகிறவளல்ல அவள். அது தானாகவே அவளின் காலடிக்கு வந்து சேரும். கொஞ்ச நாளாக முழங்கால் வலி அவளைப் பாடாய் படுத்துகிறது. வெறும் உடம்புக்குத் தானே என்று விட முடியவில்லை. தான் வேறு தன் சத்திய இருப்பு வேறு என்பதை யாரும் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. தானாகவே வந்த ஞானம்.அப்பாவின் போதனையைக் கேட்டோ என்னவோ சின்ன வயதிலிருந்தே கொஞ்சம் ஞானக் கிறுக்குக்குத் தான் அவளின் பேச்சு வழக்கில் வரும்.

கல்யாணமான பின்பு இன்னும் கொஞ்சம் வேதாந்தியாகி விட்டாள் அப்படி வேதம் படிக்கவே அவளுக்கு அந்த வாழ்க்கை. எல்லாம் முடிந்து போனது இது வாழ்வின் இறுதிக் கட்டம் தலைக்கு மேலே குடை விரித்துக் காத்து நிற்கும் மரண தேவன். மரணம் எப்பவுமே வரலாம். வாழ்க்கை என்ற நீண்ட நெடுந் தொலைவுக் கனவு முடிய அது ஒரு பொன்னான சந்தர்ப்பம்.

அவள் கிழக்கு வானம் வெளுக்க நின்று கொண்டிருந்தாள்.முழங்கால் வலி பிடுங்கி எடுத்தாலும் அதி காலை விடிந்தால் , கடைக்குப் போய் வருவாள். பக்கத்துக் கடை தான். நீண்டகாலப் பரிச்சயம் அவர்களோடு. அதுவும் சிங்களக் கடை. இதில் தமிழ் சிங்களம் எங்கே வந்தது ?எல்லாம் இறை சக்தியே என்ற நினைவு மாறாமலே ,அவளின் அந்த வருகை இருக்கும். அவள் கால் நொண்டி வருவதைப் பார்த்து விட்டு ஒரு சமயம்அந்தக் கடைக்காரன் சொன்னார்.

"என்ரை மனுஷிக்கும் கொஞ்ச நாளாய் நடக்க முடியாமல் போச்சு சிகிச்சைக்கு ஒரு பிக்குவிடம் போய் வந்து இப்ப குணமாயிட்டுது"இதை அவர் சிங்களத்திலே சொல்ல பாண் வாங்க வந்திருந்த ஒரு முஸ்லீம் பெண்மணி அதை மொழிபெயர்த்து அவளுக்குக் கூறின போது அவள் கேட்டாள்.

"எங்கை அந்தப் பிக்கு இருக்கிறார்?"

அதை அவள் அவருக்குச் சொல்ல அவர் கூறினார் "நுகேகொடைக்குத் தான் போக வேணும் அதற்கு, ஓட்டோ வைத்திருக்கிற சுனிலைக் கேட்டால் அங்கை கூட்டிக் கொண்டு போவான் அங்கை போய் வர ஆயிரம் ரூபாய் பிடிக்கும்."

இந்தச் சுனிலின் ஓட்டோவில் தான் இப்போது அவள் அடிக்கடி போய் வருகிறாள். பக்கத்துக் கடைக்குப் போய் வருவதென்றாலும் அவனைத் தான் கூப்பிடுவாள்.ஓட்டோவிலிருந்து சாமான் தூக்கி வைப்பது முதற் கொண்டு எல்லா உதவிகளும் செய்வான். அவன் அரைத் தமிழன். சிங்கள மனுஷி. அவனின் பிறப்பைப் பற்றி அவள் இது நாள் வரை கேட்டதில்லை. ஓர் ஊகம். மலை நாட்டுத் தமிழனாக இருக்கலாமென்று. எதுவாக இருந்தாலென்ன. அன்பு முக்கியம்.

மறு நாள் அதிகாலை ஆறரை மணிக்கு, சுனில் வந்து ஓட்டோவில் அவளை ஏற்றிக் கொண்டு அந்தப் பிக்குவிடம் போனான். நீண்ட தூரப் பயணமென்றாலும் வழி நெடுகக் காட்சிகள். வேலைக்குப் போகும் பெண்கள் வெறும் காட்சி பொம்மைகளாகவே தோன்றுவதாகப் பட்டது. இந்தக் காட்சி அழகை அவள் மறந்து வெகு நாளாகிறது. அழகென்பது அவளைப் பொறுத்த வரை இரண்டாம் பட்சம் தான். இப்போது இன்னும் வயதாகி விட்ட நிலையில் இதுவெல்லாம் புறம் போக்கு நிழலாகவே அவள் மனதோடு ஒட்டாமல் வெறும் கனவாகவே, தோன்றியது. எல்லாம் கடந்து போகிற ஞாபகங்கள் தாம் .

பிக்குவின் இடம் வந்து விட்டது. முழுவதும் சிங்களப் பிரதேசம் தான். எனினும் அவரின் வாழ் விடமே ஒரு தவச் சாலை போல இருக்கிறது. முன்னால் அழகான விகாரை. சுற்றிலும் அகண்ட விஸ்தாரமான காணியே பசுஞ் சோலையாக இருக்கிறது. அதைத் தாண்டி வந்தால், அவளும் அவள் போன்றவர்களும் வந்து அமர்வதற்கு, பெரிய ஹால். சுற்றிலும் இருக்கைகள் .சூழவும் நாற்காலிகளோடு வாங்குகளும் போட்டிருந்தார்கள்.

நல்ல வேளை! நாற்காலிகளில் பாதி சனம் தான் கூடியிருந்தது. அவள் இருக்கையில் அமர்ந்து கொண்டு, சுற்று முற்றும் பார்த்தாள். தூரத்தில் தடி விளக்குமாறோடு சிலர் தெரிந்தார்கள். அதில் சுனிலும் ஒருவனாகத் தோன்றினான். அவனுக்கு ஆயிரம் ரூபாய் கூலி கிடைக்க இருக்கிற மகிழ்ச்சியில், இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறான்.

அந்தப் பெரிய ஹாலில் சுவர் முழுவதும், புத்தரின் மோன நிஷ்டை படங்கள். அவற்றைப் பார்க்கிற போது, உள்ளார்ந்த உயிர் வெளியில், தானும் மிதப்பது போல் அவளுக்கு உணர்வு தட்டிற்று. சரியாக எட்டு மணிக்குத் தான் பிக்கு வருவாராம். வரும் போது சுனில் சொன்னான். அவர் எப்படியிருப்பாரோ? இன

மத நல்லிணக்கம் கொண்ட ஒருவர் தானோ அவரும்? இதை பற்றி நினைக்கையில் உடம்பெல்லாம் புல்லரித்தது அவளுக்கு. அடிக்கடி இந்த வார்த்தைகள் பேப்பரில் வரும். அரசியல்வாதிகளுக்கே இது தாரமந்திரம். அதைச் சொன்னால் தான் வாக்குப் பெட்டி நிரம்பும். பிக்கு அவர்களுக்கு இது தேவை யில்லாமல் இருக்கலாம். துறவியாக இருந்தே இது ஒரு தவமாக வந்து அவருக்கு வாய்த்திருக்கக் கூடும்.

அதையும் அவள் பார்த்து விட இருந்தாள். அவள் வந்து சேர்ந்த சிறிது நேரத்துக்குள் ஹால் நிரம்பி வழிந்தது..எல்லாம் சிங்கள முகங்கள் தாம். வந்திருந்த அநேக பெண்கள்,பாவாடை சட்டையுடனேயே தோன்றினார்கள். அவள் அதில் அவர்கள் முகங்களில் அழகு இருக்கிறதா என்று தேடினாள். யாரும் அழகாய் படாதது ஒரு மாறுபடான செய்தியாய் அவளைக் குழம்பிற்று.

முன்னொரு காலத்தில் அவளுக்கு வரன் பார்த்த சமயம், கொழும்பில் வேலை பார்க்கும் ஒருவன் வந்து கிட்டிய போது, யாரோ சொன்னார்களாம். கொழும்பிலே கொண்டு போய் உலாத்த முக்கியமாக அழகு வேணுமாம். ஆகவே அப்படிக் கூட்டிக் கொண்டு போக, அவள் சரி வராது என்று அவன் சொன்னதை நினைக்க, இப்போது இவர்களைப் பார்க்கையில் சிரிப்புத் தான் வந்தது. இவர்களும் கொழும்பில் தானே இருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்த பிறகுமா அவனிடத்தில்,இந்தச் சொல்லம்பு எறிந்து தாக்குமளவுக்கு இப்படியொரு ஞான சூனியம். அதை மறந்து விடுவம். பிக்குவின் முக தரிசனமானால் ஒரு வேளை எனக்கு இதையெல்லாம் புறம் தள்ளி மறந்து விடுமளவுக்கு, விமோசனம் கிடைக்கவும் கூடும்.

அதையும் பார்த்து விடுவோமே.. சரியாக எட்டு மணிக்கெல்லாம் தலைக்கு மேலே இருந்த மின் விசிறி சுழல்வதைப் பார்த்து, விட்டு, எல்லோர் முகத்திலும் சந்தோஷக் களை கூடியது. பிக்கு வரப் போகிறார் என்பதற்கு அது தான் அறிகுறி என்று வரும் போதே, சுனில் சொல்லியிருந்ததால், அவளுக்கும் கொஞ்சம் பதற்றம் தான். அதிலும் முரண்பாட்டு அவஸ்தை சிங்கள தமிழ் வேறுபாடு கடந்த சம நிலை எளிதில் வராது என்பது அவளுக்கு ஒரு அறிவு மயக்கத்தை கொடுத்தது. அதையும் மீறி வாழ்ந்து வளர்ந்த சூழலில், தனது உண்மையான இருப்புக்கு வர அவளுக்கு வெகு நேரம் பிடித்த்து.

அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்ட போது, பிக்கு இருக்கும் அறையின் நுழை வாசல் கதவு திறக்கிற சத்தம் கேட்டது. இதோ! பிக்கு வந்து விட்டார் முதல் வரிசையில் அமர்ந்திருந்த பெண், முதலாவதாக எழுந்து போனதைத் தொடர்ந்து, கியூ விரைவாக நகரத் தொடங்கியது... அறை வாசலினூ டாக பிக்குவின் பின் புறம் மட்டுமே கண்களுக்கு வெளிச்சமானது, காவி உடை தரித்த பிக்கு. அவரின் முகம் இன்னும் பிடிபடவில்லை,

அவள் முறை வந்து எழுந்து போன போது, இனம் புரியாத நடுக்கம் கவ்வியது, பக்கத்தில் ஒரு மொழிபெயர்ப்பாளனாகச் சுனிலும் வந்து சேர்ந்திருந் தான்... உள்ளே ஏறி அமர வசதியான நீண்ட இருக்கை. அவள் அதில் ஏறி அமர்ந்து காலை நீட்டிக் காண்பித்த போது, உதய சூரியனாகப் பிக்குவின் முகம் தெரிந்தது, இது வரை காணாத அதீத களையுடன் அவர் தோன்றினார். இளம் வயது பிக்கு தானெனினும் துறவு ஞானம் பழுத்த சம நிலையில் ஒளி பிரகாசமாகக் கடவுள் தரிசனத்தையே உளமறிய நேரில் காண்பது போல் அவளுக்குப் புல்லரித்தது. அவர் கையால் சிகிச்சை பெற நான் எவ்வளவோ கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று மிகவும் ஆச்சரியத்துடன் அவள் நினைவு கூர்ந்தாள்.

அவரின் மேலான கருணை ததும்பும் அழகு முக தரிசனத்துக்கு முன்னால் இந்த உலகம் முழுவதும் மண்டியிட்டு வணங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவள் பார்த்துக் கொண்டிருக்க உண்மையில் அது தான் நடந்தது சிகிச்சை முடித்து போகும் போது அனைவரும் அவரை விழுந்து வணங்கி விட்டே போனார்கள். இந்த வணக்கம் அவளுக்கும் உரியதாயிற்று அவர் மருந்து தடவி பாண்டேஜ் கட்டின துரித வேகத்தைப் பார்த்து அவள் மலைத்துப் போனாள். அதுவும் நானொரு தமிழிச்சி என்ற பேதம் கூட மறந்து போய் அவர் விசுபரூபமெடுத்து உயர்ந்து நிற்கிற சிகர நிலைக்கு முன்னால் கரம் கூப்பி வணங்குவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை அவளுக்கு...சிகிச்சை முடிந்து முழங்காலில் பெரிய கட்டோடு அவள் குனிந்து வணங்கிய அழகு நெஞ்சைத் தொட்டது. தமிழ் சிங்களம் விட்டுப் போன அது ஒரு சம நிலை அதற்கு சாட்சி புருஷனாக அவரே இருந்தார்.

ஓட்டோவில் வீடு திரும்பி வரும் போது சுனில் கேட்டான்

"எப்பிடி நல்லமே ?

"நீ ஒன்றைக் கேட்கிறியா இரண்டையுமா? அதென்ன இரண்டு கணக்கு?"

"ஒன்று பிக்கு மற்றது சிகிச்சை, இரண்டும் தான் என்று சொல்ல வந்தேன். மருந்து கட்டின பிறகு, கொஞ்சம் நோ குறைஞ்ச மாதிரி இருக்கு. அதிலும் பிக்கு தான் இன்னும் விசேஷம். கடவுளையே நேரில் கண்ட மாதிரி நான் பூரிச்சுப் போய் வாறன். பார்க்கப் போனால் இது வெறும் உடம்புக்கு மட்டுமல்ல, ஒரு சம நிலை வைத்தியமே அங்கை நடந்திருக்கு. மனசை சரி செய்ய " என்றாள் மிகவும் பெருமிதமாகத் தலை நிமிர்ந்து. அவள் அதைச் சுனிலைப் பார்த்துச் சொன்ன போது, அவன் தூங்கி வழிந்து கொண்டிருந்தான். அவன் கொண்ட கவனம் வெறும் பாதை மீது தான் என்று புரிந்தது. சாமானியர்களால் புரிந்து கொள்ளக் கூடிய விடயமா அது? அவளுக்குப் புரிந்ததென்றால் நிச்சயம் அவள் கடவுளின் வார்ப்புத் தான். அப்படி வெற்றி வாகை சூடிக் கழுத்தில் மாலையோடு வீடு திரும்பும் அவளை வரவேற்று வாழ்த்துச் சொல்ல, அந்த வழி நெடுகிலும் வானத்திலிருந்து தேவர்களே வந்து நின்று மலர் தூவி ஆசீர்வதிக்கிற மாதிரி , அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அது தன்னைப் போன்றவர்களுக்கு மட்டும் தான் என்று நினைக்கையில், கூடவே கவலையில் மனம் கனத்தது. இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யப், பிக்கு போன்ற ஒருவரே இன்னும் வேண்டும் என்று, தீராத மனவருத்தத்துடன் அவள் பெருமூச்செறிந்து நினைவு கூர்ந்தாள்.

## கௌரவ.பா.உ.கள்

புல்லை உளர்த்திப்போட்டு
நிமிர்ந்தாள் புனிதவதி
"அம்மா"வென கத்தி நன்றி சொன்னது பசு!

புலமைப்பரிசில் பரிட்சையில்
சித்தியடைய தவறிய பிள்ளையை
பார்க்கும் தாயின்
கண்களால் பசுவை பார்த்தாள் புனிதவதி.
"உன்னால் எனக்கிப்போது என்ன பயன்"
என்பதாயிருந்தது அந்த பார்வை.

கணவன் காணாமல் போன பின்
அவனை கண்டுபிடித்துக்கொடுக்க
திராணியற்றவொரு பா.உ
பரிசளித்த இந்த பசுதான்
பாழாய்ப்போன வாழ்க்கையை
காப்பாற்ற பால் கொடுத்து
தனக்கும் குழந்தைகட்கும்
சோறு போடுமென அவள்
நம்பியிருந்தாள்!

இறந்துபோன தாயின்
முலைகளில் பால் தேடி
தோற்றுப்போன குழந்தை
புலமைப்பரிசில் பரீட்சையில்
வெற்றியீட்டியதைப் போல
கணவனை தொலைத்து
கதியற்று நின்றவளுக்கு
கைகொடுத்தது கௌரவ பா.உ
பரிசளித்த இந்த பசு என்றால்
அது மிகையாகாது!

இந்த "கௌரவ"ர்கள்
இருக்கும் வரை
கணவனுக்கு பதில்
கறவைப் பசு என்றால்
(ஆடு,கோழி பரிசளிப்போர்
அடங்கலாக)
எந்தப் புனிதவதிதான்
வேண்டாம் என்பாள்?

- யாழவன்




## உள நலம் வாழ

மனதோடு உரையாடு – அதை
மனதார தினம் வாழ்த்திடு
தன்னம்பிக்கை வளர்த்திடு அதில்
தன்னிறைவோடு வாழ்ந்திடு
உறவோடு உறவாடு அவர்
உணர்வதைப் புரிந்தாடு
சுயமதிப்பை உயர்த்திடு உன்
சுமையாவும் உதறிடு
உளமார உதவிடு பிறர்
உளம் ஆற வகைசெய்திடு
ஊட்டமாய் உண்டிடு நீ
ஊக்கமாய் செயற்படு
ஆழமாய் சுவாசித்திடு உன்
ஆயுளைக் கூட்டிடு
எண்ணத்தை எடைபோடு உன்
எஞ்சிய வாழ்வென்றும் உன்னோடு
குடும்பத்தில் மகிழ்ந்திடு என்றும்
குடிதனை மறந்திடு
நெகிழ்வோடு இருந்திடு உன்
நெருக்கீட்டை களைந்திடு
ஓய்வுக்கு நேரமெடு என்றும்
ஓயாமல் மகிழ்ந்திடு
ஆன்மீகம் அறிந்திடு உந்தன்
ஆடம்பரம் களைந்திடு
சமூகத்தில் இணைந்திடு அங்கே
சுகவாழ்வு வாழ்ந்திடு
உணர்வினை வெளியிடு அறிவோடு
உன்னதம் பேணிடு
அன்போடு உரையாடு பிறரை
அளவிடாதே வெறும் கண்ணோடு
சாதகமாய் நினைத்திடு என்றும்
சாதனைகள் குவித்திடு
உளம் என்றும் உன்னோடு அதை
உணர்ந்து நீ வாழ்ந்திடு

- கந்தர்மடம் அ.அஜந்தன்

# குறும்பா



சிக்கனத்தில் கெட்டியாம் விக்கி
சில்லறையும் வைப்பான் பொத்தி
சிக்கனத்தில் சீழ்பட்ட
சிறுநண்டை உண்டு
விக்கிசெத்தான் விக்கி விக்கி

குயிலனிலே காதல்வசப் பட்டு
கூடவந் தாளாமோர் சிட்டு
மயிரினும் ஈனச்சாதியால்
மாண்டனராம் ஒரே
கயிற்றினிலே தூக் கிட்டு.

அழகருக்கோ தொழில் கூலி
அணைத்தவளோ அழகு நீலி
கிழமைக் கொருகிறீம் அவள்
இளமைக்காம்; பாவம்
பழகிவிட்டான் பல சோலி.

ஊமைப் பெண்ணாம் அத்தி
உபத்திர மாமவளின் சித்தி
சாமத்தில் ஒருநாள் அவளை
சாய்த்து விட்டாளாம்
ஊமையோ நானென கத்தி..

ஆட்டத்திலே பொன்னர் கில் லாடி
ஆயிரம்பேர் உள்ளார் பின் னாடி
வாட்டத்தில் நின்றதாய் மோட்ச
வாசல் போனாளென்ற சேதி
கேட்டுவந் தாராம்தள் ளாடி..

சிந்துவொரு சிங்காரப் பேடு
சிரிப் பாளவள் சில்மிசத் தோடு
முந்தநாள் அவளை முச்சந்தி
மூலையிலே முட்டி விட்ட
கந்தனுக்கோ இரவுபெரும் பாடு..

தேடிவந்த வரனையே தட்டினாள்
தேவதை என்றேமல்லு கட்டினாள்
கூடிப்பாடி கட்டியபிள்ளை
கேடியென்றே போலிஸ் பிடிக்க
ஓடிப்போய் சுவரில் முட்டினாள்..

கந்தன் போனா னாவி பிரிந்து
கனபேர் வந்தாராம் பறந்து
வெந்து தணிந்தவன் நீறாய்
வெளிறிய மூன்றாம் நாளில்
தந்தான் அவர்க்குமா மிசவிருந்து..

உள்ஊரிலே உழாதகள்ள மாடு
ஊர்விட்டு போனதாம்வீரத் தோடு
நல்லூரிலே உழுது வாழாமல்
நலிந்து கிழிந்த பின்னே
துள்ளிக் குதித்தல் வெட்க கேடு..

ஆனையென உண்பவராம் சஞ்சி
அடிக்கிறாராம் வெறும் கஞ்சி
பானை வயிறென்று சொல்லி
பலதையும் தின்றதனால்
போனதுவாம் கொழுப்பு மிஞ்சி..

- எஸ்.சிவசேகரன்



# இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூலை "மின்னும் தாரகைகளா"கத் தரும் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்




இலங்கையின் சிரேஷ்ட முஸ்லிம் பெண் பத்திரிகையாளரும் அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரியும் இலக்கிய படைப்பாளியு மான நூருல் அயின் நஜ்முல் ஹுசைன். மலையகத்தைச் சேர்ந்த ஹேவா ஹெட்ட தேர்தல் தொகுதியிலுள்ள உடுதெனிய என்ற கிராமத்தில் பிறந்தவர்.

கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் பொதுசனத் தொடர்புத்துறை சான்றிதழும், தொலைக்கல்வி நிறுவனத்தின் பொதுசனத்துறை டிப்ளோமா பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார். கணனித் துறையிலும் பல பயிற்சிகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். 1980 இலிருந்து 1990 வரை "தினபதி - சிந்தாமணி" ஆசிரிய பீடத்தில் பத்திரிகையாளராகவும், உதவி ஆசிரியராகவும் கடமையாற்றிய திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் "ஜனனி" என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் கடமை புரிந்தவர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார உதவியாளராக நியமனம் பெற்ற இவர், அத்திணைக்களத்தின் "திங்கள்" என்ற மாதாந்த சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் அத்திணைக்கள மாதாந்த "புத்தொளி"என்ற பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், திணைக்களத்தினால் சுமார் 35 வருடகாலமாக தொடர்ச்சியாக வெளிவரும் "தெசதிய" என்ற சிங்கள சஞ்சிகை யின் சிறப்புக் கட்டுரை எழுத்தாளராகவும் கடமை புரிந்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கொழும்பு மாவட்ட தகவல் அதிகாரியாக (District Information Officer) பதவி உயர்வு பெற்ற இவர், கொழும்பு மாவட்ட செயலக தகவல் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாகவும் சுமார் பத்தாண்டு காலம் கடமை புரிந்தார். இக்கால பகுதியில் (2007ம் ஆண்டு முதல்) "கொழும்ப புவத்" (கொழும்புச் செய்திகள்) என்ற பெயரில் சிங்கள மொழி மூல காலாண்டு பத்திரிகை ஒன்றை வெளியிட்டார். கொழும்பு மாவட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளை உள்ளடக்கியதாக வெளிவந்த இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியையாக இருந்து தொடர்ச்சியாக பல இதழ்களை வெளியிட்டார். உயர் அதிகாரிகளினால் மட்டுமன்றி அன்றைய பொதுநிர்வாக அமைச்சரின் பாராட்டையும் பெற்றார். அதைத் தொடர்ந்து தகவல் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ செய்தி இணையத்தளமான www.news.lk என்ற இணையத் தளத்தின் தமிழ்ப் பிரிவில் தகவல் அதிகாரியாக (Information Officer) கடமை யாற்றினார். அகில இலங்கை சமாதான நீதவானாகவும், கொழும்பு உயர் நீதிமன்ற ஜூரர் சபை உறுப்பினராகவும் இருக்கும் இவர் நீதி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அரச மொழிபெயர்ப்பாளருமாவார்.

இவர் தெசதிய என்ற சிங்கள சஞ்சிகையில் சிங்களத்திலும் இலக்கியம் படைக்கிறார். இச்சஞ்சிகையில் இவரால் எழுதப்பட்ட அரசியல் தலைவர்களின் நேர்காணல் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப்பெற்றுள்ளன. இந்த நேர்காணல் தொடருக்காக அரச கரும மொழித்திணைக்களம் இவருக்கு "இன ஐக்கியத்துக்கான ஊடக பங்களிப்பு" என்ற அடிப்படையில் விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவித்தது. டென்மார்க் சிவமீரா அறக்கட்டளை நிறுவனமும் தமிழ்நாடு வளரி சஞ்சிகையும் இணைந்து நடத்திய சர்வதேச கவிதைப்போட்டியில் "மலையக பெண்கள் மனம் மகிழ்வதெப்போது?" என்ற இவரது கவிதைக்கு முதலாம் இடம் கிடைத்தது. இதனால் இவருக்கு சிவமீரா ஞாபகார்த்த விருதும் பொற்கிழியும் வழங்கப்பட்டன.

கலாபூசணம் அரச விருது உட்பட பல விருதுகளுக்குச்சொந்தக்காரி யான பல்துறை ஆளுமைமிக்க திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் தற்சமயம் இதுவரை காலமும் யாரும் தொடாத ஒரு துறையை ஆய்வு செய்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றியதுதான் அந்த ஆய்வு. சுமார் ஒரு வருட கால தனது ஆய்வின் அறுவடை எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. "மின்னும் தாரகைகள்" என்ற பெயரில் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் எழுதிய 460 பக்கங்களைக் கொண்ட ஆய்வு நூல் 11ஆம் திகதி வெளி யிடப்படவுள்ளது.

**இவ்வாறானதொரு நூலை வெளியிடும் ஆர்வம் உங்களுக்கு ஏன் ஏற்பட்டது?**

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி சிறிய சிறிய பதிவுகள் வந்தபோதிலும் இதுவரை காலமும் பரந்த அளவில் ஆராயப்படவில்லை. இது வரை காலமும் எழுத்துத்துறையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் யார்? அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் எவை? போன்ற விபரங்கள் யாராலும் பரந்த அளவில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வில்லை என்ற குற்றச்சாட்டு உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் நடைபெறும் வேளைகளில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. ஆனால் அந்த மாநாடுகள் முடிவடைந்ததும் அதைப்பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. அதனை ஆராயத் துணியவுமில்லை.

2007ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக "இலங்கை முஸ்லிம் பெண்களின் ஊடகப்பங்களிப்பு" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதினேன். இந்த ஆய்வுக்காக தகவல்களை திரட்டும் போதுதான் "இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள்" பற்றிய ஆய்வு நூல் ஒன்றையும் எழுத வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் துளிர் விட்டது. எனினும் அப்போது நான் அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் அதிகாரியாக கடமை புரிந்த காலகட்டத்தில் கடுமையான வேலைப்பளு என்னை ஆட்கொண்டதால் இத்தகைய முயற்சியில் ஈடுபட முடியாமற்போயிற்று. ஆனால் இந்த வேணவா என் உள்ளத்தின் ஒரு மூலையில் ஓசை எழுப்பிக்கொண்டே இருந்தது.

இந்த நீண்ட நாள் கனவு இப்போதுதான் நனவாகிறது. நான் இந்த ஆய்வு நூலை எழுத எனக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்தவர் எனது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய சகோதரியான மலையக இலக்கிய படைப்பாளி நயீமா சித்தீக் அவர்கள்தான். அவர்கள் என்னை சந்திக்கும் போதெல்லாம் சதா இதுபற்றி கேட்டு என்னை வற்புறுத்துவார். எனவே இந்த நூலின் வெற்றியில் அவருக்கும் பங்குண்டு.

**எமது "ஜீவநதி" சஞ்சிகையும் கடந்த வருடம் தமிழ் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் தகவல்களை திரட்டி ஒரு சிறப்பிதழாக வெளியிட்டதே.?**

ஆமாம். உங்கள் சஞ்சிகையின் பெண்களுக் கான சிறப்பு மலரைக்கண்டேன். களிப்புற்றேன். அதுபற்றியெல்லாம் எனது நூலில் என்னுரையில் கூட சிலாகித்துக்கூறியுள்ளேன். அந்த வரிகளை உங்களுக் காக இங்கே மீட்டிப்பார்க்கிறேன். "2004ஆம் ஆண்டு கண்டி உடத்தலவின்னயைச்சேர்ந்த பன்னூலாசிரியா ரான காலஞ்சென்ற புன்னியாமீன் அவர்கள் இலங்கையிலேயே முதன்முதலாக எழுத்தாளர்கள் - கலைஞர்கள் -ஊடகவியலாளர்கள் பற்றிய தகவல் திரட்டு என்ற பெயரில் ஆவண நூல்களை பல பாகங்களாக வெளியிட்டு சாதனை படைத்தார். இலங்கையில் முதன்முதலாக இவ்வாறான ஆய்வு நூல்களை தொகுத்து வெளியிட்ட பெருமை அன்னாரையே சாரும். இவர் சுமார் 8 தொகுதிகளை ஆய்வு நூலாக வெளியிட்டு சாதனை படைத்தார். ஆனால் இவரது 8 நூல்களிலும் சுமார் 20 பெண் எழுத்தாளர்கள் மட்டுமே உள்வாங்கப்பட்டிருந்தனர்.

தற்சமயம் லண்டனில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த செல்வராஜா என்பவர் இலங்கையின் அனைத்து தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களின் பெயர் பட்டியலை நூலகம் டொட் கொம் என்ற இணையத்தளத்தில் பதிவு செய்துள்ளதுடன் பல தொகுப்புகளாகவும் வெளியிட்டுள் ளார். இது தவிர நாட்டில் ஆங்காங்கே மாவட்ட ரீதியில் சில தொகுப்புகள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் தகவல்களைக்கொண்ட தொகுப்பு நூல் ஒன்று ஆய்வாளர் ஜெலீல் ஜீயினால் "முற்றத்து முகவரிகள்" என்ற பெயரில் வெளி வந்துள்ளது. கலாமணி பரணீதரனை ஆசிரியராக கொண்டு வெளிவரும் "ஜீவநதி" என்ற சஞ்சிகையும் கடந்த வருடம் தமிழ் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் நூறு பேருடைய தகவல்களை திரட்டி ஒரு பெண்கள் சிறப்பிதழாக 2017ஆம் ஆண்டு வெளியிட்டது.

ஆனால் அகில இலங்கை ரீதியில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் பெற்ற தகவல்களை உள்ளடக்கியதாக சுமார் 140 முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய தகவல்களுடன் கூடிய ஒரு ஆவண நூலாக மிளிர்கிறது இந்த "மின்னும் தாரகைகள்" நூல். எனவே இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைப்பற்றி மட்டுமே எழுதப்பட்ட முதலாவது ஆய்வு நூலாக இதனைக்கருதலாம்.

**இலங்கையின் எந்தெந்த பகுதிகளைச்சேர்ந்த பெண் எழுத்தாளர் களை உங்கள் ஆய்வு நூலில் உள்வாங்கியுள்ளீர்கள்?**

இலங்கையின் வட துருவமான யாழ்ப்பாணம் முதல் தென்துருவமான மாத்தறை வரையிலும் மற்றும் கிழக்கு மாகாணம் மேல் மாகாணம் என இலங்கையின் பல பாகங்களைச்சேர்ந்த இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைப்பற்றி அவர்களது படைப்புகளைப் பற்றி எனதிந்த நூலில் குறிப்பிட்டுள்ளேன். நூற்றுக்கு நூறு எல்லோரையும் இனங்கண்டதாக கூற முடியாது. நான் குறிப்பிட்ட எழுத்தாளர்களை விடவும் இன்னும் பலர் விடுபட்டிருக்கலாம். எனது சக்திக்கு எட்டிய வரை செய்துள்ளேன் என்று தான் குறிப்பிட முடியும்.

**நீங்கள் வெளியிடும் நூலின் உள்ளடக்கம் பற்றி கூறுவீர்களா?**

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய எனது ஆய்வு நூலான "மின்னும் தாரகைகள்" மூன்று அத்தியாயங்களுடன் 460 பக்கங்களுடன் கூடிய ஒரு காத்திரமான நூலாக வெளிவருகிறது. **"நூல்களை தந்த நூலாசிரியர் இவர்கள் ..". "புத்தகம் வெளியிடாவிட்டாலும் இலக்கியத்தில் வித்தகம் புரிந்த பெண்மணிகள்.." மற்றும் "பேனா வாகனமேறி வானொலியில் வலம் வந்த வனிதையர்"** போன்ற தலைப்புகளில்தான் இந்த மூன்று அத்தியாயங்களும் இடம்பெறுகின்றன. இந்த மூன்று அத்தியாயங்களிலி லும் சுமார் 140 பெண் எழுத்தாளர்கள் பற்றி ஆராய்ந் துள்ளேன். கோடிட்டுக்காட்டக்கூடிய பல தகவல்களை யும் **"மின்னும் தாரகைகளிலிருந்து சிதறிய ஒளிக்கீற்றுக்கள்"** என்ற தலைப்பில் அவற்றை சுட்டிக்காட்டியுள்ளேன்.

அது மாத்திரமல்ல இந்த ஆய்வு நூலுக்கு பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் அவர்கள் சிறப்பான

ஆழமான ஒரு அணிந்துரையையும் இந்தியப் பேராசிரியர் சேமுமு.முகம்மதலி அவர்கள் மதிப்புரையையும் தந்துள்ளனர்.

இந்தியப் பேராசிரியர் சேமுமு.முகம் மதலி அவர்கள் தந்த மதிப்புரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "இலங்கை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு செம்மைமிகு வகையில் முழுமையாக இன்னமும் ஆவணப்படுத்தப்படாமை நெஞ்சில் ஒரு முள்ளாகவே வலி தந்து கொண்டிருக்கிறது. எண்ணிலடங்காப் படைப்பாளர்கள் பவனி வரும் இலங்கைத் தீவினில் ஆய்வு கொண்டெழுதப் பல்கலைக் கழக வசதிகள் இருந்தும் காலம் இன்னும் கனி யாதது பெற்ற பேற்றினில் ஒரு குறையாகவே இருந்து வருகிறது. இத்தகைய சூழலில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் பெண்மணிகளின் பங்கினை எடுத்துரைக்கும் "மின்னும் தாரகைகள்" நூலைத் தந்ததன் மூலம் நூருல் அயின் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடக்கி வைத்துள்ளாரென்றே கூறவேண்டும்.

இலங்கையின் முதலாம் முஸ்லிம் பெண் பண்டிதர் எனும் பெருமை பெற்ற 86 வயது நிந்தவூர் மைமூனா ஜெயினுலாப்தீன் முதல் 18 வயது இளம் படைப்பாளி ருஸ்தா பின்த் ஜவ்ரியா முடிய 100க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைக் குறித்த தகவல்களைத் திரட்டி ஆய்வு செய்துள்ள இந்த நூல், நூலாசிரியரின் பெரும் முயற்சிக்கும் உழைப்புக்கும் அச்சாரமாக அமைந்துள்ளதோடு இலங்கை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு பொன்னேடாகவும் சிறந்துள்ளமை பாராட்டுக்குரிய தாகும்.

தமிழ், ஆங்கிலம் , சிங்களம் என மும்மொழி களிலும் படைப்பாற்றல் பெற்றிருந்த முஸ்லிம் பெண் மணிகளை சிறுகதை, கவிதை, புதினம், கட்டுரை எனப் பல்வேறு தளங்களிலும் சுவடுகள் பொறித்துள்ள முஸ்லிம் பெண்மணிகளை நூலாசிரியர் தக்கவகை யில் தமிழ்கூறு நல்லுலகிற்கு அடையாளப்படுத்தி யுள்ளார். நூலக அளவில் காரோட்டாமல் களம் சென்று நேர்காணல் கண்டு உணர்வு ஏர் உழுது சாதனைப் பெண்மணிகள் தம்மை வெளிக் கொணர்ந் திருக்கும் நூலாசிரியரின் திறன் போற்றுதற்குரிய தாகும்."

இத்தகைய பெருந்தகைகளின் ஆசி உரைகள் எனதிந்த ஆய்வு நூலுக்குக்கிடைத்த பெரும் பரிசாக கருதுகிறேன். இவ்வாறு இன்னும் பல சிறப்பம்சங்களும் நூலில் உண்டு.

**இந்த நூலுக்கு "மின்னும் தாரகைகள்" என்று பெயர் வைத்துள்ளீர். அது பற்றி...**

இலக்கிய வானிலே மின்னும் தாரகைகளாக பிரகாசிக்கும் இந்த இலக்கிய தாரகைகளை ஒன்று சேர்க்கும் முன்னரே இந்த நூலுக்கு "மின்னும் தாரகைகள்" என்று தான் பெயர் வைக்க வேண்டும் என நான் ஏற்கனவே தீர்மானித்து விட்டேன். இந்த தேடலின் போது நான் சந்தித்த பல பெண் இலக்கிய



ஆளுமைகளைக் கண்டு உண்மையிலேயே நான் பிரமித்துப்போனேன். இந்த நூலில் உள்வாங்கப் பட்டுள்ள அனைவரிடத்திலும் வெவ்வேறு திறமைகள் இருப்பதை கண்டு நான் வியந்துபோனேன். இவர்கள் எல்லோரும் நம்நாட்டின் வளங்கள் (Resources). புடம் போட்ட தங்கங்களாக மிளிரும் இவர்களை நான் "மின்னும் தாரகைகள்" என பெயர் சூட்டியதில் பிழையில்லை என உணர்கிறேன். இவர்களில் சிலர் மின்னும் தாரகைகளாக மட்டுமல்ல சுடர் விடும் சூரியனாகவும் பிரகாசிக்கிறார்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன். இவர்கள் அனைவரையும் ஒரே அணியில் சேர்ப்பதற்கு அருள் புரிந்த இறைவனுக்கு நன்றி பாராட்டுகிறேன்..

**இறுதியாக ஏதும் கூற விரும்புகிறீர்களா?**

எனதிந்த நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி (2018.11.11) கொழும்பு சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள அல் ஹிதாயா முஸ்லிம் மகா வித்தியாலய பஹார்தீன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மலையக முன்னணி எழுத்தாளரான கலாபூஷணம் நயீமா சித்தீக் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பதிதிகள் ஊடக அதிதிகள் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். அத்தோடு முக்கியமாக ஒரு விடயத்தைக் இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். இந்த விழாவின் கதாநாயகி நான் மட்டுமல்ல இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள "மின்னும் தாரகை"களாக என்னால் வர்ணிக்கப்பட்ட அனைத்து எழுத்தாளர்களும் கதாநாயகிகள்தான். எனவே அவர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க வேண்டும் என்பதே என் வேணவா! அதனால் "மின்னும் தாரகை"களான எல்லா பெண் எழுத்தாளர்களும் இவ்வெளியீட்டு விழாவில் கட்டாயமாக கலந்து சிறப்பிக்க வேண்டும் என நான் அவர்களை வினயமாய் கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு எனது அபிமான அன்பர்கள் , நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் இந்த விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கிறேன்."

# உறவுகள் சேர்ந்தது

மா.சிவசோதி



மளமளவென உலையை வைத்து விட்டு அரிக்கன் சட்டியில் அரிசியை போட்டு கிளைஞ்சு கல்லுகளை பொறுக்கிக் கொண்டிருந்தாள், கமலா.

"என்ன மச்சாள் வேளையோட உலையை வச்சிட்டா போல" என்று கேட்டுக்கொண்டே வளைந்து அடுக்களைப் படலையை திறந்து கொண்டு நுழைந்தாள், மலர்.

"ஓம் மச்சாள் அண்ணை தொழிலுக்கு போயிட்டுது. வாற நேரம் கஞ்சி வடிச்சு வைச்சா வர்ற களைப்புக்கு கொஞ்சம் குடிச்சிடு மெல்லோ அதுதான்"

"எடியே நான் அண்டைக்கு உன்னை ஒண்டு கேட்டன். கொண்ணையப் பத்தி"

"ஓ...

"ஓ.. எனக்கு நினைவிருக்கு.... ம்... சொல்லும்"

"அப்ப உன்ர கொண்ணை அவளைத்தான் கட்டப் போறானே"

ஓ... எனக்கு இப்பதான் விளங்குது ஏன் நெளிஞ்சு நெளிஞ்சு பேசுறாயெண்டு. எடி எங்களுக்கும் அண்ணை உன்னக் கட்டினா சந்தோஷம் தானே. ஆனா உன்ர கொப்பரும் கொம்மாவும் செட்டுப் பிடிச்செல்லோ அலையுதுகள். உன்ன உத்தியோகம் பாக்கிறவனுக்குத்தான் கட்டி வைக்கிறதெண்டு"

"அவக்கிப்ப காசு பிடிபட்டுப் போச்சடி .தம்பி வெளிய இருந்து காசனுப்ப இதுகள் சொந்த பந்தத்த நாடுதுகளில்ல, நானும் கணேசத்தான் கட்டி வையுங்க எண்டு சொன்னன். அதுகள் யாரோ ஒருவற்ற பையன பாத்திருக்கினமாம் அவர் கிளார்க் வேலை செய்யுறாராம் அவரத்தான் கட்டவேணும் எண்டு இரவு ஒரே பிரச்சனை எனக்கு என்னவோ ... பயமா.. இருக்கு உங்கள எல்லாம் விட்டு வேற ஊரோட போய் இருந்து விடுவனோ" என்று விம்மிக் கொண்டிருந்தாள் மலர்.

"மச்சாள் நீ அழாதேயும் நான் அண்ணை வரச் சொல்லுவன். அண்ணை சொன்னாரெண்டால் ஐயாவும அம்மாவும் ஏதும் செய்வினம்" என்று ஆறுதல் கூறிவிட்டு சோற்றை வடித்து கஞ்சியை கிண்ணத்தில் எடுத்தாள்.கமலா.

"சரி நான் வாறன்..."என்று கூறிவிட்டு குனிந்து அடுக்களைக்கு வெளிய வந்து கிறுகிறெண்டு நடந்து கொண்டிருந்தாள் மலர்.

நிலவு பகலாக எறித்துக்கிடந்தது.காற்று இழுக்கும் திசைக்கெல்லாம் மரங்கள் அசைந்து நிழல்கள் நடனமாடிக் கொண்டிருந்தன. வாசலில் படுத்துக் கிடந்த நாய் நிழல்களின் மீது பாய்ந்து வெட்கித்து வாலைக் குழைத்துக்கொண்டிருக்கின்றது.

அப்போதுதான்,

"பிள்ளை... பிள்ளை ஐயாவுக்கு சாப்பாட்டை போடன" என்று கூறிக்கொண்டே நிலவில் முற்றத்தில் அமர்ந்தார் கனகர்.

"கொஞ்ச நேரத்திற்கு முன் குடித்த கள்ளின் நெடி அடிவயிற்றில் இருந்து குமட்டிக் கொண்டு வந்தது. சாப்பாட்டை கொடுத்து விட்டு நின்றவளுக்கு அந்த வாடை வயிற்றை பிரட்டவே பின்னால் ஓடினாள்.

உதென்னப்பா... உப்பிடி மணக்கிது பெடிபெட்டை இருக்கிற இடத்தில ... என்று முகத்தை சுழித்து கொண்டாள். பார்வதி.

கனகர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே மகன் கணேசனும் வந்து விட்டான். இதுதான் நல்ல தருணம் என எண்ணி கமலா மெதுவாக பேச்சை கிளப்பினாள்.

"அண்ணை மச்சாள் வந்தா... எங்கயோ மாப்பிளை பாக்கினம் எண்டு சொன்னா.. அவவுக்கு மனமில்லை.. மாமா.மாமி தான் கட்டாயப்படுத்துகினம் போல" என்று சாடை மாடையாக கதைய தொடங்கினாள் கமலா.

நிசப்தம்...எல்லோர் மனங்களையும் சற்று நேரம் ஆட்கொண்டது

செருமலுக்கு மத்தியில் கனகர் "ஹம்... அது நல்ல பிள்ளை இந்தக் களிசறைய லாள எங்கேயோ போப்போகுது" என்று சாப் பாட்டை ஒரு கையில் எடுத்துக் கொண்டு மறு கையினால் கண்களை துடைத்துக் கொண்டார்.

"ஐயா...எங்கட மாமிதானே ...நீ போய்

ஒருக்கா கதைச்சுப் பாரன்"

"ஆரயடி... போகச்சொல்லுறா... நான் ஏதோ ஊருலகத்தில செய்யாததை செய்த மாதிரி எல்லாரும் மல்லுக்கட்டி கதைக்காம இருக்கேக்க நான் என்ன அவளுக்கு குறைஞ்சனானே. உன்ர கொம்மாவ கட்டி இண்டைக்கு இருபத்தைந்து வருசமாச்சு... உன்ர கொம்மா சாதியில குறைஞ்சாளே ஒழிய குணத்தால் இவயள விட மேலதான். என்று மனதில் கிடந்த பாரத்தையெல்லாம் இறக்கி வைத்ததில் பெருமூச்செறிந்து கையைக் கழுவிக்கொண்டு எழுந்து போனார் கனகர்.

"ஏன்டி... உன்ர வாய வைச்சுக் கொண்டு சும்மா இருக்க மாட்டியே" என்று கமலாவை பேசிக்கொண்டு கணேசனும் எழுந்து போனான்.

கனகர் தென்னையின் கீழ் துண்டை விரிச்சுக் கொண்டு மல்லாந்து படுத்துக் கிடந்தார்.

"இஞ்சர்...இஞ்சர்...என்ன...ஒருக்கால் மச்சாளோட கதையன்"

"நீ என்ன கதைக்கிறாய்.உன்ன சபைசண்டிக்கு எடுக்கினமில்லை. மச்சாள் மாமியெண்டு பிழங்கிற தில்ல. இப்பிடி இருக்க நான் அவயட்ட போறதே"

"இல்லையப்பா... நாளைக்கு சொந்த பந்தமெண்டு பிள்ளயள் போய்க்கி வரோணும்.பிறகு அண்ணை ஒரு சொல்லுக்கு கேட்டாரோ எண்டு கதைக்கப்படாதுதானே" என்று இடைவிடாது பொரிந்து கொண்டே இருந்தாள் பார்வதி.

நீண்ட அமைதி மனத்தை இறுக்கும் சுமை ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் மனம் திண்டாடிக் கொண்டிருக்க... பார்வதியையே பார்த்துக் கொண்டிருந்தார் கனகர்.

"என்னப்பா பேசாமல் இருக்கிறியள்"

"என்னத்தைக் கதைக்க...." என்று அலுத்துப் கொள்ளும் கனகரிடம்

"எங்களுக்காக இல்லாட்டிலும் பிள்ளயள் இனஞ்சனத்தோட சேரோணுந்தானே" என கெஞ்சுவது போல பேசும் பார்வதியை பார்க்கையில் அவளுள் கொஞ்சமேனும் தன்னைப் பற்றி தன் சுயங்களை பற்றி எண்ணாத மனம் அவனை புளகாங்கிக்க வைத்து விடுகின்றது.

"ம்... சரி சரி... போய்ப்படும் விடியப் பாப்பம்" என்ற கனகரின் வார்த்தை தேன் வார்த்து விட்டது போலும் பார்வதி எழுந்து போனாள்.

.............................

பொழுதும் உச்சிக்கு வந்துவிட்டது. கனகர் தன் தொழிலை முடித்துக் கொண்டு சைக்கிளை வீடு நோக்கி மிதித்தார். சக்கரங்கள் வேகமாக சுழன்று கொண்டே இருந்தது. அவன் மன அலைகள் விடாமல் அடித்துக் கொண்டிருந்து. இரவு நடந்த சம்பாஷனை அவனுக்குள் துளைத்து கொண்டிருந்தது. எது எப்படி யெண்டாலும் நாளைக்கு எங்கட பிள்ளையள் அநாதையா நிக்கக் கூடாது. எதுக்கும் ஒருக்கப்போய் கேட்பம் என்று தீர்மானித்துக் கொண்டு சைக்கிளை உழக்கினார்.

"இஞ்சர்...இஞ்சர்..." என்று கூப்பிட்டுக் கொண்டு கனகர் வலை பறி எல்லாம் வைத்து விட்டு கைகால் கழுவிக் கொண்டு வந்தார்.

"என்னப்பா... என்ன எங்கயோ போப்போறியே"

"ஓ"... வாறன்... என்ன செய்யிறது. ஒருக்கா போவம் என்ன சொல்லுவினமோ"

"எல்லாம் நல்லபடியாத்தான் நடக்கும்." என்று பெருமூச்செறிந்தாள் பார்வதி.

"கால்களில் ஊமை வலி. ஒரு எட்டு படுத்துக் கிடந்தால் தான் எல்லாம் சரியாகும்"என்ன பண்ண பெடிபெட்டை சந்தோசமா இருக்க வேணும். நானும் எவ்வளவு நாளைக்கு ஒட்டுறவு இல்லாம கிடக்கிறது. பேசினால் பேசட்டும் சகோதரம் தானே அடிச்சாலும் தாங்கமாட்டனா என்ன" என்று எண்ணிக் கொண்டு சைக்கிளை மிதித்தார் கனகர்.

மணல் பாதை வழியே சைக்கிள் புதைந்து எழுந்து செல்கிறது.

"ஹம் இந்த பூமியில இருக்குமட்டுந்தானே அண்ணன் தங்கச்சி,மச்சாள் மாமி, எல்லாம்" என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டே போய்க்கொண்டு இருந்தார் கனகர்.

***

மதிலோரத்தில் சைக்கிளை சாத்திவிட்டு பூட்டி திறப்பை எடுத்துக் கொள்கிறார். கனகர் கதவின் வெளிப்புறமாக சிமெண்டு நிலக்காறை. கதவருகே வந்த கனகர் கதவை திறக்க முற்படுகிறார். அவர் திறக்காமல் நின்று உள்ளே நோட்டம் விடுகிறார். கால் வைக்க மனம் வராது தடுமாறிக் கொண்டிருந்தார்.

" அண்டைக்கு நான் பார்வதியை கூட்டிக் கொண்டு வந்தபோது என்னவெல்லாம் கதைச்சவள்.. என்ர மனுஷி சாதில குறைஞ்சதெண்டு ... கேட்கக் கூடாத கேள்வியெல்லாம் கேட்டாளே, "எங்கேயோ கிடந்தவளைக் கட்டிக் கொண்டு வந்து எங்கட மரியாதையை கெடுத்துப் போட்டியேடா" என்று விழுந்த வார்த்தைகள் ஈட்டியாய் அவனை குத்திக் கொண்டு இருந்தது.

எவ்வளவுதான் இந்த சாதி சம்பிரதாயங்கள் பற்றி பேசினாலும் " ஊருக்கு உபதேசம் உனகல்லடி" என்ற நிலைதான்.

கனகர், மெதுவாக கதவை திறக்க முயல்கிறார்.

"ஆரது.... என்று சகோதரி தனலட்சுமியின் குரல் ஒலிக்கிறது.

"அது நான்... கனகர்"

"என்ன? இண்டைக்குத்தான் உனக்கு என்ர நினைவு வந்ததோ அப்பு. என்ன அக்காத்த செத்துப் போனாளோ. இல்ல இருக்கிறாளோ எண்டு பார்க்க வந்தனியே"

மௌனங்களால் சிறைப்பிடிக்கப்பட்ட கனகர் எதுவும் பேசாமல் இருந்தார். கண்களில் நீர்த்துளிகள் உகுத்து கன்னங்களை நிறைத்துக் கொண்டிருக்கிறது. தனலட்சுமி கனகர் அழுவதைக்கண்டதும்.. கிட்டவாக போய் அவன் தோள்பட்டையை பற்றிக் கொண்டு "அடே.... இதுக்குத்தானேடா.எங்கள விட்டுட்டு எங்கயோ இருந்தவளை கொண்டந்தனி" என்று அழுதாள்.

இவர்கள் இப்படி இருக்கும் போது வீட்டின் பின்புறம் வேலை செய்து கொண்டிருந்த தனலட்சுமி யின் கணவர் அமளியை கேட்டு வந்துவிட்டார். கனகரை பார்த்தவர் "கண்கள் கலங்க ...என்னடாப்பா

இண்டைக்குத்தான் உனக்கு நாள் வந்ததே..

"தனம், அவனை இஞ்சாலை கூட்டிக் கொண்டாவன்."என்று கதிரையை எடுத்துப் போட்டார்.

"இரடாப்பா இரு... நாங்கள் பாத்த பொம்பிளைய வேண்டாமெண்டு சொல்லி... கடைசியில... உந்தச் சாதிக்க போயிட்டியேடா.நாளைக்கு... பிள்ளை குட்டியள்ற்ர வாழ்க்கையை யோசிச்சுப் பார்த்தியே. ஹூம்... எல்லாம் உன்ர தலைவிதி" என்று சலித்து கொள்கிறார் தனலட்சுமியின் கணவர்.

கனகர் எதைப் பற்றி பேசவந்தாரோ. அந்த விடயம் இங்கே எடுபடாது என்பதை அப்போதே புரிந்து கொண்டார். இருந்தும் ஒரு மனத்திருப்திக்காக கேட்டேதான் ஆக வேண்டும்.

"இந்தா ... குடி என்று தேத்தண்ணிய" நீட்டினாள் தனம்.

"எவ்வளவு நாள்.. கதைக்காம பேசாம. இஞ்சபாரடா... என்னவோ நடந்தது நடந்து போச்சு. பொடி, பெட்டையளும் வளர்ந்திடுத்துகள். என்ர பொடியள நான் மறியன் அதுகள் பிழங்கட்டும்.உன்ர மனுசியோட நாங்கள் கொண்டாட மாட்டம்" என்று அடுக்கிக் கொண்டே போனாள் தனம்.

கனகர் தான் வந்த சேதிய சொல்லவா.. விடவா என்ற நிலை.சொன்னாலும் பதில் என்னவாக இருக்கும் என்ற ஏக்கம் இரண்டும் சேர்ந்து வதைத்து கொண்டிருந்தது. தேத்தண்ணிய குடித்துவிட்டு எதுவுமே பேசாமல் எழுந்தார் கனகர்.

"சரி..நான் போறன்"

"என்னடா... போறன் என்றாய்"

"இல்ல வேற என்ன?"

"அப்ப. என்னடாப்பா.ஏதும் அலுவலா வந்தனியோ"

"இல்லை என்ர .. மனுஷியும் பெட்டையும் அவன் தம்பிய... உன்ர மகளுக்கு கட்டி வைப்பம்... எண்டுதுகள். அதுகள் ரெண்டுக்கும் விருப்பம் போல"

"எடே...நீ...என்ன சொல்ற.. நீ...என்ன... தெரிஞ்சுதான் கதைக்கிறியே.நாளைக்கு என்ர பிள்ளய.. .அயலட்டை... சபைசண்டிக்கு அண்டுதுகளே" என்று முகம் சிவந்து கனகரை விழுங்குவது பார்த்தாள் தனலட்சுமி.

கனகரின் முகம் தளர்ந்து நிலை தடுமாறிக் கொண்டிருக்க, சட்டென்று எழுந்து உள்ளே போனார் தனலட்சுமியின் கணவர் "சனியன் உனக்கு திமிரெடுத்து திரியிறியே என்று மகளுக்கு படார்.. படார் சத்தம் கேட்க அடித்தார்"

அதற்கு மேல் அந்த இடத்தில் நிற்க விரும்பாமல் கனகர் மளமளவென்று நடந்து கொண்டிருந்தார்.

அன்றைக்கு பிறகு இருந்த கொஞ்ச நஞ்ச சங்காத்தமும் இல்லாமல் போனது. எவ்வளவுதான் மேடையில் சமத்துவம்.சாதிய ஒழிப்பு என்று முழங்கிக் கொண்டிருந்தாலும் தனக்கு தனக்கு என்று வரும்போது வரிந்து கட்டிக் கொண்டு வந்து நிற்கின்ற சங்கதிகள் ஆயிரம் ஆயிரம் காலந்தோறும் இது வெவ்வேறு விதமாய், வெவ்வேறு வடிவங்களில் காணப்பட்டு வருகின்றதே ஒழிய கடைசி மனிதன் உள்ளவரை அழிக்கமுடியாத ஒன்றாகவே அமைந்து விடப்போகிறது. கனகர் தன்னிலும் குறைந்த சாதிப் பெண்ணை கட்டியது அவர் குற்றமல்லவே. அப்புறம் நாம் பேசும் விதி எல்லாம் எங்கே போயிற்று.

***

அன்று தைப்பொங்கலுக்கு முதல் நாள். கனகரும் பார்வதியும் பொங்கலுக்காக சாமான்களை எல்லாம் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்கள். சற்று நேர பயணத்தில் ஒரு வளைவில் சனக்கூட்டம் அதிகமாக இருந்தது.

"இஞ்சரப்பா... ஒரே சனமாக் கிடக்கு ஒருக்கா இறங்கு என்ன ஏதெண்டு பார்ப்பம்"

"ஓ..." என்று சொல்வதற்கு முன்னால் கனகர் சைக்கிளை நிறுத்தி விட்டு சனத்தை விலக்கிக் கொண்டு போனார். போனவர் ஓ..வென்று குழறிக் கொண்டு.. "அக்கா ...அக்கா ... என்ன நடந்தது" என்று பதைபதைத்துக்கொண்டிருந்தார். அருகிலேயே மைத்துனர் மூச்சுப் பேச்சின்றி கிடந்தார்.

"பார்வதி... பார்வதி" என்று மனைவியை கூப்பிட்டார்.

மயங்கிக் கிடந்த தனலட்சுமியின் கணவரை "அத்தான்.. அத்தான்" என்று கூப்பிட்டு பார்த்தார். எந்த சலனமுமின்றி கிடந்தார்.

"என்ன நடந்தது சொல்லுங்கோ" என்று அங்கிருந்தவர்களை கனகர் கேட்டபோது

"இதால வந்த டிப்பர் இவயள மோதிப்போட்டு போவிட்டான்"என்று சொன்னான் அங்கிருந்த இளைஞன் ஒருவன்.

கொஞ்ச நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து இருவரையும் ஏற்றிக் கொண்டு போனது. தனலட்சுமியின் தலைமாட்டில் பார்வதி அவள் தலையில் இருந்த காயத்திற்கு ஈரச்சீலைய சுற்றி பிடித்துக்கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து வைத்திய சாலையினுள் நுழைந்தது.

தனலட்சுமி கண்விழித்து பார்த்தபோது மலர் கட்டிலின் அருகில் நின்றாள்.அவள் அருகிலேயே பார்வதியும் கனகரும் நின்றதைக்கண்ட தனம் ஆச்சரியமும் கோபமும் தொனிக்க "ஏன்.. வந்தாய்" என கேட்பது போல் ஒரு பார்வையை உதிர்த்தாள்.

"அம்மா... நான் கூட இண்டைக்குத்தான் வந்தன். இண்டையோட மூன்று நாளா மாமிதான் உன்னப் பார்த்தவா. இனியாவது அந்த வரட்டு குணத்த விடு" என்று கூறினாள்.

"அம்மா... உங்கட நல்ல காலம் உங்களுக்கு பிளட் இல்லை இந்த அம்மா நிண்டால தப்பினியள் ஒரே குறூப் இவ இல்லாட்டி நீங்க இப்பிடி கதைச்சுக்கொண்டிருக்க மாட்டியள்" என்று அந்த நர்ஸ் கூறினாள்.

தனத்தின் கண்களில் கண்ணீர் தாரையானது. பார்வதியின் கைகளை பிடித்துக்கொண்டு அழுதாள்.

அவள் கையில் கசியும் இரத்தத்தை பார்வதி துடைத்து விட்டாள்.

தனலட்சுமி கனகரை பார்க்கிறாள்.

"அக்கா உன் ரத்தத்தில் சாதி தெரிகிறதா" என கேட்பதாய் எண்ணி தலை குனிந்தாள் தனலட்சுமி....

## என் தழுவலில்...

கன்னியா குமரிக் கடற்கரையில்
நான் இந்து சமுத்திரத்தில் இறங்கினேன்
குமிழிகள் விரிந்து
வங்கக் குடாவிலும் அரபிக் கடலிலும் கலந்தன
அலைகள் என் அந்தராத்மாவில் சுவறின



மேலே வானில் வெள்ளிய, கரிய முகில்கள்
இமய மலைச் சிகரங்களைத் தொட்டன
அவை இரண்டு திசைகளில் பிரிந்து
கருவறைகளை நீரால் நிரப்பி
தம் அன்பு நீரால் பூமியை மூழ்கடித்து
தார் வனாந்தரத்திலும் சிலிக்கா ஏரியிலும் வடிந்தன

ஆறுகளையும் மலைகளையும்
வயல்களையும் புல்வெளிகளையும்
வெவ்வேறு வழிபாடுகள் செய்யும்
வெவ்வேறு மொழிகள் பேசும்
பல்வகை பன்னிற மனிதர்களையும்
இப்பூமியின் அழகுச் செழிப்போடு
என்னால் ஆரத் தழுவ முடிந்தால்!

ஆனால் என் இரு கைகளாலும்
அவை யாவற்றையும் எப்படித் தழுவ முடியும்?
என் இதயக் கதவுகளைத் திறந்தேன்
முழு உலகமும் உள்ளே புகுந்தது

ஆம். ஒருவரால் உலகம் முழுவதையும் உள்வாங்க
முடியும்!

## மணலே எல்லையாகும் போது

எல்லையின் இப்பக்கமாயினும் அப்பக்கமாயினும்
மணலே பரவிக்கிடக்கிறது, ஒரே நிறமணல்
தார் பாலைவனம்
மன்டோவின் கதையில் வருவதுபோல
எது ஹிந்துஸ்தான்? எது பாகிஸ்தான்?
நான் எங்கே நிற்கிறேன்? என் நிலம் எது?
எல்லா முகங்களும் ஒன்றே
நாவும் அத்தகையதே

யார் சரி? யார் பிழை?
சொல்வது எளிதல்ல

இங்கிருந்து பறந்த மணல் அங்கு படிகிறது
முகில்போல, மழை போல தங்கு தடையின்றி
மனிதர்களே எல்லைகளைப் படைத்து தம்மைச்
சிதைப்படுத்திக் கொள்கிறார்கள்

விதையாக, ஒரு பறவையின் சொண்டிலிருந்து விழுந்து
முகில்கள் போல, மழைபோல, மணல்போல
எல்லையின் இப்புறமாயினும் அப்புறமாயினும்
எங்காயினும் முளைவிட விரும்புகிறேன்

குஜராத்தி மூலமும் ஆங்கில மொழிபெயர்ப்பும் :
கலாநிதி வர்ஷா தாஸ்
தமிழில் : சோ.ப

வர்ஷா தாஸ், 50 ஆண்டுகளாக எழுதிவரும் மூத்த குஜராத்தி எழுத்தாளர் சம்ஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் முதலிய மொழிகளில் புலமை படைத்தவர்; அண்மையில் "ஒடிய சாகித்திய தர்ஷன்" என்ற இலக்கியப் பெருந்தொகுப்பை குஜராத்தியில் வெளியிட்டுள்ளார்.

# "கூண்டுப் பறவை" சிவ ஆரூரனின் நாவல் "யாழிசை" போர் தின்ற வாழ்வின் ஒரு முகம்




■ எம்.கே.முருகானந்தன்

எமது வாழ்வானது போர் தின்ற வாழ்வு. சிலரது வாழ்வு முற்று முழுதாக விழுங்கப்பட்டு காணாமலே போய்விட்டது. வேறு சிலரது கொத்தி குதறிச் சிதைக்கப்பட்டு அழிக்க முடியாத வடுக்களோடு நகர்கிறது. அந்த வாழ்வின் இழப்புகளால் மனம் சோர்ந்து அழுது புலம்பி முன்னகர முடியாது அழுந்தி மாய்பவர்கள் பலர். அவற்றைச் சவால்களாக கொண்டு அதி தீவிர முயற்சிகளூடாக மற்றவர்களுக்கு நாம் சளைத்தவர்கள் அல்ல என துணிச்சலோடு வாழ்ந்து காட்டுபவர்கள் சிலர். இந்த நாவல் அதற்கு ஒரு சான்று.

யாழிசை நாவலானது போருக்கு பின்னான வாழ்வின் ஒரு முகத்தைப் பேசுகிறது. ஒரு குடும்பத்தின் கதை ஊடாக ஒரு முன்னை நாள் போராளியின் வாழ்வின் மறைந்து கிடக்கும் அனுபவங்களைப் தொட்டுக்காட்டி நகர்கிறது.

ஆனால் அங்கு மாலதி என்ற அந்தப் பாத்திரம் மட்டும் முக்கியப் படுத்தப்பட்டு தனித்துவமாகப் பேசப் படவில்லை. அவளது வாழ்வு மட்டும் காட்சிப்படுத்தப் படவில்லை. சமூக அக்கறையுள்ள ஒரு ஆசிரியரான மாறன், அவரது குடும்பம், அவருக்கு நிச்சயிக்கப்பட்ட திருமணம். அதை மீறி திடீரென மணமுடிக்க நேர்ந்த அந்தப் பெண், அவர்களது குடும்பங்கள் நண்பர்கள் என அந்த குடும்ப உறவுகளில், சமூக வாழ்வின் தூறலில் எம்மை முழுமையாக நனைத்து சிலிர்க்க வைக்கிறது. யாழ் மண்ணிலும் வன்னிப் பரப்பிலுமாக கால் நீட்டி நடை பயில்கிறது.

அமைதியான நீரோட்டம் போல ஆர்ப்பாட்டமின்றி நகரும் கதை. அந்நிய மொழிக் கலப்படமில்லாத தமிழ். ஆனால் அது வாசிப்பிற்கு நெருடல் இல்லாமல் இருப்பது நாவலாசிரியரின் மொழி ஆளுமைக்குச் சான்றாகிறது.

கதை சுவார்ஸமாக நகர்வதற்கு நாவலின் இறுதிவரை பின்னிச் செல்லப்படும் ஒரு முடிச்சு காரணமாகிறது. மேலோட்டமான வாசகனுக்கு சிக்கலான முடிச்சு இருப்பது புலப்படாமல் போகவும் கூடும். ஆழமான வாசகனுக்கு அந்த முடிச்சு எவ்வாறு அவிழும் என்பது ஆரம்பத்திலேயே அனுமானிக்கக் கூடியதாக இருக்கவும் கூடும். எப்படியிருந்த போதும் ஆரவாரமும் அழுத்தமும் இல்லாமல் முடிச்சைப் போட்டு அதை அழுத்தமாக அவிழ்த்து வைத்து நாவலை மறக்க முடியாத படைப்பாக ஆக்கிய படைப்பாளி ஆரூரன் பாராட்டுக்குரியவர்.

மற்றொரு விடயம் இந்த நாவலை வாசித்து முடித்து அதை மனதில் அசைபோட்டுக் கொண்டிருந்த போது மனதில் பட்டது. இந்த நாவலில் கெட்டவர்கள் என்றோ வில்லத்தனம் கொண்டவர்களோ என்று எவருமே இல்லை. எல்லோருமே நல்லவர்களாகவே இருக்கிறார்கள்.

மாலதியின் அக்காவின் கணவனான நாதன் அவள் மீது கடுமையாக நடந்து கொள்கிறான். ஏசவும் செய்கிறான். ஆனால் நாவலின் இறுதி அத்தியாயங்களில் அவன் அப்படி நடந்துகொண்டதற்கான காரணத்தை அறிந்து கொள்ளும் போது அவனில் மதிப்பும் மரியாதையும் ஏற்படுகிறது.

அதே போல மாறனின் மாமாவான செல்வம் தன் மகள் வாணியை திருமணம் செய்வதாக கூறி பின் திடீரென மாலதியை திருமணம் செய்ததால் மாறனில் கோபம் கொள்வதும், மற்றவர்களிடேயே அவனைத் தூற்றிப் பேசுவதும், அவர்கள் குடும்பத்தையே ஒதுக்கி வைப்பதுமாக இருக்கிறார். ஆனால் அதற்கான அடிப்படைக் காரணத்தை அறிந்ததும் அவர்களுடன் மீண்டும் உறவு கொண்டாடுகிறார்.

ஆம் எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள்தான். சந்தர்ப்ப சூழ்நிலைகள்தான் அவர்களை வழிதவறிப் போகச் செய்கிறது.

இந்த நாவலில் வரும் பாத்திரங்கள் கற்பனையில் பிறந்தவர்கள் போல இல்லை. "..நம்மோடு, நம்மண் மீது உலாவித் திரிபவர்கள். அவ்வாறானவர்களை ஒருங்கிணைத்ததே நான் செய்த பணி" என்கிறார் நூலாசிரியர்.

எனவே, கடந்த காலத்தில் அவருக்கு கிடைத்த அனுபவங்களும், பார்த்து உணர்ந்தவையுமே படைப்பாக உருப்பெற்றிருக்கின்றன என நினைக்கிறேன். அதற்கு அப்பால் தான் நேசித்த அந்த மண்ணில் அந்த மக்களிடையே இன்று அவர் இல்லை. அவர் அகற்றப்பட்டிருக்கிறார். தனிமையும், தாயகத்தின் மீதும் அந்த மக்கள் மீதுமான தாகமும் அவரை பழைய நினைவு களில் மூழ்கடித்து முத்துக்களை அள்ளித் தெளிக்க வைத்திருக்கும் என்பது நிச்சயம்.

"தரணியெங்கும் விரிந்து கிடக்கும் இவ்விலக்கிய வான்பரப்பில் ஒரு கூண்டுப் பறவையாக சிறகு விரிக்க முற்பட்டேன். நாற்பக்கமும் சுவரில் முட்டி மோதி மீண்டும் மூலையில் வீழ்ந்துகொண்டேன்.

முடியவில்லை! பௌதீக ரீதியாக முடிய வில்லை!

மனோரீதியாக உறவுகொள்ள முற்படுகிறேன்" என்கிறார் தன் சுருக்கமான முன்னுரையில்.

இந்த நூல் *2014*ல் வெளியிடப்பட்டதாக அறிகிறேன். அதற்கு சில வருடங்கள் முன்தொடங்கி இன்றுவரை அரசியல் கைதியாக இருக்கும் அவர் கம்பிகளை எண்ணிக் கொண்டிருந்து காலத்தைக் கடத்தாமல் பேனாவைக் கையிலெடுத்தது ஈழத் தமிழுக்கு கிடைத்த பேறு. இந்த நூலுக்கு தேசிய சாகித்திய பரிசு கிடைத்திருப்பது அதற்கு ஒரு சான்றும் கூட.

மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான இவர் யாவரும் கேளீர் என்ற மற்றொரு நாவலையும், பூமாஞ்சோலை என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டிருக்கிறார். பூமாஞ்சோலை ஜீவநதி வெளியீடாக வந்திருக்கிறது. பரணீதரனின், கண்ணுக்கு இதமான அட்டைப்பட வடிவமைப்புடன் மலர்ந்திருப்பதையும் குறிப்பிடலாம். அந்த நூல் கையிலிருந்தும் இன்னமும் வாசிக்க முடியவில்லை.

இந்நூல்களை எனக்கு கிடைக்கச் செய்தவர் திரு.சிவலிங்கம். ஆரூரனின் தந்தை. அறிவோர் கூடல் காலம் முதல் எனது நண்பர். அவருக்கு எனது நன்றிகள்.

# தமிழாக்கக் கோளாறுகள்

சி. சிவசேகரம்

சில மாதங்கள் முன்பு மௌன நிழல்கள் என்ற மும்மொழிக் கவிதை மொழிபெயர்ப்பு நூல் கைக்குக் கிடைத்தது. அதன் குறிப்பிடத்தக்க சாதனை ஏதெனில், நான் சிரமப்பட்டு வாசித்த சில சிங்கள வரிகள் உட்பட, மூலத்துக்கும் மொழிபெயர்ப்புக்கும் உறவேயற்றுப் பல மொழிபெயர்ப்புகள் அமைந்தமை என்பேன். அதைச் "சர்வதேச மன்னிப்பு" (Amnesty International) நிறுவனம் வெளியிட்டிருந்தது. கவிதைகள் "காணாமற்போக்கல்" பற்றியன. ஏராளமான மொழிபெயர்ப்புக் கோளாறுகள் போகத், தமிழ் அச்சுக்கோத்தற் கோளாறுகளும் மிகையாயிருந்தன.

நூலாக்கத்திற்குப் பொறுப்பானோரென ஒரு நீண்ட பட்டியலிருந்தது. அதில் ஒவ்வொருவரதும் பங்களிப்பு ஏதெனக் கூறாவிடினும், நுஃமான், சேரன், சித்ரா மௌனகுரு, ஜெயபாலன் என நானறிந்த படைப்பாளிகளின் பெயர்களிருந்தன. இவ்வளவு மோசமான ஒரு ஆக்கத்துடன் தொடர்புற அவர்கள் எவ்வாறு இணங்கினர் என யோசித்தேன். நுஃமானிடம் கேட்ட போது அந்நூல் வெளிவந்தமை பற்றித் தானறியாரென வும் அதை வெளியிட வேண்டாமெனத் தான் பரிந் துரைத்ததாகவும் கூறினார். இருந்தும் அவருடைய பெயருடன் நூல் வெளிவந்துள்ளது. ஏன்.ஜி.ஓ. நிதியுதவியுடன் தொடக்கிய ஒரு பணியிற் செலவான பணத்துக்குக் கணக்குக் காட்ட நூலை அச்சிட்டன ரென ஊகித்து, மேற்கொண்டு நான் எவரிடமும் விசாரிக்கவில்லை.

அதைவிட, மூலத்தின் பெறுமதியும் அதன் மொழிபெயர்ப்பின் பயனும் பற்றிய கணிப்பின்றிப் பல மொழிபெயர்ப்புகள் வருகின்றன. அவற்றின் விளை பயன் மொழிபெயர்ப்பாளரின் ஆத்ம திருப்தியாகவோ அவருடைய சாதனைப் பட்டியலில் ஒரு பதிவாகவோ வெறும் வணிக நோக்காகவோ இருக்கலாம். எனினும் தரமான எழுத்துடன் தம்மை அடையாளங் கண்டோர் இவ்வாறான அலுவல்களிற் கவனமாயிருப்பது நல்லது.

***

முற்கூறிய நிகழ்விற்குச் சில வாரங்கள் பின் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் இவ்வருட முற்பகுதி யில் வெளியிட்ட தனது கவிதை மொழிபெயர்ப்பு நூல்களிரண்டை என்னிடந் தந்தார். வவுனியா கலை இலக்கிய வட்டம் வெளியிட்ட "சுதந்திரம்" 30 தென்னாசியக் கவிதைகளின் ஆங்கில வழித் தழிழாக்கத் தொகுதி. வவுனியா ஆங்கிலக் கழகம் (English Association of Vavuniya) வெளியிட்ட "My Choice", 25 தமிழ்க் கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகள். கவிஞர்கள் பற்றிய ஒற்றை வரி அறிமுகக் குறிப்புகளை விடக் கவிதைகளின் தெரிவு பற்றி விளக்கம் எதுவும் இல்லை. இரு நூல்களிலும் ஒவ்வொரு கவிதையினதும் மூலத்தையும் மொழிபெயர்ப்பையும் அருகருகாகத் தந்துள்ளமை மெச்சத்தக்கது. "My Choice" அட்டைப் படம் வெகு நேர்த்தியானது.

கந்தையா ஸ்ரீகணேசன் மொழிபெயர்ப்புக்குப் புதியவரல்ல. எனவே அவரிடம் செய்நேர்த்தியை எதிர் பார்ப்பது சரி என்ற அடிப்படையில் என் விமர்சனங்களை இங்கு முன்வைக்கிறேன். ஒவ்வொரு கவிதையையும் பற்றி எழுதுவதோ முழுக்கவிதைகள் சிலதைப் பற்றி எழுதுவதோ தேவையற்றவாறு எனது முறைப்பாடுகள் ஏறத்தாழ எல்லாக் கவிதைகட்கும் பொருந்துமென்பதால் ஒரு சில கவிதை மொழிபெயர்ப்புப் பகுதிகளுடன் நிறுத்துகிறேன்.

ஒரு மொழிபெயர்ப்பிற் கவித்துவம் தவறுகிறது என்பது அழகியற் பிரச்சனை. மூலத்தின் கருத்துப் பிறழ்கிறது என்பது மொழிக் கையாளுகைப் பிரச்சனை. ஒரு சொல்லின் பொருள் வாக்கியத்துக்கு வாக்கியம் வேறுபடலாம். மொழிபெயர்ப்பு அகராதியை மட்டும் நம்பியிருக்க இயலாது. ஒரு சொல் அகராதி தரும் கருத்துகட்கப்பால் வேறு பொருளிலும் பயன்படலாம். வாக்கியத்தை அதன் சூழமைவில் விளங்கின் அப் பொருளை உணர இடமுண்டு.

இங்கு நான் சுட்டும் வழுக்கள் பல மிக அடிப் படையானவை. அவை ஆற்றலின்மையாலன்றிக் கவனக்குறைவால் விளைந்தவை என்பது என் ஊகம். தெரிந்த தமிழ்க் கவிதைகளிற் கணிசமானவற்றில் மொழிப் பாவனை குறைபாடானது. ஆயினும் இங்கு சுட்டும் வழுக்கள் அக்காரணத்தால் விளைந்தவை யல்ல. முதலில் தமிழாக்கங்கள் இரண்டைப் பார்ப்போம்.

## Flegdling (Eunice D' Souza)

I am grateful / the sparrows have made / my flat their home. / All those months they stayed away / I waited for their return. / Soon the fledgling will cling wide-eyed, to the pelmet / as generations of wide-eyed fledglings / have done. The mother scolds and chatters / forgetting / shadows that circle the sun.

**பறக்க பழகும் குஞ்சுகள்**

எனது மாடியை தம் உறைவிடமாக்கிய /தூக்கணாங்குருவிகளுக்கு / நான் கடமைப்பட்டவன் /கடந்த சில மாதங்கள் /அவை எங்கோ போயிருந்தன / அவைகளின் மீள்வருகைக்காக நான் காத்திருந்தேன் /தலைமுறை தலைமுறையாக /அகன்ற கண்களைக் கொண்ட /குஞ்சுப்பறவைகள் செய்தது போல / யன்னல் மறைப்பில் அவை தொங்கிக்கொள்ளும்/ சூரியனைச் சுற்றும் நிழல்களை /மறந்து தாய்ப்பறவை/ அவைகளைத் திட்டித் தீர்க்கும்.

sparrow: தூக்கணாங்குருவி (இது ஊர்க்குருவி அல்லது சிட்டுக்குருவியைக் குறிக்கும். தூக்கணாங்குருவி வீட்டுக்குள் கூடுகட்டுவது அரிது.)

flat: மாடி ("அடுக்குமாடி" என வந்தாலும் "மாடி" என வராது. அது இங்கு ஒரு அடுக்குவீட்டையே குறிக்கும்)

home: உறைவிடம் (இவ்விடத்து "இல்லம்" அல்லது "வீடு" தகும்)

return: மீள்வருகை (இவ்விடத்து "வரவு" போதுமானது)

wide-eyed fledgling: அகன்ற கண்களைக்கொண்ட குஞ்சுப் பறவை ("கண் அகண்ட குஞ்சு" சிக்கனமானது. இங்கு "கண் அகன்ற" என எழுதல் ஒவ்வாது. அத்துடன், wide-eyedக்கு "உலகமறியாத" என்ற பொருளுமுண்டு.)

scolds and chatters: திட்டித் தீர்க்கும் ("ஏசிக் கடகடக்கும்" அல்லது "ஏசிக் கொறிக்கும்" என்பது பொருந்தும்.)

I am grateful: நான் கடமைப்பட்டவன் ("கடப்பாடு" குருவிகட்கல்ல. அவை கவிஞரின் மனையைத் தம் இல்லமாக்கிய நிகழ்வுக்குக் கவிஞர் நன்றியுரைக்கிறார்.)

shadows that circle the sun: சூரியனைச் சுற்றும் நிழல்கள் (இது வட்டமிடும் பருந்துகளைக் குறிப்பதாக நினைக் கிறேன். சொற்களின் தெரிவு சாடையாக அதைக் குறித்திருப்பின் உரிய அழுத்தங் கிட்டியிருக்கும்.)

## Do not kill the voice (Ahmed Faraz)

You plunge your belief's spears / in every heart. / We are the people of love / Why this dagger brandishing at us? / Let the music be heard here / and we be allowed to live in our town.

**குரலைக் கொல்லாதே**

நீ உனது நம்பிக்கை ஈட்டிகளை /ஒவ்வோர் இதயத் துள்ளும் பாய்ச்சுகிறாய் / நாம் அன்பின் மக்கள் / பின்னர் ஏன் இந்த வாளை எமை நோக்கி சுழற்றுகிறாய் / இசை இங்கு கேட்கட்டும் / எங்களை இந்நகரில் வாழ்வதற்கு அனுமதிக்கட்டும் /

...

Why this dagger brandishing at us?: பின்னர் ஏன் இந்த வாளை எமை நோக்கி சுழற்றுகிறாய் (இங்கு "dagger brandishing" வாட்சுழற்றலைக் குறிக்கிறதேயன்றி யாரை நோக்கியும் சுழற்றுவதையல்ல. "பின்னர்" என்ற சொல் தேவை யற்றது.)

and we be allowed to live in our town: எங்களை இந்நகரில் வாழ்வதற்கு அனுமதிக்கட்டும். (இது எவரின் அனுமதியையுங் குறிப்பதல்ல. இந்நகரிலல்ல, நம் நகரில், நம்மை வாழவிடுவதைப் பற்றியது. "எம்மை எம்மூரில் எம்பாட்டில் வாழ விடு" என்பதே அதன் பொருள்.)

...

இனி இரண்டு ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் பார்ப்போம்.

**என் பிஞ்சுப் பிள்ளை** (ஜெயந்தி தளையசிங்கம்)

மரம் ஒன்றை / தாய் வளர்த்தால் / அது தளிர்விடும் வேளையில் / மகிழ்ச்சி கொண்டு / பூவைக் கண்டு / பசுமையை உணர்ந்து / காயாக வளர்ந்தபோது / நம்பிக்கை கொண்டு / வீசும் காற்றில் / அதன் இலைகள் / அவள் முகத்தை / வருடிச் செல்லும் வேளையில் / என் துயர் மறப்பேன் /

...

My tender child

When a mother places a seedling / tender leaves grow. / Seeing the bloom / feeling the green buds; /when swaying in the breeze / caressing her / she forgets her woes

...

ஆங்கில மொழிபெயர்ப்பை மீளத் தமிழாக்கின் கிடைப்பது:

ஒரு தாய் இளமரமொன்றை நட்டால் இளந் தளிர்கள் வளரும். பூவைக் கண்டு, பசுந் துளிர்களைத் தடவி, காற்றில் அசைந்து (அவை) வருடும் போது அவள் தன் துயர் மறப்பாள்.

தமிழாக்கத்தில் மூலத்தின் பல கருத்துகள் தவறு கின்றன. அதை நான் விளக்கத் தேவையில்லை. ஆங்கில மொழிபெயர்ப்பு மூலத்தை விடச் சிறப்பாக ஒரு கவிதையானாலும், ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலத்துக்கு விசுவாசமாயிருப்பது முக்கியம்.

இன்னொரு கவிதைப் பகுதி:

**நடைப்பிணம் (சுதாகரி)**

...

இன்றைய மானிடர் நிலைகண்டு / அழுவதா சிரிப்பதா இங்குநான் /வியந்திங்கு உள்ளம் உறைந்ததால் / வாழ்கிறேன் நடைப்பிணமாகவே.

## Walking shadow

...

Bewildered / by the hopelessness / enveloping humanity / I am reduced / to a walking shadow.

இம் மொழிபெயர்ப்பில் "வியந்திங்கு உள்ளம் உறைந்ததால்" என்பதற்கு "bewildered" போதாது. அச் சொல் தடுமாறலையோ குழப்பத்தையோ குறிப்பது.

"I am reduced to a walking shadow." என்பதும் "வாழ்கிறேன் நடைப்பிணமாகவே" என்பதும் ஒன்றாகா. நடைப்பிணம் என்பது உயிரற்ற உடலைக் குறிக்கும். "lifeless person" அல்லது தனியே "lifeless" கூடப் பொருந்தும். "walking shadow" என்பதற்கு ஆங்கில வழக்கிலுள்ள பொருள் வேறு.

***

மொழிபெயர்ப்புகள் அவசரக் கோலங்களாவது நன்றல்ல. தவறுகள் எப்போதும் நிகழ்வன. ஆனாற் கொஞ்சம் அக்கறையிருந்தால் கவித்துவமாயில்லா விடினும் யோக்கியமான ஒரு தமிழாக்கம் நமக்குக் கிடைக்கும். அரசாங்கக் கட்டிடங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் வழங்குவோரை விடச் சிறப்பாகத் தமிழாக்கப் பல்கலைக்கழக அறிஞர்கட்கு இயலுமென நம்புகிறேன்.

என்னை மிக வியப்பூட்டிய விடயமேதெனின் நூல்கட்கு அணிந்துரையும் முன்னுரையும் வழங்கிய சோ. பத்மநாதன் மொழிபெயர்ப்புகளை மெச்சி ஆங்கிலத்தில் வழங்கிய சொற்களே: "I congratulate the compiler cum translator for the thorough and near perfect job he has done."

"தொகுப்பாளர்-மொழிபெயர்ப்பாளர் ஆற்றி யுள்ள ஏறத்தாழ உத்தமமான பணிக்காக அவரைப் பாராட்டுகிறேன்."

சோப உத்தமமான மொழிபெயர்ப்புகள் பற்றிக் கொஞ்சமேனும் அறிவாரென நினைக்கிறேன். கவிதை களின் தெரிவை அவர் மெய்யாகவே மெச்சுவாரோ என்பதிலும் எனக்கு ஐயமுண்டு. எனினும், மிகக் குறைவான எழுத்துப் பிழைகளும் நேர்த்தியான பக்க அமைப்பும் மிக மெச்சத்தக்கன.

■ க. சட்டநாதன்

# உயிரில் கலந்த வாசம்



5

ஏரு எடுப்பதற்கு ஒரு நாற் கடகத்தை நான் கையில் எடுத்துக் கொண்டேன். எல்லாமே அம்மாவை ஏமாற்றுவதற்குத்தான்.

முதலில் நவக்கைப் பக்கமாகப் போனோம். பங்குனி மாத வெய்யில் எங்களை வறுத்தெடுத்தது. எனது தொப்பியை மாட்டிக் கொண்டு வராதா என்னுடன் நடந்தாள். நவக்கைக் குளக்கட்டால் நடந்த நாம், ஆசை மாமா வீட்டுத் தோட்டத்தைக் கடந்து வயற்பரப்பை அடைந்தோம். வயற்தடத்தில் கால் பதித்ததும் சப்பட்டைக் குருவிகள் தான் முதலில் எங்களது கண்களில் பட்டன. அக்குருவிகள் சிறகுகளை ஒதுக்கிய வாகில், ரொக்கெற் வேகத்தில் வானத்தைத் தொட முயற்சிப்பதும்- அதே வேகத்தில் கீழ் நோக்கியும் வந்தன. அப்பொழுது தெல்லாம் அக்குருவிகள் எழுப்பிய இனிய ஒலி எங்கள் இருவரையும் சில்லெனச் சிலிர்க்க வைத்தது.

திடீரென, வயற்பரப்பில், "சூய் சூய்", எனக் குரல் எழுப்பியபடி, கரங்கள் இரண்டையும் தட்டியவனாய் நான் ஓடினேன். என்னுடன் சேர்ந்து விபரம் ஏதும் தெரியாமலே அவளும் ஓடினாள். காட்டுச் செவ்வந்திச் செடிகள் மண்டிக்கிடந்த வயற் பரப்பில் இருந்து குருவிகள் பறந்தன. அவ்விடங்களுக்கு ஓடிச்சென்ற நான் அக்குருவி களின் கூடுகளைக் கண்டேன். கூடுகள் சிலதில் முட்டை கள்; கபில நிறப்புள்ளிகளுடன். சிலவற்றில் பொரித்த நிலையில் கண் திறக்காத தோலிகளான குஞ்சுகள். இன்னும் சிலவற்றில் சிறகுகள் முளைத்த நிலையில் குட்டி வால்களுடன் சற்றுப் பெரிய குஞ்சுகள்.

என்னுடன் சேர்ந்து எல்லாவற்றையும் வரதாவும் பார்த்தாள்.

பார்த்தவள் கேட்டாள்:

"மழை பெய்தால்... வெள்ளம் போட்டால்... இவை எல்லாம் தப்புமாடா?"

"தெரியேல்லை. கடவுள் இருக்கிறார்... எல்லாத்தையும் காப்பாத்திப் போடுவார்...!"

"கடவுளா...? கடவுள் தான் எங்களையும் காப்பாத்திறார். இல்லையா...?"

"ம்..." சொன்ன நான். தீய்த்தாங் கூடலைக் கடந்து, உயரப்புலப்பக்கம் நகர்ந்தேன்.

"இங்க, இஞ்ச வளர்ந்திருக்கிற இந்தப் பூவரசு மரங்களில தான், மணிப்புறாக்கூடுகள் கட்டியிருக்கும் - வரது!"

"உண்மையா...?" வியப்பு மேலிட அவளது கண்கள் ஒளிர்ந்தன.

ஒருசில பூவரசு மரங்களில் ஏறி இறங்கிய நான் அடுத்து சடைத்து வளர்ந்திருந்த பெரிய பூவரசு மர மொன்றில் ஏறினேன். அணிற்பிள்ளையின் லாகவம் எனது ஏறுகையில் இருந்தது.

அதனைக் கவனித்த வரதா: "கவனம்... கவனமடா...! விழுந்திடப் போறை..." என்றாள்...

"இல்லை விழ மாட்டன்..." கூறிய நான் - வெள்ளை நிற முட்டைகள் இரண்டை எடுத்தபடி இறங்கி வந்தேன்.

அதனைக் கவனித்து வரதா "இவைதான் மணிப்புறா முட்டையளா...? நல்ல வடிவா இருக்கடா..."

கண்களை அகல விரித்த அவளது இதழ்க் கடையில் பூஞ்சிரிப்பு. அதே நேரத்தில் கண்களில் படிந்து கிடந்த வாஞ்சை என்னை வசீகரித்தது.

முட்டைகளை அவளிடம் தந்தேன். அவற்றை மெதுவாக வருடியவள்; பின்னர் என்னிடம் தர, நான் மீளவும் அவற்றைக் கூட்டில் வைத்து விட்டு, மரத்திலிருந்து கீழே இறங்கினேன்.

"இனி எங்க போறது...?" அவள் தான் கேட்டாள்.

"வாலாட்டிக் குருவிக்குஞ்சை உனக்குக் காட்ட விருப்பம். அது முடியேல்லை. என்னோட வா, மீளவும் நவக்கைக் குளப் பக்கம் போவம்... அங்க பார்க்கலாம். பெரிய குருவியள் வாலாட்டிறது விசித்திரமாஇருக்கும். குஞ்சுகள் அதுகளை விட அதிசயமானவை. நான் பார்த்திருக்கிறன்..."

"வாலட்டிக் குருவிக்குஞ்சு அசப்பில கோழிக் குஞ்சு மாதிரி பொசுபொசு எண்டு இருக்கும். ஆனா உருவத்தில

அதை விடச் சின்னன். வெண் சாம்பல் நிறம். உவர் நிலத்தில அவை ஊடாடிறது தெரியாது. வல்லூறு, பிராந் தெண்டு அதுகளின்ரை பகையாளியளது அசுமாத்தத்தைக் கண்டால் - வயலிலை, உழுத சாலிலை கால்களை எறிஞ்சு, விறைச்சுச் செத்தது போலப் படுத்திடும். கையில எடுத்துத் தொட்டுப் பார்க்கலாம். உயிர் அசுமாத்தம் இராது. இளஞ் சூடு மட்டும் இருக்கும். அதைத் தடவி ஆசுவாசப்படுத்தி, நிலத்தில கிடத்தினால், சில நொடிகளில அது உடலை உதறிச் சிலிர்த்தபடி தாய் குருவியிட்ட ஓடும். அந்த இத்தினியோண்டு குஞ்சுக்கு சூழலிலை இசைவாய்ப் பொருந்திப் போக வடிவாத் தெரியுது"

"ஐய்யய்யோ அதை நான் பார்க்க வேணுமே...!"

அவளது தவிக்கும் குரல்.

"சரி வரதா நாளைக்கு முடிஞ்சா வந்து பார்ப்பம்" நான் கூற அவள் சரி சொன்னாள்.

"இப்ப நாம பெரிய பனந்தோட்டத்துக்கும் சினுந்தாவுக்கும் போவம். சிலுந்தாவில உனக்கு நீந்தப் பழக்கி விடுறன்"

"அதெல்லாம் வேண்டாம். குளத்துத் தண்ணியில நான் நீந்த மாட்டன். ஊத்தத் தண்ணி அதில நீந்திறதா...?"

"பூ... அவவும் அவவின்ரை கெப்பரும். எல்லாரும் குளிக்கிற குண்டு தான்... அதெல்லாம் நீந்தலாம்."

"ம்..." விருப்பம் இல்லாத போதும் மனம் இசைந்தது போலயிருந்தது... என் பக்கமாக நகர்ந்தவள் எனது வலது கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

உலர்ந்து கிடந்தகாற்றில் அவளது தொடுகை ஈரமாக இருந்தது. அந்த ஸ்பரிசம் என்னைச் சிறிது கிறங்க வைத்தது. சின்னதாக ஒரு சிரிப்பு அவளது உதடுகளில்.

"பெட்டை உன்னட்டை இருக்கிற வடிவே இந்தச் சிரிப்பு ஒண்டுதான்"

"ம்ஹம்... இது பொய்" சிணுங்கினாள்.

தாவடிப்பள்ளத்தைக் கடந்து நாங்கள் மேற்குப் பார்த்து நடந்தோம்.

கந்தையா அப்பா, தூக்கிக் கட்டிய வேட்டிக்குக் கீழாகக் கோவணம் தெரிய அவரது வயலில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார்.

"கிழவன்ரை விதை கூடத் தெரியுது", சிரிப்புடன் மெதுவாகக் கூறிய நான் - நாக்கைக் கடித்துக் கொண்டேன்.

வரதா எதையுமே கண்டு கொள்ளாதவள் போல நடந்து கொண்டது எனக்கு நிம்மதியாக இருந்தது.

கெம்மிலைக் கடந்து, பெரிய பனந்தோட்டத்தை அடைந்தோம். அடர்த்தியான பனங்கூடலுக்குள்ளாக நடப்பதற்கு வரதா பயப்பட்டாள்.

"பயப்பிடாத, என்னோட வா பெட்டை...!"

"பெட்டையா... உன்ரை வாயில சூடு வைக்க வேணும்."

"..............."

கூடலைச் சுற்றி வந்த நாங்கள் உள்ளே நுழைந்து, இரண்டொரு அணில் கோதிய நுங்குகளை எடுத்துக் கொண்டோம்.

"வீட்டில் கிடக்கிற நுங்குகளையும் இதுகளையும் வீட்ட போனதும் வெட்டிக் குடிக்க வேணும்...!"

"ம்..." கூட்டியபடி என்னுடன் அவள் கூடலை விட்டு வெளியே வந்தாள்.

பனந்தோட்டத்துக்கு மேற்குச் சாய்வில் அந்தப் புதர் இருந்தது. அதில் நாகதாளி, ஈஞ்சு, காரை, முள்ளி, பிரண்டை,முல்லை, புல்லாந்தி என்று கொடிகளும் செடிகளும் பற்றிப் படர்ந்து கிடந்தன. புதரின் நட்ட நடுவில் கிளை எறிந்து ஒரு புன்னை மரம். மரத்தின் கிளைகளில் அழகிய தூக்கணாங் குருவிக்கூடுகள்! கூடு களின் மேற்பகுதி அகலமாகவும் கீழ்பகுதி ஒடுக்கமாகவும் இருந்தன. தேவதச்சன் விஷ்வகர்மா இந்தக் குருவிகளிடம் கற்றுக் கொள்வதற்கு நிரம்பவே இருந்தன. கலைகள் மனிதனுக்கு மட்டுமே உரியதா என்ன...? பறவைகளுக்கும் விலங்குகளுக்குமுண்டு!

"நாகதாளிப்பழம் பிடிங்கித் தரவா... தின்னிறையா..."

நான் அவளைக் கேட்டேன்.

"இல்லை... வேணாம்... நஞ்சா இருக்கும்...!"

"இல்லை வரது, ருசியா இருக்கும். அங்க பார் தட்டையா மஞ்சள் முள்ளோட இருக்கிறது இலை கண்ணியா மொட்டுக்களும் மஞ்சள் பூக்களும் இருக்கு. பச்சைக் காய்களும். ஊதா நிறத்திலிருப்பவை தான் பழங்கள். பழங்களைப் பிடுங்கட்டா?"

சொன்ன வேகத்திலே பற்றைக்குள் புகுந்து, பழங்கள் சிலதைப் பறித்து வந்து, முட்களை நீக்கி அவளுக்குக் கனிவுடன் தந்தேன்.

அவள் பழத்தை முகச்சுளிப்புடன் சாப்பிட்டாள்.

பழத்தைச் சாப்பிட்டதும் அவளுடைய வாய், நாக்கு, முரசு, உதடுகள் என்று எல்லாமே ஊதா நிறத்தில் பளபளத்தன.

நானும் சில பழங்களைத் தின்றேன்.

"செந்தில் உன்ரை வாயும் உதடுகளும் கூட பேர்ப்பிள் கலரில மாறீற்று. லிப்ஸ்ரிக் போட்ட மாதிரி இருக்கு." கூறியவள் குதூகலியாய்ச் சிரித்தாள்.

"உனக்கும் தான்... இது புதுமாதிரியான லிப்ஸ்ரிக்...!"

"இன்னும் கொஞ்சப் பழம் பிடுங்குவமா...? வீட்ட கொண்டு போகலாம்."

"வேண்டாம்."

"..............."

அவளது பதிலை எதிர்பார்க்காமவேல நான் புதருக்குள் மீளவும் நுழைந்தேன்.

நாகதாளியில் கை பட்ட மாத்திரத்தில் ஏதோ சீறுவது போல இருந்தது.

வெடுக்கென கைகளை எடுத்த நான், அவளுக்கு அருகாகப் பாய்ந்து சென்று நின்றபடி புதரைப் பார்த்தேன்.

பாம்பு... நாக பாம்பு தலை தூக்கிப் படம் விரித்தது.

விதிர் விதிர்த்துப் போன நான் வரதாவை இழுத்துக் கொண்டு, வயற்பரப்பில், கண்மண் தெரியாமல், வரம்புகளைத் தாண்டிக் குதித்தோடினேன்.

"பாம்பின்ரை படம் எவ்வளவு வடிவு பாரடா...!"

"ஓமடி... ஓமடி விசரி... பாம்பு வடிவு தான். கொத்தினால் தெரியும்... நச்சுப்பல்லுப் பட்டால் கடவுளிட்டைதான் நாம நேர போய்ச் சேர வேணும்"

"நல்ல பாம்பு கொத்தாது...!"

"ஓம் ஓம் நீ எல்லாம் தெரிஞ்சவ..."

மூச்சு வாங்க ஓடிய நாங்கள் இருவரும் சிலுந்தா வின் கரையை அடைந்தோம். அந்தக் குளத்தின் நீள அகலத்தைப் பார்த்த வரதா மலைப்புடன் நின்றாள்.

அவளது மூக்கில் முத்துமுத்தாய் வியர்வைத் துளிகள். வியர்வையைத் துடைத்த நான்: "உன்ரை மூக்கு மொசு மொசு எண்டு மஞ்சள் கரட் மாதிரி இருக்கு. கடிச்சுச் சாப்பிடவா?"

பதில் ஏதுமில்லாமல் நின்றவள். எனது முதுகில் குத்தினாள். கலக்கத்துடன் தனது மூக்கையும் தடவிக் கொண்டாள்.

குளத்தின் தென்கிழக்கு மூலைக்கு வந்த நாங்கள்

அங்கு சடைத்து, வளர்ந்து, விழுதெறிந்திருந்த ஆலமரத் தடியில் ஓய்வு எடுத்துக் கொண்டோம். சோழகம் சிலுசிலுப்புடன் எங்களைத் தழுவியது. எப்பொழுதும் துருதுருப்புடன் இருக்கும் வரதா ஆலம் விழுதுகளைப் பற்றியபடி ஊஞ்சலாடினாள்.

"இந்தக் குண்டில் குளிப்பமா...? நீந்த உனக்குச் சொல்லித்தாறன்..."

"வேணுமெண்டால் நீ குளி... நான் வீட்டில குளிப்பன்..."

இந்த வெக்கைக்கு குளிர்ந்த நீரில குளிச்சா அச்சாவா இருக்கும் வரது."

கூறிய நான், நீச்சல் குண்டின் கரைக்குச் சென்று, சுற்று முற்றும் பார்த்துவிட்டு, கண்சிமிட்டும் நேரத்தில் எனது சாறத்தை உருவி எறிந்து விட்டு, நீரில் குதித்தேன்.

என்னைக் கவனித்த வரதா "அம்மணக்குண்டி ... அம்மணக்குண்டி..." என்று கைகொட்டி ஆர்ப்பரித்தாள்.

"................."

மௌனமாக, அவளைப் பொருட்படுத்தாமல், அக்குளத்தின் சிறு குண்டில் மீன்குஞ்சின் லாவகத்துடன் கைகளையும் கால்களையும் வலித்து வலித்து நீந்தினேன். நிமிர்ந்து கிடந்தும் கவிழ்ந்து கிடந்தும் நீந்தி அவளுக்கு வித்தை காட்டினேன்.

ஆர்வத்துடன் நான் நீந்துவதையே பார்த்திருந்த அவள்:"குண்டுப்பக்கம் போகாதையடா... கவனம் கவனம்..." என்று மூச்சுவிடாது எச்சரித்துக் கொண்டிருந்தாள்.

என் மீதான அவளது அக்கறையும் பிரியமும் என் உள்இழைகளை அழுத்தமாகவே உரசியது.

"வரது வாம்மா, வந்த தண்ணியில இறங்கு... தண்ணி எவ்வளவு குளிர்ச்சியா இருக்கு தெரியுமா...? இறங்கு பெட்டை...!"

சிறிது அருக்காணியம் காட்டியவள் தனது சட்டையைக் கழற்றி என்னுடைய சாறத்துக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு, நீருக்குள் இறங்கினாள்.

"நிக்கர் நனையப் போகுது..."

"உன்னைப் போல அம்மணக்குண்டியா என்னாலை குளிக்கேலாது..."

"பூ... பெரிய இவ..."

நீரில் இறங்கியவள். கரையில் நின்ற படி நீரில் குந்தி குந்தி எழுந்தாள்.

"இது என்னடி காகக் குளிப்பு...!"

சிறு சிணுங்கலுடன், என்னை நோக்கி மெதுவாக நகர்ந்து வந்தாள்.

கிட்டவா வந்த அவளை, எனது விரித்த கரங்களில் தாங்கிக் கொண்டேன். தலைகுப்பற எனது கைகளில் கிடந்த அவளை கைகளையும் கால்களையும் அடித்து நீந்தும் படி கூறினேன். சிறிது நேரம் அப்படிச் செய்தவளை, சுயமாக நீந்திப் பார்க்கட்டுமே என்று நினைத்தவனாய் எனது கைகளை விலக்கினேன். ஒரு நிமிஷநேரம் நீரில் மிதந்தவள். அடுத்த கணத்தில் நீரில் மூழ்கினாள். ஆழம் அதிகமில்லாததால் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றவள், "ஊத்தைத் தண்ணியைக் குடிச்சிட்டன்" என்று முகம் சுளித்தாள். பின்னர், கரை ஏறியவள் தனது உடம்பில் வடிந்த நீரைக் கைகளால் வழித்து விட்டாள். சட்டையை எடுத்து அணிந்து கொண்டாள். தலையைச் சிலுப்பிக் கொண்டவள், கரங்களால் கூந்தலைக் காற்றில் உலரும் வகையில் வார்ந்து விடவும் செய்தாள்.

"வரதா ஒரு நிமிஷம் கண்ணை மூடடி... நான் கரைக்கு வரவேணும்."

"ஏன்... " என்று சிரித்தவள், என்னைப் புரிந்து கொண்டு, குளத்துக்கு எதிர்த்திசையில் திரும்பி நின்று கொண்டாள். கரை ஏறிய நான் அவக்கென எனது சாரத்தை எடுத்து உடுத்திக் கொண்டேன்.

"நீர்த்தவளை மாதிரித்தண்ணியில கிடந்து நீ வெளிறிப் போயிட்டயடா..."

"சரி... சரி வீட்ட போவமா...? அம்மா தேடுவா... நல்லா நேரம் போச்சுது... வீட்டிலை இண்டைக்கு நல்ல பூசைதான் கிடைக்கப் போகுது."

"எனக்குமா...?"

"உனக்கும்தான்!"

அவள் நார்க்கடகத்தைத் தூக்கித்தர, நான் அதை வாங்கித் தலையில் வைத்தபடி நடந்தேன். என்னோடு தோள் உரச உரச அவளும் நடந்தாள். இடைக்கிடை அவளத ஸ்பரிசம் சொர்க்கத்தைத் தொட்ட சுவையை எனக்குத் தந்தது.

6

வரதா கந்தர்மடம் திரும்பி இரண்டு நாட்களுக்கு மேலாகி விட்டது. எனக்கு அவள் இல்லாத சூனிய வெளி தடுமாற்றத்தைத் தந்தது. ஒளி உமிழும் பெருநட்சத்திரமாக அவளெனக்கு எப்பொழுதும் இருந்தாள். அந்த அற்புத நட்சத்திரத்தின், சக்தி தோய்ந்த, ஒளி குறைந்த கோளாகத் தான் நான் அவளுக்கு இருந்தேன். அவளைச் சுற்றி அலைவதான எண்ணம் தான் எனக்கு அப்பொழுது இருந்தது. மனதில் மலர்ந்திருந்த அவளை நான் மீளவும் சந்திக்க முடியுமா...? மனது பரிதவித்தது.

"அவள் நின்ற இடம், பார்த்த இடம், முறுவல் பூத்த இடம், புளகமுறக் கதைத்த இடம், ஓரக்கண் பார்வையில் ரசித்த இடம் என்று எல்லாமே லயிப்பைத் தருகிறதே. இன்னும் துருதுருப்புடன் சோர்வழிய என்னுடன் நடந்து வந்த நவக்கை வயல், தாவாடி, கெம்மில், பெரிய பனந்தோட்டம், அதன் அருகு இருந்த புதர், புதரில் பத்தி விரித்த பாம்பு, அதை நிலைக்குத்தி நின்று பார்த்த அவளது பார்வை, சிலுந்தா, அதன் குளிர்ந்த நீர்த்தடம் என்று எல்லாமே சித்திரமாய், உயிர்ப்புள்ள ஓவியமாய் மனதில் பதிந்து தெவிட்டுதல் இல்லாத் தவிப்பைத் தருகிறதே"

எனது மனதில் பதகளிப்பு.

அன்று பாடசாலைநாள். பாடசாலைக்குப் போக விருப்பமில்லாமலேயே போனேன். மனதில் அழுத்தமாய்ப் படிவு கொண்ட துயரம் என்னை வருத்தியது. அவளது அருகிருப்பும் கனிவான குரலும் மீண்டும் மீண்டும் மனதில் பிரதிமை கொண்டு என்னை உலைத்தன. வகுப்பாசிரியர் சிவசாமி அன்று கணித பாடத்தில் - பெருக்கல், வகுத்தல் என்பவற்றைப் புதிதாகக் கற்பித்து, பயிற்சி வினாக்களும் தந்தார். அவர் கற்பித்தது, மிகச் சுலபமாக எனக்குப் புரிந்தது. அதற்குக் காரணம் வரதா தான் என்பது உங்களுக்கும் எனக்கும் தெரியும்.

ஆசிரியர் கற்றுத் தருவதற்கு முன்னாக, அவளிடம் தான் நான் அவற்றைக் கற்றிருந்தேன். அவள் கற்பித்ததால் தான் எனக்கு ஆசிரியர் தந்த பயிற்சி, தடுமாற்றம் எதையும் தரவில்லை. பத்துக்கணக்குகள். எல்லாவற்றையும் நான் விரைவாகப் போட்டு ஆசிரியரிடம் காண்பித்தேன். கணக்குகள் எல்லாமே சரியாக இருப்பதைக் கண்ட ஆசிரியர் எனது முதுகைத்தட்டி "வெரிகுட்!" என்று பாராட்டினார். அவரது பராரட்டு என்னைக் குளிர்வித்தது. "எல்லாமே அவளால் தானே..." என்று அப்பொழுது நினைத்துக் கொள்ளாமல் என்னால் இருக்க முடியவில்லை.

"அவள் ஒல்லிப்பாச்சான். சுள்ளிச் சுள்ளிக்கைகள், கால்கள் ஆனாலும் அவளது அந்த வட்டமுகம் அதில் ஒளியுமிழும் அகன்ற விழிகள்; அவற்றில் ததும்பி நிற்கும்

பரிவு, நிதானம், ஈரலிப்பான உதடுகள், அவற்றின் திரட்சி, பசுமை என்று எல்லாமே என்னை வசீகரித்தன. அயலில் அவளைப் போல யாரும் இல்லை என்பது தான் எனது கணிப்பு.

வீட்டினுள்ளே போன நான்அவள் போட்டுப் படுத்த பாயையும் தலையணையையும் தொட்டுத் தொட்டு பார்த்தேன். அவற்றில் இருந்த இளம் சூடு அவளை நினைக்க வைத்தது. உள்கொடியில் அவளது சட்டையும் உள்ளாடையும் கிடந்தன. அவற்றைக் கிணற்றடிக்கு எடுத்துச் சென்று, துவைத்து உலர விட்டேன். அப்பொழுது அங்கு வந்த அம்மா கேட்டார்:

"என்ன வரதா உடுப்புகளை மறந்து போய் விட்டிட்டுப் போயிட்டாளா...? உலர்ந்ததும் எடுத்து வையப்பு! வரதா இந்தப்பக்கம் வந்தால் எடுத்திட்டுப் போவாள்..."

"வருவாளா...?"

எனது குரலில் இருந்த அவலாதி அம்மாவுக்கு தெரிந்து விடக்கூடாது என்பதில் நான் கவனமாக இருந்தேன்.

"சித்திரா பௌர்ணமியோட சிவமணி அது தான் உன்ரை சின்னமாமி பட்டவேம்படி வயிரவர் கோயில் பொங்கலுக்கும் படையலுக்கும் வருவா...!"

"அவ வந்தா... வரதா வருவாளா...?"

"கூட்டி வரச் சொல்லுவம். துரு துருத்த பெட்டை, தாய் கேளாமலே அவவோட தொத்திக் கொள்ளுவாள்..."

"அவவின்ரை அம்மாச்சி தங்கம்மா வருஷா வருஷம் வந்து பொங்கிப் படைக்கிறவ... அவ மோசம் போனபிறகு உன்ரை மாமிதான் தொடர்ந்து செய்யிறா... அவவைத் தொடர்ந்து உன்ரை வரதாதான் செய்ய வேணும்."

"என்ரை வரதாவா...?" அம்மா கூறியது என்னைப் புளகமுற வைத்தது. உள் மனது சிலிர்த்தது.

## 7

சித்திரா பௌர்ணமிப் பொங்கலுக்கு, பட்ட வேம்படி வயிரவர் கோயிலுக்கு வரதா வரவில்லை. மாமியுடன் மச்சான் குருநாதன் வந்திருந்தான்.

குருநாதன் நெகுநெகு என்று வளர்த்தி கொண்டு நெடுவலாக இருந்தான். வெள்ளை வேளோரென ஒரு நிறம். சுருண்ட தலைமுடி. உதட்டுக்கு மேலாக அரும்பத் துடிக்கும் மீசை. ஆழ்ந்த கண்கள். கண்களைச் சூழ ஒரு வகை ஒளி உமிழ்தல்.

பூசை நடந்து கொண்டிருந்த பொழுது என்னை இழுத்துக் கொண்டு வங்களாவடி வரை சென்றவன், ஏகாம்பரத்தார் கடையில் திறீரோஸஸ் சிகரட் வாங்கிக் கொண்டான். சிகரெட்டைப் பற்றிக் கொண்டு, புகையை உள் இழுத்து,மூக்காலும் வாயாலும் வெளியே ஊதினான்.

இதென்ன கெட்ட பழக்கம் என நான் நினைத்த போது: "வாயைப் பிளந்தபடி ஏன் நிக்கிற... நீயும் தம்மடிச்சுப் பாரன்ரா" என்றான்.

விளங்கிக் கொள்ளாமல், "தம்மெண்டால் என்னடா.." என்றுகேட்டேன்.

"இது கூடத் தெரியாதா...!" சிரித்தவன் சிகரெட்டை என்னிடம் தந்து, "தம்மெண்டால் புகை பிடிக்கிறதுதான்..." என்று சொன்னான்.

சிகரெட்டை வாயில் வைத்து, புகையை உள்ளிழுத்துப் பார்த்தேன். நுரை ஈரல் வரை சென்று தாக்கிய புகை என்னைக் கமற வைத்தது. இருமியபடி அவனிடம் சிகரட்டைத் தந்தேன்.

"பழக்கமில்லை அது தான் இருமல்..." என்றவன் எனக்கு இரண்டு தோடம்பழ இனிப்பு வாங்கித் தந்தான். வாயில் போட்டதும் இனிப்புக் கரைந்தது.

அவன் சிகரட்டுக்குடித்து முடித்ததும் கோயில் பக்கமாக வந்தோம்.

"இவன் ஏன் சிகரட் குடிக்க என்னைத் தூண்டி னான்! தன்ரை கள்ளத்தை, ஊத்தைப் பழக்கத்தை ஆருக்கும் நான் சொல்லக்கூடாது என்பதற்காகவா...? கூடாத பிள்ளை, மாமா போல எதிர்காலத்தில குடிக்கவும் செய்வானோ?"

மனதைக் குடையும் நினைவுகள்!

அவன் சிகரட் குடித்து முடிந்ததும் கோயில் பக்கமாக வந்தோம்.

கோயிலில் சித்திர புத்திரனார் கதை படிக்கத் தொடங்கவில்லை. அதற்கு முன்னதாக பிள்ளையள் தேவாரம் பாடினார்கள். நானும் பாடினேன். குருநாதனும் அரைகுறையாகப் பாடினான்.

"சிகரட் பிடிச்ச வாயால தேவாரம் பாடலாமா? தெய்வக் குற்றம். எனக்கும் அவனுக்கும் பாவம் தான் கிடைக்கும்!"

நடுக்கத்துடன் குழப்பினேன்.

சித்திர புத்திரனார் கதையைச் சாந்தலிங்க மாமா தான் பாடினார். கதை விடிய விடியப் போய்க் கொண்டிருந்தது.

கண் விழித்த பொழுது, நான் வீட்டில் கூடத்தில் கிடந்தது தெரிந்தது. வாரிச்சுருட்டியபடி எழுந்தேன். வெளியே வெய்யில் பளிச்சென்று எரிந்தபடி!

பரபரப்புடன் குருநாதனைத் தேடினேன். அவனும் மாமியும் காலையிலேயே கந்தர்மடம் போய் விட்டதை அம்மா கூறினா.

எனக்கு லேசான மகிழ்ச்சி மனசில பரவியது. "அந்தத் துஷ்டப் பையனை இனிப் பார்க்கக் கூடாது. பார்த்தாலும் பேசக் கூடாது..." மனதில் ஆழமாகப் பதிந்து விட்ட வைராக்கிய உணர்வு. உடல் லேசானது போல இருந்தது.

## 8

சித்திரா பௌர்ணமிக்கு வயிரவர் கொயிலுக்கு வராமல் விட்ட வரதாவை, மூன்று மாதங்களின் பின்னர் ஆவணியில், நல்லூர்க் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா வில் தான் கண்டேன்.

சாமி கும்பிடப் போன எனக்கு என் தேவியின் தரிசனம் கிடைத்தது மகிழச்சியாக இருந்தது.

அவள், அவளது அம்மாவுடன் வந்திருந்தாள்.

சண்முகன் தேரிலேறி தீபாராதனையின் பின்னர், பவனித்துத் தெற்கு வீதிக்கு வந்த போது, அந்தக் குளிர்ச்சி யான கரங்கள் எனது வலது முழங்கையைத் தழுவியது. திரும்பினேன். வரதா...! மாமியும் சற்றுத் தூரத்தில் சிரித்தபடி நின்றார். அம்மா அவவைக் கண்டதும் நெருங்கிச் சென்று ஏதோ கதைத்தபடி...

வரதாவைச் சூழ இருந்த இதமும் தூய்மையும் இளமையின் ரசத்துளிர்ப்பும் என்னை மருட்டியது. வரதா என்னைப் பிரிந்து பட்டணத்துக்குப் பயணப்பட்ட பின்னர் எனக்கு அவை எல்லாமே இல்லாமலே ஆகிவிட்டது. ஆனால் இப்பொழுது அவளது பிரசன்னம் எல்லாவற்றை யுமே மீளவும் எனது காலடியில் கொட்டிக் குவித்து விட்டதான உணர்வை எனக்குத் தந்தது.

"இதென்ன கூத்து! எனக்கும் அவளுக்குமான இந்தத் தொடர்பு ஜென்ம பரியந்த பந்தமா...?" நான் அவளது வலது கரத்தை மிகுந்த பிரீதியுடன் எடுத்து எனது

கரங்களினுள் பொதித்துக் கொண்டேன்.

இந்த உலகத்தையே வென்று விட்டதான உணர்வு எனக்கு!

"வீட்ட வந்திட்டு ஊருக்குப் போவனடா...?"

வரதாதான் கேட்டாள்.

"இல்லை. அம்மா வீட்டபோய் விரதத்துக்குச் சமைக்க வேணும்."

"அதெல்லாம் ஒண்டும் வேண்டாம். வீட்ட வா. அம்மாவும் விரதம் தான். வீட்டில நீயும் மாமியும் சாப்பிடலாம்!"

"ம்..." என்று கூறியநான், அவளை அழைத்துக் கொண்டு, மாமியும் அம்மாவும் நின்ற இடத்துக்குச் சென்றேன்.

தேர் மேற்கு வீதியில் பவனித்த போது, நாங்கள் அரசடி வீதியால் திரும்பி, கந்தர்மடம் நோக்கி நடந்தோம்.

வீடு வந்து சேர்ந்ததும் நான் அவளைப் பார்த்துக் கேட்டேன்:

"தாகமா இருக்கு... தண்ணி வேணும் குடிக்க."

அவள் என்னிடம் செம்பு நிறைந்த நீரைக் கொண்டு வந்து தந்தாள்.

நான் நீரை மூச்சுவிடாமல் மண்டினேன்.

"கனக்கக் குடியாதையடா... சாப்பிடேலாது...!"

மாமி வாழை இலை பரப்பி, உணவைப் பரிமாறினாள். மொட்டைக் கறுப்பன் குத்தரிசிச்சோறு, பருப்பு, கத்தரிக்காய் வெள்ளைக்கறி, வெந்தயக்குழம்பு, பூசனி, கரட் சம்பல், பயற்றங்காய், பாவற்காய்ப்பிரட்டல் என்று பல கறிகள் இலையில் படையலானது. பருப்பில்நெய்கூட மாமி வார்த்தார். இன்னும் தயிர், ரசம் என்று வகை வகையாகப் பரிமாறப்பட்டன.

எல்லாரும் உணவைச் சுவைத்தோம். சாப்பிட்டபடி இருந்த எனக்குப் புரைக்கேறியது. பதட்டபட்டவளாய் வரதா எழுந்து எனது உச்சந்தலையில் தட்டினாள்.

மாமியின் கொடுப்பினுள் சிரிப்புக் குமிழிட்டது.

"பார்த்துச் சாப்பிடப்பு..." இது அம்மா.

வரதா நீர் எடுத்துத் தர, அதை அருந்தி என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

"பார்த்துச் சாப்பிட வேணாமா?" இது மாமி.

சாப்பாடு ஆனதும் நானும் அவளும் வீட்டுக்கு முன்பாக வந்தோம்.

முன்முற்றத்தில், றோசாச் செடிகள் பல வண்ண மலர்களுடன்.

செடிக்கு அருகாகச் சென்ற நான்:

ரோஜா நிற மலரைத் தொட்டு அதன் இதழ்களை ஸ்பரிசித்தபடி: "இந்த இதழ்கள் உன்ரை கன்னக் கதுப்புகள் மாதிரி மெதுமெது என்று இருக்கு பெட்டை! நிறம் கூட அது மாதிரி..."

"தொட்டுப் பார்த்த மாதிரிக் கதையளக்கிறை"

"தொட்டுப் பார்த்தனே..."

"எப்பயடா கள்ளா...? உன்னிலை ஒரு காவாலித் தனம் இருக்கு..."

நான் சிரித்தேன். அவளும் கலகல என என்னுடன் சேர்ந்து சிரித்தாள். ஏதோ என்னை வெற்றி கொண்ட தோரணை அதில் இருந்தது.

முன் வளவில், மேற்குச் சாய்வில் சல்லிக்கற்களும் வெண் குருகு மணலும் குவிக்கப்பட்டுக்கிடந்தன.

"இதெல்லாம் எதுக்கு...?"

"கல்வீடு கட்டப் போறம்...!"

"கல்வீடா!" வியப்புடன் அவளைப் பார்த்தேன்.

அவள் சிரித்தபடி...

சிரிப்பில் மலர்ந்த அவளது உதடுகளை எனக்குத் தொட வேண்டும் போலிருந்தது.

"நீ சிரிக்கேக்க நல்ல வடிவு..."

"இதை எத்தின தடவையடா சொல்லுவை... சிரிக்கேக்க கன்னத்தில குழியும் விழுகுதா...?"

"ம்... விழுகுது குஞ்சு"

அப்பொழுது உள்ளே இருந்து மாமி எங்களைக் கூப்பிடுவது கேட்டது.

வட்டுருக் காய்க் காச்சிய பசும் பாலில் மாமி தேநீர் கலந்து எங்களுக்குத் தந்தாள்.

அதைச் சுவைத்துக் குடித்தோம். குடிக்கும் போது அவளது கடைவாயில் வழிந்ததேநீரை நான் துடைத்து விட்டேன்.

"செந்தில் அச்சாக்குட்டி...!"

"உன்னிலை எனக்குச் சரியான விருப்பம் அதுதான்...!"

வரதா என்னை, தனது அறைக்கு அழைத்துச் சென்றாள்.

போனவுடன், அவள் புதிதாகப் போட்ட ஓவியங்களை எனக்குக் காட்டினாள்.

மழைநாள், பூரணச்சந்திரன் - அதற்குக் கண்களும் மூக்கும் இன்னும் என்னென்னவோஎல்லாம் இருந்தன. கண்களில் இருந்து நீர் கொட்டியது. இன்னும் புள்ளிப்பசு அதில் கன்று பாலூட்டியபடி குழம்பலாய் ஓர் ஓவியம். அதில் பொன் இழைகளாய் வர்ணம்; கபில நிற, கருமை நிறப்புள்ளிகள், இலைப் பச்சையுடன் கலந்த கண் சிமிட்டும் ஊதா நிறத் தீற்றல்கள்.

"என்ன இது விளங்கேல்லை"

"அந்தி வானம்!"

"அதென்ன சந்திரன் அழுகிறமாதிரி"

"அது என்னையும் உன்னையும் பார்த்து அழுகுது... ஏன் இந்த உலகத்தைப் பார்த்து அழுகிறதாகவும் எடுக்கலாம்...!"

"புள்ளிப்பசுவும் கன்றும் இருக்கிற படத்தில ஒண்டும் தெரியேல்லையே...?"

அவள் கேட்டாள்.

படத்தை அவளிடம் இருந்து வாங்கித் திரும்பத் திரும்பப் பார்த்த நான் கூறினேன்:

"கன்றின் கடை வாயிலிருந்து பாலும் நுரையும் வழியுது அதுதானே...!"

"கெட்டிக்காரன்ரா நீ...! நல்ல கூர்க்கண்... உன்னாலை எதையும் கவனிக்க முடியுது..."

"ம்..." கொட்டியவனாய், சோம்பல் முறித்தேன்.

"படுக்கப் போறையா...?" கேட்டவள் தனது கட்டிலைத் தட்டி, செப்பனிட்டு அதில் உறங்கும் படி என்னை விட்டு விட்டு வெளியே போனாள்.

நான் விழித்துப் பார்த்த பொழுது, வரதா பக்கத்தில் படுத்துக் கிடப்பது தெரிந்தது. அவளை நெருக்கத்தில் பார்த்தேன். அவளது நெற்றியில் முத்துக் கோர்த்தது போல வியர்வை! துடைத்து விட்டு வெளியே வந்தேன்.

அம்மா வேலணை போவதற்கு ஆயத்தமாவது தெரிந்தது. நான் முகம் அலம்பி, காற்சட்டையையும் சேர்ட்டையும் சரி செய்து கொண்டேன். எனது தலையை வாரிவிட்ட அம்மா, பவுடரும் போட்டு விட்டா.

மாமியிடம் விடை பெற்ற நான், வரதாவின் அறையை எட்டிப் பார்த்தேன். வரதா விழிப்புக் கண்டிருந்தாள். நான் அம்மாவுடன் ஊருக்குப் பறப்பட்டு விட்டதைக் கண்ட அவள் எனக்கு அருகாக வந்தாள்:

"இனி எப்பையடா உன்னைப் பார்க்கிறது...?"

"இலந்தை வனப் பிள்ளையார் கோயில் திருவிழா வருகுது... இரண்டாந் திருவிழா உங்க அம்மாச்சியின்ரை

தான்... அப்பவா... மாமியோடவா...!"

"ம்..." சொன்னவள் நான் விடைபெற்றதும் கேற்வரை வந்து, நான் போவதையே பார்த்தபடி நின்றாள்.

என்னையே பார்த்தபடி நின்றவளது கண்களில் நீர்... "இது ஏன்... என நானும் கலங்கினேன்"

9

அம்மாவுக்கு சகோதரர்கள் நாலுபேர். பெரிய மாமா, சின்னமாமா வரதாவின் அப்பா, ஆசைமாமா இவர்கள் அம்மாவின் அண்ணன்மார். குஞ்சிமாமா கடைக்குட்டி அம்மாவின் தம்பி.

குடும்பத்தில் அம்மா தனியொரு பெண். சுடரும் பொன் பூப்போல ஒளியும் அழகும் அவளில் ததும்பி வழியும். அவள் குடும்பத்தில் ராணி மாதிரி இருந்தாள். அப்படி ஆச்சி சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

ஊரில் தாவாடிக்காரி என்று அன்பாக அழைக்கப் படும் ஆச்சி ஒரு ஸ்தாபனம். பிள்ளைகளால் அவளுக்குப் பெருமை அவளால் பிள்ளைகளுக்குப் பெருமை.

கை வைத்தியம் அவளுக்கு வாலாயப்பட்ட வொன்று. வைத்தியர் தாமோதரனாரின் மகள் என்பதில் அவளுக்கு நிரம்பிய கர்வம் உண்டு.

குஞ்சி மாமா வரதாவின் சின்னம்மாவைத்தான் சடங்கு செய்திருந்தார். குஞ்சி மாமி, அரைகுறை வயதில் , தீராத வியாதிகளால் உழன்று, காலமாகி விட்ட நிலையில், மாமா இப்பொழுதெல்லாம் தனிக் கட்டையாக ஒருவகை யில், பிரம்மச்சாரி வாழ்க்கைதான் வாழ்ந்து வருகிறார்.

குடும்பத்தில் படித்த மனிதர் அவர்தான். எனக்கு மிக நெருக்கமாக இருந்ததுடன் - அவர் எனது கல்விப் புலமைக்கு வித்திட்டவராகவும் வழிகாட்டியாகவும் இருந்தார்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான அவர் - பயிற்சி முடிந்த கையுடன் சரவணை நாகேஸ்வரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். ஊரில் ஆச்சியுடன் தான் அவரது இருப்பு.

பாடசாலை விட்டு வந்த நான், மாமா வீட்டுப் பக்கம் தான் போனேன். இறுதித் தவணைப்பரீட்சையில் நான் சித்தியடைந்ததை அவருடன் பகிர்ந்து கொள்ள எனக்கு ஆர்வமிருந்தது. வீட்டுக் கேற்றைத் திறந்ததும் அவர் பிரியமாக வளர்க்கும் ரைகர் வாலைக் குழைந்தபடி என்னை வரவேற்றது. அன்புடன் அதைத் தடவிக் கொடுத்துவிட்டு, மாமாவைத் தேடிப் போனேன்.

மாமா முற்றத்தில் விறகு பிளந்தபடி நின்றார். வெயிலில் வேர்வை பரவ நின்றார்.

என்னைக் கண்டதும் அவரது கண்களில் வழிந்த குழுமையும் உதடுகளில் துளிர்த்த இளமுறுவலும் எனக்குப் பிடித்திருந்தது. வேட்டியை மடித்துக் கட்டிய படி வெறும் மேலுடன் நின்ற அவரது தோற்றம் மிகுந்த பிரமிப்பைத் தருவதாயிருந்தது.

மாமா அழகன். நல்ல உயரம். திடகாத்திரமான உடல்வாகு. விரிந்த மார்பு; மார்பு முழுவதும் பொசு பொசு மயர்க்கற்றை. கூர்த்த நாசி, திரண்ட அழகிய உதடு கள்; உதட்டுக்கு மேலாக ட்றிம் செய்யப்பட்ட அடர்த்தி யான மீசை, காற் பாதங்களைத் தொடத் துடிக்கும் நீண்ட கரங்கள். இடது கையின் சுட்டு விரலில் மாமி பரிசளித்த கலங்கல் பச்சைக் கல் மோதிரம்.

"அட இவர் எவ்வளவு கம்பீரமாக இருக்கிறார், மாமி கொடுத்து வைக்காதவள். இவருடன் அதிக காலம் வாழாமல் ஏன் பிரிந்திருந்து நோயுடன் மல்லுக் கட்டிய படி போய் விட்டாள். அவளது லபிதம் அவ்வளவு தான்.

கலங்கியபடி நின்றேன். எனது கலக்கம் மாமாவைத் தொட்டிருக்க வேண்டும். அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்:

"என்னடா என்ரை ஆசை மருமகனே...!"

"தவணைப் பரீட்சை முடிஞ்சிற்றுது... றிப்போர்ட் காட் கொண்டு வந்தனான் காட்டிறதுக்கு..."

"எங்க பாப்பம்..." கூறியவர் வாங்கிப் பார்த்தார்.

"பிள்ளைக்கு தமிழ், கணிதம், சமயம், பொது விஞ்ஞானம், ஆங்கிலம் எல்லாத்துக்கும் தொன்னூறு மார்க்ஸூக்கு மேல இருக்கு... என்ரை குட்டிப்பயல் கெட்டிக்காரன்."

பெருமை பிடிபடாமல் நான் சிரித்தேன்.

"இனிப்பிள்ளை நாலாம் வகுப்பா...?" கேட்டவர், தனது கரங்களை வேட்டியில் நன்றாகத் துடைத்து விட்டு என்னை அணைத்து உச்சி முகர்ந்தார். பின்னர் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டார்.

புளகமடைந்து நின்ற எனக்கு, ஆச்சி கூப்பிடுவது கேட்டது. வீட்டின் உள்ளே சென்றேன்.

வட்டுருக்காகக் காய்ச்சிய பசும் பாலை பேணியில் வார்த்த ஆச்சி: "குஞ்சி மாமாற்றை இதைக் குடுத்திட்டு வாராசா பிள்ளைக்கும் குடிக்கப் பால் தாறன்..." என்றாள்.

பாலை மாமாவிடம் தந்த நான், மீளவும் ஆச்சியிடம் வந்தேன். எனக்கும் ஆச்சி பால் தந்தாள்.

பாலை ருசித்துக் குடித்தபடி, மாமாவிடம் வந்தேன். மாமா விறகு கொத்தி முடித்து விட்டு, கிணற்றடியில் கைகால் கழுவியபடி நின்றார்.

ஆச்சி மோர் கடைவது காதில் விழுந்தது. உள்ளே வந்த நான் மோர் கடைவதாகக் கூறி ஆச்சியிடம் மத்தை வாங்கிக் கொண்டேன்.

மோர் கடைந்தபடி இருந்த போது, தேங்காய்ப்பூத் துருவல் தூவி ஆச்சி அரிசிமாப் பிட்டு அவித்தாள். பிட்டு அவித்த பொழுது வந்த மணம் என்னைத் தூக்கியது. அந்த மணத்தை நான் மூசி மூசி உள் இழுத்துக் கொண்டேன்.

ஆச்சி நெய் சொரிந்து முட்டை பொரித்தாள்.

எனக்கு வாயில் நீர் ஊறியது.

மாமா உள்ளே வந்ததும் - இரு எவர்சில்வர் கோப்பை களைக் கழுவி எடுத்த ஆச்சி, ஒரு தட்டில் மாமாவுக்கும் மற்றத்தட்டில் எனக்கும் பிட்டையும் முட்டைப் பொரியலை யும் பரிமாறினாள். நாங்கள் சம்பலும் சேர்த்துக் கொண்டோம்.

உணவின் ருசியில் மெய்மறந்த நான் "ஆச்சி பிட்டும் முட்டையும் சம்பலும் அச்சாவா இருக்கு" என்றேன்.

ஓரக்கண் பார்வையில் கண்களைச் சுருக்கியபடி இருந்த என்னை வாரி அணைத்துக் கொண்ட ஆச்சி கூறினாள்:

"மிச்சம் விடாமல் சாப்பிடு...!"

"இல்ல ரைகருக்கும் கொஞ்சம் வேணும்..."

"நீ சாப்பிடு ராசா... மாமா போடுவார்"

சாப்பாடு முடிந்து எழுந்த குஞ்சி மாமா என்னைப் பார்த்துக் கூறினார்:

"நீ நாலாம் வகுப்பை இஞ்சபடி அஞ்சாம் வகுப்புக்கு பட்டணம் போகலாம். இந்துவில சேரலாம். நான் ஏற்பாடு செய்யிறன்"

"என்ன கல்லூரி விடுதியில் இருந்தா படிக் கிறது...?" எதுவும் பிடிபடாதவனாய் அவரைப் பார்த்துக் கேட்டேன்.

"இல்ல என்னட்டை ஒரு பிளானிருக்கடா!"

"மாமாவின் பிளான் எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். என்ரை குட்டிவரதாவைப் பார்க்கலாம் பேசலாம் பக்கத்தில் இருக்கலாம்... இருந்து ரசிக்கலாம்..."

நினைவுகள் எனது உதடுகளில் கனிவு கொள்ள, சிரிப்பாய் உதிர்ந்தது.

அதனைக் கவனித்த மாமா: "என்ன என்னடா சிரிப்பு?" என்று கேட்டார்.

"இல்ல... ஒண்டுமில்லை..." என்று கூறியபடி, கூச்சப்பட்டவனாய் நான் வீட்டைப் பார்த்து நழுவினேன்.

அம்மாவிடம் கூறுவதற்கு எனக்கு அப்பொழுது ஒரு செய்தி இருந்தது.

10

ஓராண்டு காலம் ஏதோ அவசரப்பட்டது மாதிரிக் கழிந்தது. குஞ்சி மாமா கூறியது போல ஐந்தாம் வகுப்பில் படிப்பதற்கு எனக்கு இந்துவில் இடம் எடுத்துத் தந்தார். கல்லூரி தைப்பொங்கலுக்கு அடுத்து, இரண்டு நாள் தள்ளி ஆரம்பமாக இருந்தது.

ஐயா பெரியக்காவையும் என்னையும் கல்லூரி ஆரம்பிப்பதற்கு முதல் நாள், பெரியமாமா வீட்டில் கொண்டு போய் விட்டார். முன்வீட்டில் தான் வரதா இருந்தாள். ஆனால் அவளேனோ என்னைப் பார்ப்பதற்கு அன்று வரவில்லை. மாலை இருட்டுக் காரணமாக இருந்திருக்கும்!

பெரியமாமா குடும்பம் போன வருஷம் பட்டணப் பக்கம் வந்துவிட்டது. எல்லாமே குஞ்சி மாமாவின்ஏற்பாட்டாலும் ஆலோசனையாலும் தான் நடந்தது. பிள்ளைகள் எல்லாரும் படிக்க வேணுமென்பது அவரது கனவு. வேதமந்திரம். அவரது சொல்லை மதித்து வீடு வாசல், சொத்து சுகம் அனைத்தையும் விட்டு விட்டு மாமா குடும்பம் பட்டணம் வந்து விட்டது.

மாமா குடும்பத்தில் பெரியமச்சாள் பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியை. பக்கத்தில் உள்ள இந்து மகளிர் கல்லூரியில் அவள் கற்பித்தாள். மாமாவுக்கு ஏழு பிள்ளைகள். ஆறு பெட்டையள், ஒரு பெடியன். பெட்டையளது பெயர் வதி, நிதி என்று ஏதேதோ வரும். பெடியன் சிவசண்முகன். எல்லாப் பிள்ளைகளும் படித்தார்கள். சிவசண்முகன் இந்துவில் எஸ்.எஸ்.ஸி. வகுப்பில் படித் தான். பெண்கள் மகளிர் கல்லூரியில் படித்தார்கள். எனது வயதை ஒத்த ரதி ஐந்தாம் வகுப்பில் படிக்க இருந்தாள்.

முதல் நாளான படியால் சிவசண்முகனே என்னைக் கல்லூரிக்கு அழைத்துப் போவதாக கூறியிருந்தான்.

நான் பாடசாலைக்குச் செல்வதற்கு ஆயத்தமாக, எனது புத்தகங்களையும் பயிற்சிக் கொப்பிகளையும் ஸ்கூல் பாக்கில் எடுத்து வைத்துக் கொண்டிருந்த பொழுது வரதா வந்தாள்.

அவள் குளிரோடையில் மலர்ந்த மலர் மாதிரிப் பளிச்சென்றிருந்தாள். முதல்முதலாக அவளைக் கன்ன உச்சியில் பார்த்தேன். அழகாக வாரப்பட்ட அவளது கூந்தல் இரட்டைப் பின்னல்களாகக் கழுத்தின் முன் பின்னாகப் புரண்டன.

"கன்ன உச்சில் இவள் தேவதை மாதிரி இருக்கிறாளே...!" என நினைத்துக் கொண்டேன்.

இத்தனை நாளுமில்லாத ஒரு பார்வை அவளில் பிரவகித்தது.

என்ன என்பது போலக் கண்களில் தேக்கிய கேள்வியுடன் அவளைப் பார்த்தேன்.

"பள்ளிக்கூடம் போக முந்தி வயிரவ கோயிலுக் குப் போவமடா... வா...! கும்பிடுவம். கற்பூரமெல்லாம் வாங்கி வைச்சிருக்கிறன்..."

அவள் கதைப்பதை அன்பு சொரியக் கேட்டுக் கொண்டிருந்த என்னை கைகளைப் பற்றி இழுத்தபடி "பெரியம்மா செந்தில் இப்ப வருவான், கோயிலுக்குப் போயிட்டு..." என்று வீட்டினுள் கேட்கிற மாதிரிச் சத்தம் வைத்தாள்.

தனது வீட்டின் பின் பக்க வளவால் நுழைந்து, மேற்குச் சாய்வில் ஓடினாள். நானும் அவளுடன் இழுபட்டேன்.

இழுபட்டாலும் மண் வீடு கல்வீடாக மாறி இருப்பதைக் கவனிக்கத் தவறவில்லை.

வீதியைக்கடந்த இருவரும் கோயிலை அடைந்தோம்.

வரதா கற்பூரத்தைக் கொழுத்தி, கரம் குவித்து வணங்கினாள். நானும் வணங்கினேன். இருவரும் கற்பூர தீபத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டோம்.

சம்புடத்திலிருந்து விபூதியை எடுத்தவள் - தானும் பூசிக் கொண்டு எனக்கும் பூசி விட்டாள்.

"சாமியீற்றை என்ன கேட்டுக் கும்பிட்டனி...!" இது நான்.

"நீ நல்லாப் படிக்க வேணும்... நானும் தான்... அது தான்..."

"நீ கெட்டிக்காரி உனக்குப் படிப்பு நல்லா வரும்...!"

"கள்ளா... உனக்கு வராதா...?" கேட்டவள் களுக்கெனச் சிரித்தாள்.

அவளது கன்னத்தில் குழி விழுகிறதா? என்று பார்த்தேன்.

குழி விழுந்தது!

அதைத் தொடுவதற்குக் கையை நீட்டினேன். அதைத் தட்டிவிட்ட அவள், "நேரம் போயிடும் போ... போய் வெளிக்கிடு, சானா அண்ணரோட பள்ளிக்குப் போக வேணும்..."

"ம்..."

படலையைத் திறந்து, வரதாவின் வீட்டினுள் நுழைந்தபோது பெரியக்கா வெள்ளைவெளேரெண்ட யூனிபோர்முடன், சிவப்புக் கறுப்பு ரை கட்டினவளாய் - பின் விறாந்தையில் - முத்துசாமியின் வானுக்காகக் காத்திருப்பது தெரிந்தது. சுண்டிக்குளியில் பயிலும் அக்கா சின்னமாமா வீட்டுக்கு வந்து தான் வான் ஏறுவாள்.

அக்கா என்னையும் வரதாவையும் பார்த்துச் சிரித்தாள். வரதா அக்காவுக்கு விபூதி பிரசாதம் தந்தாள்.

அப்பொழுது அங்கு வந்த சின்னமாமி "அட இவரும் இண்டைக்கு பள்ளிக்கூடம் போறாரெல்லோ..." என்று என்னை வாரி அணைத்துக் கொண்டார். கன்னத்தில் ஓர் உம்மாவும் கொடுத்தார்.

"மாமிக்கு என்னிலை ஏன் இவ்வளவு பட்சம். அம்மாவை அவருக்குப் பிடிக்கும். நிரம்பப் பிடிக்கும்... அதனால் என்னிலுமா...?"

நினைவுகளுடன் பின்வளவுப் பொட்டால் புகுந்து, பெரியமாமி வீடு சென்ற நான், நொடியில் பாடசாலைச் சீருடையான காற்சட்டையையும் சேர்ட்டையும் மாட்டிக் கொண்டேன். பெரிய மச்சாள் எனது தலையை வாரி விட்டாள்.

நான் வெளிக்கிட்டு விட்டதை சானா அண்ணருக்குக் குரல் கொடுத்து அறிவித்தேன்.

அவன், தனது சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொண்டு, என்னைச் சைக்கிள் பாரில் ஏற்றிக் கொண்டான்.

சைக்கிள் லேசாக மிதந்தது. மேற்கு நொக்கிச் சென்ற நாம், ரயில் கடவையைக் கடந்ததும் தெற்குப் பக்கமாக நகர்ந்து அரசடி வீதியில் ஏறினோம்.

பாடசாலை, ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற நினைப்பு மட்டுமே என்னை அப்பொழுது முழுமையாக ஆக்கிரமித்திருந்தது. அந்த நினைவுகளை அசை போட்ட படி நான் சான அண்ணருடன் சென்றேன்.

"படிக்கவேணும், படித்து ஆளாகவேணும்" என்ற நினைப்பே எனது மனசு முழுமையும் நிரம்பித் தளும்பியது!

தொடரும்

# குறுக்கும் நெடுக்குமாய்

இ.ஜீவகாருண்யன்

மனிதனுக்கு கிடைத்துள்ள இவ் உலக வாழ்க்கை முக்கிய மானது. முற்பிறப்பு, பிற் பிறப்பு பற்றிப் பேசப் பட்டாலும் மையமாக முக்கியம் பெறுவது இவ் உலக வாழ்க்கை தான். முற்பிறப்பு, பிற்பிறப்பு என்பன இப்போதைய வாழ்க்கைக்கு அர்த்தம் கூட்டுவதோடு பொருள் வாழ்க்கையை மீறிய வித்தியாசமான வாழ்க்கை இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்தும். இந்த உலக வாழ்க்கையை நாம் அலட்சியத்தால் வீணாக்கி விடக் கூடாது. இந்த வாழ்க்கை நான்கு தளங்களைக் கொண்டது.

1.பௌதீகத் தளம் - உடல் தளம்(Physical Phase)

2. உயிருணர்வுத் தளம் (vital phase)

3.மனத் தளம்(mental phase)

4. ஆத்ம தளம் (spritual phase)

உடல் ஆரோக்கியமாக இருக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவையெல்லாம் செய்யப்பட வேண்டும். சித்தர்கள் போலவோ வாழ்க்கையை மாயை என்று கருதும் கடுந்துறவிகள் போலவோ உடலை உதாசீனம் செய்யக் கூடாது. "காயமே கோயில்"

அடுத்தது உயிர் உணர்வுத் தளம். (vital phase) அதனை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. கீழ் உயிருணர்வுகள் lower vital

2. உயர் உயிருணர்வுகள் higher vital

உற்சாகம், உத்வேகம், துடிதுடிப்பு சுறு சுறுப்பு தீவிர இயக்கம் போன்றன இங்கிருந்துதான் உற்பத்தியா கின்றன. இப்போது இத்தளம் எம்மைப் பொறுத்தவரை மிருக உணர்வுகளாலேயே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அதாவது கீழ் உணர்வுகளால் நிரப்பப்பட்டுள்ளன. கோபம், வெறுப்பு, பகைமை, ஆணவம் போன்றன சில உதாரணங்கள்.

மூன்றாவது மனத்தளம் (mental phase) இது ஒரு சிக்கலான தளம். இதுவும் பெரும்பாலும் மிருக உணர்வுகளின் பிடியிலேயே அகப்பட்டுக் கிடக்கிறது. என்றாலும் ஏற்கனவே காலா காலமாக நிறுவப்பட்ட உயர் விழுமியங்களின் செல்வாக்கிற்கு உள்ளாகி ஆத்மதளத்தை நோக்கி முன்னேற முயல்கிறது. சமய ஞானிகளும், பண்டைய இலக்கியங்களும் - மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை, வேதம், உபநிடதங்கள் உள்ளிறக்கிய விழுமியங்களும், இலட்சியங்களும் மனிதனை மிருகமாக விடாமல் மேல் கொண்டு செல்ல முயல்கின்றன. புத்தர் தொடக்கம் இன்றைய ஸ்ரீ அரவிந்தர் வரை உயர்ந்த விழுமியங்களை இவ் உலகில் நிறுவ முனைந்தவர்களே. நவீன சிந்தனைகளான சமத்துவம், சகோரத்துவம், பொதுவுடமை போன்றனவும் மனித வாழ்வை உன்னதமாக்க முயல்கின்ற புதிய தரிசனங்கள் எனினும் மிருக உணர்வுகளிலிருந்தும் கீழ் மனத்திலிருந்தும் மனிதனால் இலகுவில் விடுபட முடிவதில்லை. பகுத்தறிவு யுகத்திலும் தொடரும் சுரண்டலும் ஆக்கிரமிப்பும் இன சுத்தீகரிப்பும் போர்களும் போதுமான சான்றுகள்.

இதனை மாற்றியமைக்க உண்மையாக உழைப்பவர்கள் மிகச்சிலரே. கைவிரல்விட்டு எண்ணக் கூடிய சிலரே. அவர்கள் மிகச்சிலராக இருப்பதால் பொதுப்போக்கை மறுத்து உண்மையாகவே போராடுவ தால் அந்நியர் ஆகிவிடுகிறார்கள். strangers அல்லது outsiders மு.த.வின் வார்த்தைகளில் சொல்வதானால் பிறத்தியான்கள் அந்நியர்கள் பல மட்டங்களில் உள்ளனர். ஏற்கனவே நான் குறிப்பிட்ட ஆத்மீகர்கள் படைப்பாளிகள், சிந்தனையாளர்களில் பலர் அந்நியரே சமூகத்தின் பொதுப் போக்கை மறுதலித்து, எதிர்த்து உண்மையையும் தர்மத்தை யும் நியாயத்தையும் நிலை நாட்ட முனைபவர்கள் அந்நிய ராகவே இருக்கிறார்கள். அல்லது ஆக்கப்படுகின்றனர். பின்னர் சமூகத்தால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது ஆதர்சர்கள் ஆகின்றனர்.

எழுத்தாளர்களுக்கு எளிமையாக விளங்கக்கூடிய ஒரு எளிமையாக உதாரணத்தைத் தந்து இக் கட்டுரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டில் பன்றிகள் குட்டிகள் போடுவது போல பல மலினமான புத்தகங்களும் சஞ்சிகைகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் விற்பனையோ அமோகம்; லாபமும் அமோகம். அந்த பெரும் போக்கை எதிர்த்து போரட்டத்தைத் தொடக்கி வைத்தவர் சி.சு. செல்லப்பா. அவரது "எழுத்து" சஞ்சிகை மூலமாக அவரும் அவரைத் தொடர்ந்த கசடதபற பிரக்ஞை இலக்கியவட்டம் சிறுசஞ்சிகையாளர்களும் அவை உயிர்தரிக்க (survival) எவ்வளவு போராடினர் என்பது நாம் அறிந்தது. இலங்கையிலும் கலைச் செல்வி மல்லிகை மு.த.வின் உள்ளொளி, சத்தியம், பூரணி, அலை, மூன்றாவது மனிதன் போன்றவையும் இந்தப் போராட்டத்தை நடத்தின. இப்போது ஜீவநதி, ஞானம், கலைமுகம், மகுடம் போன்றனவும் தம் உயிர் தரித்தற்கான போரட்டத்தைத் தொடர்கின்றன. பூரணி காலத்தில் N.K மகாலிங்கமும் அலை காலத்தில் யேசுராசா பட்ட கஷ்டங்களையும் நான் அறிவேன். யேசுராசா மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். வறுமையில் உழன்று கொண்டே அலையின் 35 இதழ் களையும் கலைத்துவமாக அர்ப்பணிப்போடு எப்படி வெளிக்கொண்டு வந்தார் என்பது நினைக்கவே பிரமிப்பாக இருக்கிறது. அவரது கலை இலக்கிய செயற்பாடுகளுக்காக வும் அலை முயற்சிகளுக்காகவும் அவரது பெயர் நவீன ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பெறும். தங்கள் படைப்புகளையே வெளிக் கொண்டு வர ஆலாய்ப் பறக்கும் ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய உலகில் கலைத்து வமான படைப்புகளை - யாருடையதாக இருந்தாலும் - இனங்கண்டு தன் சொந்தப்பொறுப்பிலோ பத்மநாப ஐயருடன் உதவியுடனோ வெளிக் கொண்டு வர முயலும் அவர் தனித்துவமானவராகவே இருக்கிறார். பாவம்! காய்ந்த மரம் கல்லெறிபடும்.

பத்மநாப ஐயர் ஒருபோது லண்டனில் இருந்து என்னோடு தொடர்பு கொண்டபோது "உங்களைப் போலல்ல; எனக்குக் கடன்கள் டொலர்களில் உள்ளன; என ஒருவகை எள்ளல் தொனியோடு தன் நிலைமையை வெளிப் படுத்தினார். அவர் குறிப்பிட்டவை அந்தக் கடன்கள் அவர் தனது சொந்தத் தேவைகளுக்காக பட்டவை அல்ல அவர் பட்டது ஈழத்துகலை, இலக்கிய நூல்களை வெளிக் கொண்டு வருவதற்காக தன்னை முழுமையாக அர்ப் பணித்து இயங்குகின்ற இன்னொருவரைக் காண முடியு மென்றுதோன்றவில்லை. அவருக்கும்கல்லெறிகள் விழுந்தன.

கே.எஸ்.சிவகுமாரனின்

**மனத்திரையில் - 6**

# 40 ஆவது ஒழுங்கை



கொழும்பில் நாங்கள் *1953* முதல் வெள்ள வத்தை *40* ஆவது ஒழுங்கையில் குடியிருந்தோம். இதற்கிடையில் எனது தந்தையாருக்கு கொழும்பு கச்சேரியிலிருந்து புத்தளம் கச்சேரிக்கு மேலதிக நிர்வாக உத்தியோகத்தர் ஆகப் பதவி உயர்வு கிடைத்தது. அவர் புத்தளத்திலும், நானும், எனது இரு சகோதரர்களும், அம்மாவும் கொழும்பிலும் வசித்து வந்தோம். ஐயா ஒவ்வொரு மாதமும் கொழும்பு வந்து எங்களைப் பார்த்துவிட்டும், ஆவன செய்துவிட்டும் திரும்புவார். HSC வகுப்பில் எனக்கு சென்.ஜோசப் கல்லூரியில் இடம் கிடைத்ததையிட்டு சந்தோஷப் பட்டார். ஆயினும், நான் ஒரு அரசாங்க அதிபராகவோ, பல்கலைக்கழகப் பேராசிரியராகவோ வரவேண்டும் என்ற அவரது கனாவை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. அது துக்கம்.

வெள்ளவத்தை *40* ஆவது ஒழுங்கையில் உள்ள *24* ஆம் இலக்க வீட்டில் நாங்கள் வாடகைக்கு இருந்தோம். அந்தத் தெருவில் கிறாப்பர் கந்தசாமி அவர்களின் குடும்பத்தினர் வசித்து வந்தனர். அவர்கள் பின்னர், தமது வீட்டை விற்று விட்டு யாழ்ப்பாணம் போக விரும்பினர். எனது தந்தையார் அவருடன் கலந்தாலோசித்து அத்தெருவிலிருந்த *15* ஆம் இலக்க வீட்டை அவரிடமிருந்து வாங்கினார்.

நாங்கள் அந்த வீட்டில் குடிபுகுந்தோம். அந்த வீட்டில் *1960* முதல் *1966* வரை நான் வசித்து வந்தேன். அதன் பின்பு *1966* ஆம் ஆண்டில் எனக்குத் திருமணம் ஆகிய பின்னர், ஹாவ்லொக் வீதியிலுள்ள முருகன் பிளேசில், *24* ஆம் இலக்க வீட்டில் வசித்து வருகிறேன்.

பல்கலைக்கழகத்தில் புக முடியாததால், இனி என்ன செய்யப் போகிறோம் என்று நான் திகைத்து நின்றேன். இதற்கிடையில் எனது கட்டுரைகள் Junior Times, சுதந்திரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கின. எனவே இதழியல் பற்றிய ஒரு நெறியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவா என்னில் எழுந்தது.

எனவே வெள்ளவத்தையிலிருந்த Polytechnic என்ற நிறுவனத்தில் அன்ட்ரியு டீ சில்வா என்ற எழுத்தாளர் இதழியல் தொடர்பான வாராந்த வகுப்புகளை நடத்தி வந்தார். நானும் விண்ணப்பித்து ஆங்கில மொழியில் நடத்தப்பட்ட வகுப்புகளில் சேர்ந்து பயன் பெற்றேன். Diploma in Journalism என்ற சான்றிதழும் பெற்றேன். அதே கல்லூரியில் பின்னர் மறைந்த எழுத்தாளர் மொறீன் செனிவரத்ன, கை பொகையன் ஆகியோர் நடத்திய Diploma In Creative Writing என்ற வகுப்பில் சேர்ந்து சான்றிதழும் அறிவும், அனுபவமும் பெற்றேன்.

இதற்கிடையில், மறைந்த நவாலியூர் சோ. நடராஜா, சில்லையூர் செல்வராசன், எஸ்.எம். கமால்தீன் போன்றவர்கள் பங்குபற்றிய சங்கம் ஒன்றில் சேரும்படி எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதனை யார் அமைத்தார்கள் என்று தெரியவில்லை. ஏனெனில், அவர்கள் நடத்திய முதற்கூட்டத்திற்குப் போனபோது, சில்லையூர் செல்வராசன் முகமலர்ச்சியுடன் என்னை வரவேற்றார். நான் வீரகேசரியில் மாணவர் பக்கத்தில் (டேவிட் அதன் பொறுப்பாசிரியர்) எழுதிய திறனாய்வு பற்றிய கட்டுரையைப் புகழ்ந்து பேசியதனால்,அவர் தான் என்னை அழைத்திருந்தார், என்று ஊகித்தேன்.

சோ. நடராஜா அவர்கள் தலைமை வகித்த அக்கூட்டத்தில், அவர் எனது கல்வி பற்றி வினவினார். நான் கல்வியில் தோல்வி அடைந்ததை அறிந்த அந்தப் பெருங்கவிஞர் சில ஆலோசனைகளை வழங்கினார்.

நான் பட்டதாரியாக வரவேண்டும் என்றும், லண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைக்குத் தோற்றும் படியும் கேட்டுக் கொண்டார். அவரும் விரிவுரையாளராக இருந்து வந்த "நாவலர் ஹோலில்" நடக்கும் வகுப்புக்களுக்கு வரும்படியும் கேட்டுக் கொண்டார்.

இலண்டன் பரீட்சைகள் ஆங்கில மொழி மூலமே நடைபெறும். நான் தமிழ் பிரிட்டிஷ் யாப்பு, சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை படித்தல் வேண்டும். சமஸ்கிருதம் கட்டாயம், வழக்கொழிந்த மொழியில் தேர்ச்சியில் வெற்றி பெற்றுத்தான், அடுத்த உயர்வுக்கான படிப்பை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் சித்தியடைந்த பாடங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். நான் தமிழிலும், பிரிட்டிஸ் யாப்பிலும் சித்தியடைந்தாலும், வடமொழியில் சித்தியடையவில்லை. எனவே பரீட்சைக்கு தொடர விரும்பவில்லை.

வெள்ளவத்தை *40* ஆவது ஒழுங்கையில் (ராஜசிங்க வீதிக்கும், குரே மாவத்தைக்கும் இடையில் உள்ள ஒரு சிறு ஒழுங்கை) *15* ஆம் இலக்க வீட்டில் நாம் வசித்தபொழுது அயலவராக திரு. மாணிக்கவாசகர் அவர்கள் இருந்தார். இவர் தேவார, திருவாசகங்களைப் பாடுவார். சமய அறிவு அவரிடம் இருந்தது.

அதே தெருவில், Saturday Review ஆசிரியர் சிவநாயகமும், வசித்து வந்தார். அவருடன் அந்நாட்களில் பழகவில்லை. பின்னர் தான் அவரின் அறிமுகம் கிடைத்தது.

எங்கள் ஒழுங்கைக்கு அடுத்தடுத்த ஒழுங்கையில் *42* ஆம் இலக்கவீதியில் மறைந்த க.கைலாசபதி அவர்கள் வசித்து வந்தார்.

அடுத்த இதழில் பகிர்வேன்.

■ ஜெ. சற்குருநாதன்




நூல்: நானும் என் தேவதையும்
ஆசிரியர் : இதயராசன்
வெளியீடு: ஜீவநதி
விலை: 200/-

# இதயராசனின், "நானும் என் தேவதையும்" சமூக பிரக்ஞையின் இன்னொரு பரிணாமம் கவிதைகள் பற்றிய வாசிப்பு

இதயராசன் அவர்கள் ஆசிரியராக, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக, கல்வி அமைச்சில் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றவகையை விட இவரது சமூக ஊடாட்டம் வலிமையானது. இலங்கை முற்போக்கு அரசியல் இலக்கியம் சார்ந்த சமூக மாற்ற சிந்தனை நடைமுறை அனுபவங்களுடனான அனுபவப்பயணம் அவரது படைப்புலக நீட்சியினை கனதியாக்கியது எனலாம்.

"முரண்பாடுகள்" என்ற சிறுகதை தொகுதி, "மீறல்கள்" என்ற கவிதை தொகுதி என இரண்டு படைப்புக்களும் சமூக விஞ்ஞான கலைத்துவப் பார்வையுடனான படைப்பாளுமையினை வெளிக் காட்டியது. அதன் தொடர்ச்சியான இன்னொரு சமூக பரிணாமத்தின் " நானும் எனது தேவதையும் " கவிதைத் தொகுதி வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்நூலின் அணிந்துரையில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"இதயராசன் சமுதாய நோக்கினை முன்னிறுத்தி பயணிக்கும் ஓர் எழுத்தாளன். மாக்ஸிய லெனிய சித்தாந்த வேட்கையுடனான சமுதாய பார்வை இவருடையது. அப்போதைய சீனச் சார்பான கொம்யூனிசக் கருத்துக்களால் வயப்பட்டவர்களில் இவரும் ஒருவர். சமூகத்தில் நிலவி வரும் ஏற்றத் தாழ்வுகளுக்கான காரணங்களை நுணுக ஆராய்ந்து படைப்பாக்க வெளியிலும், பொது வெளிகளிலும் கருத்தாடி வருபவர் எனக் கூறப்பட்டிருந்தாலும் சமூக இயக்க செயற்பாட்டுத் தளத்தில் வீரியமாக இயங்கிய நிலைப்பாட்டின் ஊடாக அவரது படைப்பாற்றல் தளம் விரிந்துக் கொண்டது. அந்த வகையில் "நானும் என் தேவதையும்" என்ற கவிதைத் தொகுதியும் பார்வைக்குரியன, பதிவுக்குரியன."

தீவிர தமிழ் அரசியல் நிலைப்பாட்டு தளம் ஒரு புறம், தமிழ் சமூக அமைப்பின் நிலமானிய எச்சங்கள் ஒருபுறம் இரண்டையும் தாண்டிய வர்க்க பார்வையுடன் புரிதல் செயற்பாடுகள் மற்றொரு பரிணாமம். இதற்குள் ஊடாடி பார்வை சார்ந்து அதற்குரிய அழகியலுடன் தன் கவிதைகளை முன் நகர்த்துகின்றார். இ.முருகையன், சி.சிவசேகரம், பசுபதி, சுபத்திரன் போன்ற முற்போக்கு கவிஞர்களின் ஆளுமையின் நீட்சியாக இதயராசன் வந்தடைகின்றார்.

எமது வேரின் நுண்துளைகளும்
கிளையின் இணைப்புக்களும்
இலைகளின் நரம்புகளும் - எம்மை
உயிர்ப்பூடிச் செழிப்பூட்ட.
பயனுறு வளமாய் நின்று
இயற்கையின் இயங்குறு நிலைக்களனாய்
பசுஞ்சோலையாய் மிளிர்கின்றோம்

வௌவாலும் வல்லூறும்
நரியும் கரடியும்
பகலும் இரவுமாய்
பகிரங்கமாயும் பரகசியமாயும்
பயன் பெற்றுப் போகின்றன எம்
பசும் பட்டைகளையும்கூட
மரைக் கூட்டம் காந்திப் போகின்றன
போதாக்குறைக்கு மரங்கொத்திகள்
தம்பங்கிற்குக் கொத்தி பார்க்கின்றன

மக்கள் இயற்கையுடன் வாழ்ந்த காலத்தில் சிறப்பாக வாழ்ந்ததையும், சாதியம், பெண்ணடிமை, நிலமானியம், பேரினவாத நிகழ்ச்சி நிரல்கள் போன்றவற்றால் அள்ளுண்டு போயுள்ளதை பதிவு செய்துள்ளார். இந்த அவல மீட்சிக்கான நம்பிக்கை கீற்றுக்களை கூடவே விதைத்து செல்வது கவனிக்கத்தக்கது.

"நானும் எனது தேவதையும்" என்ற கவிதை வரிகளும் காத்திரமானவையாக உள்ளன. வெளிப்படையாகப் பார்க்கும் போது இக் கவிதை காதல் கவிதையாகத் தோன்றலாம். ஆனால் இக்கவிதை அறிவின் ஆழத்தையும் அகலத்தையும் வேண்டி நிற்பதாக அமைந்துள்ளது.

அறிவினை தவமாக புனிதமாக போற்றுகின்ற நேரத்தில் அறிவின் எல்லைகளை வரிவாக்கும் ஆளும் வர்க்கம் அதனை எவ்வாறு பதிவு செய்துகொள்கின்றது என்பதற்கான விளக்கத்தை முன்வைக்கின்றார்.

உன்னைச் சிறையிலடைக்க
நீயென்ன சடத்துவமா?
அவர்கள் அறியாமையை
இருட்டறையில் பூட்டிவைத்து
மணியடித்து விளக்கும் காட்டுகிறார்
ஒளிவருமா?! அருள்வருமா?!

ஓ அறிவின் தேவதையே
நீ இருட்டறையில் இல்லை
உன்னை என்னுள்ளே தேடுகிறேன்

உன்னைத் தேடுவதற்கு எந்தப்
பூசாரிகளும் தேவையில்லை

என்னை நானே
அக்கினி குண்டம் ஆக்கிக்கொண்டேன்
என்தேடலுக்கு எதிர்நிற்பவை அதில்
ஆகுதியாகின்றன

உலகமயம், தாராளமயம் காரணமாக உழைப்பினை அறிவிலிருந்து பிரித்தெடுத்து பின்நவீனத்துவ வாசிப்பாக அறிவு பாவிக்கப்படுகின்றது. தனது இருப்பு சார்ந்த, தனது சுய தேடல் சார்ந்த அறிவின் உழைப்புடன் இணைக்கக்கூடிய வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதை உணர்த்துவது சிறப்பாக அமைந்துள்ளது.

இதயராசனின் கவிதைகளில் எளிமையான குறியீடுகள் சிறப்பாக பயன்படுத்தப்படும். குறியீடுகளை கடினமாக்காது தனது வேர்களை தேடும் மக்களின் பண்பாட்டு அடையாளங்களை முன்னிறுத்தி கவிதைகளைப் படைத்துள்ளார்.

தொலைவிலுள்ள வனாந்தரத்தில்
சுதந்திரமாகச் சுற்றித்திரிகின்ற
எம்மினத்தவர்களை யாரும்
எருமைகள் என்றழைப்பதில்லை

அவைகளின் கூரிய கொம்புகளும்
கட்டுமஷ்த்தான உடல்களும்
இரும்புச்சப்பாத்துப் போன்ற கால்களும்
முள்ளையும் மழுங்கடிக்கும் தோல்களும்
ஹேர்க்குலிஸ்களாய்த் தெரிகின்றன

யானையின் பலம்
எறும்பின் சுறுசுறுப்பு
குதிரையின் வேகம்
அத்தனையும் வாய்த்தலும் - வெறும்
எருமைகளாய்ச் சேற்றில் கிடக்கின்றோம்
எங்கள் விம்பங்கள் நரிகளிற் பிரதிபலித்து
அவைகளும் சிம்மமாய்க் கர்ச்சிக்கின்றன

நாம் மட்டும் சேற்றினை உழுதபடி
சேற்றினில் சோம்பிக் கிடக்கின்றோம்
எமது முந்தைய
வனாந்தர வாழ்வுபற்றிய
வெளிச்சங்கள் தெரியும் வரை
நாங்கள் எருமைகள்தான்

எருமைகள் என்ற தலைப்பில் அமைந்த இக்கவிதை. மண்சார்ந்த பண்பாட்டு அடையாளத்தை பிரதிபலிக்கின்றது. எங்களுக்கென வீரம் இருந்தது, நிலம் இருந்தது, ஒற்றுமை இருந்தது, கூடி வாழும் சிந்தனை நடைமுறையில் இருந்தது. ஆனால் அதை எல்லாம் மறந்து சுமைகளைச் சுமந்து, கேள்வி கேட்காமல், எங்கள் கோபங்களை அடக்கி சமரச வாழ்வுக்கு அடிமையாக்கப்பட்டோம். புதிய பண்பாட்டுக்கான தேடல்களின் பழைய முற்போக்கான சமூகங்களிலிருந்து தேடிக் கொள்வதை மறுதலிக்கின்றோம்.

எங்கள் இருப்புக்களை கேள்விக்குறிகளாக மாற்றிக் கொள்கின்றோம். எங்கள் வாழ்வு பற்றிய புரிதல் தெரியாமலேயே அனைத்தையும் இழந்து வாழும் வாழ்கையினை பதிவு செய்துள்ளார்.

"கிளிகள் பற்றிய எனது பார்வை" என்ற கவிதை வரிகள் புதிய அர்த்தங்களை கற்பிதம் செய்வதாக அமைந்துள்ளன. உலகமயம், தாராளமயம் காரணமாக சுய உற்பத்தி, சுயபண்பாடுகள் களவாடப்பட்ட மக்கள் கூட்டங்களாக நாம் பயணிக்கின்றோம்

பயறுத் தோட்டத்தில் பறந்துவந்து
கூட்டம் கூட்டமாய் அமர்ந்து
கொத்திக் குதறிப் போட்டன
காவலை உச்சிக் கபடியாடின
தகரம் கட்டி, மணி கிலுக்கித்
தோரணம் கட்டிப் பண்ணியதெல்லாம்
வீணாய்ப் போயின

கிளிகள் பற்றிய பதிவுகள்
கிழிந்தன பலநூறாய்
என் பார்வையில் - அவை
தொல்லை தருவனவாய் மாறின

நெற்பொத்தி விரித்து
பாற்பருவம் வாய்த்த பொழுது
பவளவாய் சிவக்கச் சிவக்கக்
கதிர் கொய்யும் இலாவகத்தை
என்னால் ரஷிக்க முடியவில்லை

என கிளிகளை எளிமையான குறியீடுகளாக்கி மக்களின் சுயவாழ்வு சிதறிக்கொண்டிருப்பதை உணர்ந்து வெளிப்படுத்தி நிற்கின்றது.

எமது தமிழ் பாரம்பரிய மரபில் ஆணாதிக்கம் பிற்போக்கான பண்பாட்டு நடத்தைகள் ஊறிப்போயுள்ள தமிழ் சமூகத்தின் சீரழிந்த முகங்களை புருஷலட்சணம் கவிதையில் வெளிக்காட்டுகின்றார்.

அவள் வீட்டைக் கட்டுகிறாள்
அவன் தாலியைக் கட்டுகிறாள்
அவள் பிள்ளையைப் பெறுகின்றாள்
அவன் தொந்தியை வளர்க்கின்றாள்
அவள் கழுதையாய்ச் சுமக்கிறாள்
அவன் குதிரையாய் கனைக்கின்றான்
அவள் பொறுமையைக் காக்கின்றாள்
அவன் பேதமையை வளர்க்கின்றான்
அவள் உறங்காமல் உழைக்கின்றாள்
அவன் உழைக்காமல் உறங்குகின்றான்
அவள் இருந்தும் இல்லாமல்
அவன் இல்லாமலும் இருப்பதாய்
எல்லாம் அவளதாய் இருந்தும்
சர்வமும் அவனதாய்! அவனதாய்!

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகலை தவறாகப் புரிந்து கொண்ட சமூக அமைப்பில் ஆணாதிக்கத்திற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. நிலமானிய சமூக எச்சங்கள் நவீன சமூகங்கள் தொடர்கதை அவலங்களை அருமையான வசன கவிதை வடிவில் படைத்துள்ளதை நோக்க முடிகின்றது.

முப்பது வருட யுத்தகாலத்தில் பல வீரத்தழும்புகளையும் ஆறாத ரணங்களையும் தந்துள்ளது. தமிழ்த் தேசியம், தமிழ் உணர்வு சார்ந்த வீரம்பேசி செயற்பட்டாலும் அறுவடை என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்குள் பயங்கரவாதம் என்ற பெயரில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டவேளை அதன் உண்மைத்தன்மையின் பட்டறிவினை இன்னும் விளங்காத தமிழ்தேசியம் வெறும் இனவாத சாயலுக்குள் அடக்கிக்கொண்டு, இன்று இரண்டாயிரம் பழைமையில் பெயரால் ஏற்பட்ட சுமைகளை சுமந்து கொண்டே தமிழ்த்தேசிய திசை

வழியில் பயணிக்கின்றோம். ஏனைய ஒடுக்கப்பட்ட இனங்களுடன் தனது தேசிய இனவிடுதலை போராட்டம் புரிதல் இருகாதவரை எமது கனவும் தாகமும் கற்பனையாகவே இருக்கமுடியும். எதிரியார்? நண்பர் யார்? என்பவற்றுக்கு அப்பால் அமெரிக்கா, இந்தியா விடுதலை பெற்றுத் தரும் என நம்பும், நமது தலைவர்களை நம்பிக் கொண்டிருக்கின்றோம்.

இத்தகைய தமிழ்த்தேசிய சூழல் சார் அரசியல் நிகழ்வுளை தனது பட்டறிவு சார்ந்த கவிதைகளால் செதுக்கியுள்ளார். இதயராசன் கருவில் கலைந்த கனவுகள், வன்னியின் வடு, செய்வினை ஆகிய தலைப்புகளும் விடுதலை போராட்டம் சார்ந்த விடயங்களை முன்வைத்திருந்தாலும் "இரட்சிப்பு" என்ற கவிதை இவற்றுள் முதன்மை பெறுகின்றது.

பன்றிகளுக்குப் பொறிவைத்தும்
காட்டு யானைகளுக்கும்
தீப்பந்தம் எறிந்தும்
எமது விளைநிலங்களில்
அறுவடைசெய்தோம்

துவக்கோடு வந்தவர்கள்
எமக்காகப் பரிதாபப்பட்டனர்

கால நகர்வில்
நாங்கள் துவக்குகளோடு
வனாந்தரங்களில்
வேட்டையாடுவதே வாழ்வாயிற்று

துவக்கோடு வந்தவர்கள்
எமது விளைநிலங்களில்
இறுவடை செய்கின்றார்கள்

இவ்வாறு தனது மனக்குமுறலை வெளிப் படுத்துகின்றார். இதயராசன் கவிதைகளில் இன்னொரு பரிணாமமாக காணப்படும், "தொன்மங்களையும் ஐதீகங்களையும் நவீன கருத்தாடலுக்குள் கொண்டு வருவதாகும்"

நவகாலனித்துவ
அடக்கு முறைகளின்
அதிகார மையத்தின்
அடையாளமாய்
சூரபத்மனும்
அவனது தம்பிகளும்
அடிமை விலங்கறுக்க
திரண்ட மக்களின்
மொத்த வடிவமாய்
சிவந்த சேவற் கொடியும்
வேலாயுதமும்.

என்ற பண்பாட்டுப் புரட்சி கவிதை கவனிக்கத் தக்கது. புராணங்களில் வரும் கதாபாத்திரங்களின் படிமமாய் முன்னிறுத்தி ஏகதிபத்திய கோர முகங் களை வெளிப்படுத்துகின்றார். இதனைப்போல் மாணிக்க வாசகர் எழுதியதாக கூறப்படும் திருவாசகத்தை புதிய வடிவ வார்ப்பில் கவியாக்கிமை இங்கு கோடிட்டு காட்ட வேண்டியுள்ளது. திருவாசகம் தமிழ் சைவ பண்பாட்டில் ஊறித்திழைத்த ஒன்று. தமிழ் உணர்வு சார்ந்த திருவாசகம், தமிழ் மக்களின் முக்கியமான பாடு பொருளாகத் திகழ்கின்றது. இதனை மாற்றி பின்வரு மாறு எழுதுகின்றார்.

தொல்லை மிகு வாழ்வின் தளை நீக்கி
அல்ல லறுத்தானந்த மாக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் பொதுவுடமைத் தத்துவமாம்
பெருவாசக மென்னும் தேன்

மறைந்திட மூளய இருளை
சிறப்புறு வர்க்கப் புரட்சியால் புரட்டிட
புறத்தே மார்க்ஸிஸ லெலினிஸத் தோடு
மலரெனப் பூத்திடும் தேசத்தின் ஞானமும் சேர்ந்திட
வலிதான சிந்தனை வீச்சோடு திறன்பெற வேண்டும்

அல்லற் சுரண்ட லறுப்பாரே ஓவென்று
சொல்லற் கிணையில்லா செம்பொருள் ஒளியில்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் செம்படையில் உள்ளார் செங்கொடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

புல்லாகிப் புழுவாகி ஆன்மிக பரிமாணத்தை எழுதிய மாணிக்கவாசகரின் சொல்லாட்சிகளில் மக்ஸிய விஞ்ஞான ஒளியில் எம்மைத் தர்சிக்க வைப்பது, புதிய சிந்தனைக் கருவூலமாக உள்ளது. ஏற்கனவே தொன்மை களை வைத்து இன்குலாப், அப்துல் ரஹ்மான், இலங்கையில் மல்லிகை சி.குமார், சுபத்திரன், பசுபதி, புதுவை ரத்தினதுரை போன்றவர்கள் படைத்திருந்தாலும் திருவாசகத்தினை முன்னிலைப்படுத்தி இதயராசன் எழுதியிருப்பது ஈழத்துக் கவிதை தலைப்புக்குள் உள்ள புதிய திசையினை காட்டி நிற்கின்றது எனலாம்.

இவ்வாறு இதயராச அவர்கள் தனது கவிதை களில் போலி, பொய்மைத் தனங்கள், சமூகமுரன்பாடு, பண்பாட்டு கோலங்கள் நிலமானிய சமூக அமைப்பு களை கூறுகின்ற அதேவேளை தமிழ் தேசிய நிலை யினை விமர்சன ரீதியான பதிவுகளை தந்துள்ளார். இக்கவிதை நூலின் அணிந்துரையில் சமூக பிரச்சினை களை புறநிலையில் நின்று எழுதியுள்ளார் என்ற நிலைப்பாடானது அவர் பட்டறிவின் வெளிப்பாடாக வெளிவந்துள்ளதை தகர்ப்பதாக அமைந்துள்ளது. இயக்கம் சார் செயற்பாடுகளில் நேரடியாகவும் ,மறைமுக மாகவும் ஈடுபட்ட அவர் அனுபவ நெருடல்களுக்கு உட்பட்டு இக் கவிதைக்குள் இருந்து சமூக பிரக்ஞை யின் பிரவாகமாக கவிதைகள் வெளிவந்துள்ளது.

சமூக வர்க்க செயற்பாட்டு நிலையில் இருந்து எழுதும் போது அனுபவங்கள் வந்தடையும். படைப்பும் செழுமையுறும். படைப்பினை தவிர மனிதனாக பார்க்கும் போது அது சமூகப் பார்வையில் இருந்து விலகி நிற்கும்

இதயராசன் கவிதைகளில் குறியீடுகளின் பயன்பாடுகள் கனதியாக உள்ளன. சில வேளைகளில் வேறுபட்ட அர்த்தங்கள் அதுவாக கூடும். கவிதை நிகழ்கையில் இன்னொரு பரிணாமமாகும். கவிதையில் அறிவியலானது மக்களுக்கும் அவர்களுக்குள் இருக்கும் அறிவினை திறந்து விடுவதாகும். சாதாரண மக்களும் கவிதைகளை புரிந்துகொள்ள வேண்டும். இவ்விடத் தில் இதயராசன் வேறுபட்டு நிற்கின்றார். சமூக இயங்கு தளத்தில் இன்னும் வர்க்கப் பார்வையினை விசாலமாக்கி இருக்கலாம் என்பது இவரது பலவீனமாக இருந்தாலும், ஒரு சமூக பிரக்ஞையின் இன்னொரு ஒளிக்கீற்றினை "நானும் எனது தேவதையும்" கவிதைத் தொகுதியில் தரிசிக்கலாம்.

# சிந்தனைக்குச் சில...

உடலில் இருந்து
உயிர் ஒருநாள்
ஓடிப்போம்
உன்னோடு இருந்தது
போதுமென்று
அதுசரி....
குழந்தைகளோடு
இதற்கென்ன கோபம்?
அளந்தது
அவ்வளவுதான்!

உடல் மண்ணோடு ஒன்றி
உரமாதல் போல
உயிர் என்னும் சுவாசம்
காற்றோடு கலந்து போகும்

இயற்கையால் உருவான
மனிதன், அந்த
இயற்கையோடு
இணைதல்தான் இறப்பு


இறப்பு என்பதை
இப்படியும் சொல்லலாம்
இணைந்திருந்த
உயிரும் உடலும்
இரண்டாக ஆவதுதான் அது

பிரிந்தவை அந்த
இயற்கையோடு மீண்டும்
பிரியமாய்ச் சேரும்
எப்படி?
காற்றோடு உயிர்
மண்ணோடு உடல்
மனிதவாழ்வின்
இரகசியம் இது!

சொர்க்கமும் நரகமும்
வெறும் சொற்கள்
பொருள் அதற்குப்
பூச்சியம்

விதி என்பது காலம்
அது நம்மோடு
விளையாடும் போது
மதி மயங்கிப்போகும்
இதை யார் மறுப்பர்?

– வாகரை வாணன்



## வாழ்வு ரசிக்கவில்லை

வயலாடி வந்த காற்று...
வாசலோரமாய் வீசவில்லை...
வறுமையின் வன்மங்கள்...
கண்டு கொண்டதாலோ...!

கடலாடி வந்த உப்புக்காற்று...
உறுதியாய் உணர்த்தவில்லை...
ஊமை மகவின்...
உண்மையின் உயிர்ப்புகளை...
அறிந்து கொண்டதாலோ...!!

மனதாடி வந்த புயற்காற்று...
துயரங்களைக் களையவில்லை
கண்ணீர்ப் பூக்களை...
தூவிய கயமைகளாலோ...
காதோரம் இசைக்கவில்லை!

கானமழை ஓசையினை...
வறுமையும் வெறுமைகளும்...
கயமைகளாலும் சூழ்ந்ததாலோ...
வாழ்வும் ரசிக்கவில்லை...
ரசித்திடவும் நேரமில்லை.

– சுசி தமிழ்நிலா




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.